# எனது திருமணப் பரிசு

32



C.N. அண்ணாதுரை

50/10

# எனது திருமணப் பரிசு

503
10

SIVAGNANA MUNIVAR LIBRARY
சிவஞானமுனிவர் நூல்நிலையம்
திருநெல்வேலி
TIRUNELVELI

C. N. அண்ணாத்துரை, M. A.

இராஜேந்திரன் நிலையம்
சென்னை—18.

முதற் பதிப்பு—1961.

விலை ரூ. 1–50

விநோதன் அச்சகம் சென்னை-1.

# இலக்கியமும் வாழ்க்கையும்

தகுதிமிக்க தலைவரவர்களே, டாக்டர் சிதம்பரநாதன் அவர்களே, நண்பர்களே! உங்கள் அனைவருக்கும் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த விழாவினை ஏற்பாடு செய்திருக்கும் மணவழகர் மன்றத்தாரின் இந்த பணி, பயன்பெறத்தக்க பல பணிகளிலே ஒன்றாகும். அவர்கள் ஆண்டுதோறும் நடத்துகின்ற விழாவிற்கு. இவர்கள் ஆற்றுகின்ற பணி உறுதுணையாக இருக்கும். இந்தப் பணியினைத் திறம்பட. செம்மையாகத் தோழர்கள் செய்திருக்கின்றனர்! மக்கள் பெரிதும் இலக்கியத்தை அறிந்துகொள்கின்ற வாய்ப்பை இந்த விழாவின்மூலம் அளித்திருக்கிறார்கள்! அதற்காக மணவழகர் மன்றத் தோழர்களை பெரிதும் பாராட்டுகிறேன்!

நம் தலைவர் அவர்கள் நீதிமன்றத்திலே நீதிபதியாக இருப்பவர். இவரை சந்திப்பது இதுதான் முதல்தடவையாகும்! சட்டக் கல்லூரியில் இவரோடு அளவளாவிய நேரத்தில் தமிழ் இலக்கியங்களைப் பற்றி மெத்த அறிந்து கொண்டிருக்கின்றார் என்பதனை தெரிந்து கொள்கின்ற

வாய்ப்பினை பெற்றேன்! பயங்கரமான, பெரிய கட்டிட மான நீதிமன்றத்தில் நுழைந்த பிறகு இந்தத் தமிழ் ஆர்வத்தை குறைத்துக் கொள்வார்களோ என்று ஐயப் பட்டேன்!

இன்று. நீதிபதி அவர்கள், நீதிமன்றத்தில் எழுப்பு கின்ற வினவைப்போல, சில வினக்களை எழுப்பி நான் பதில் சொல்லவேண்டுமென்று கேட்டிருக்கிறார்.

நீதிபதியின் வின எப்போதுமே ஆபத்தானது என் பதை வழக்கறிஞர்கள் நன்கு உணர்ந்திருக்கிறார்கள்!

யூகம் அதிகமுள்ள வழக்கறிஞர்களால் அதை புரிந்து கொள்ள முடியும்! நீதிமன்றங்களில் சில வழக்கறிஞர்கள் எதை எதைச் சொல்லக்கூடாது என்று நினைக்கிறார்களோ, அதையெல்லாம் நீதிபதி தங்களின் வினவினால் சொல்ல வைக்கவும் செய்யலாம்! நம் தலைவர் அமர்ந்திருப்பது நீதி மன்றமும் அல்ல, தமிழ் குற்றக் கூண்டிலே நிற்கவும் இல்லை. நானும் தைரியமாகவே பதில் சொல்லலாம், யாரும் பயப்பட தேவையுமில்லை!

இந்த விழாவிலே கலந்து கொள்வதற்கு முன்னாலே எனக்கு திகைப்பு இருந்தது! என்ன திகைப்பு என்று நீங்கள் கேட்கக்கூடும்!

நண்பர் கோகுல கிருஷ்ணன் சந்தித்து தமிழ் இலக் கியத்தைபற்றி பேச வேண்டுமென்று சொன்ன நேரத்தில், எனக்கு திகைப்பு ஏற்பட்டது. நான் தமிழ் இலக்கியம் அதிகம் படிக்காதவன் என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்றாகும்!

டாக்டர் சிதம்பரநாதன் செட்டியார் அவர்கள் இங்கே அமர்ந்திருக்கிறார்கள். நான் இங்கு தமிழ் இலக்கியத்தைப் பற்றி பேசுவதென்பது, மாணவன் படித்தவைகளை ஆசிரி யர் முன்னே சொல்லுவதைப் போலாகும்!

நீதிபதி அவர்கள் இரண்டு பிரச்னைகளை எழுப்பியுள்ளார்கள். வாழ்வு என்றால் என்ன, இலக்கியம் என்றால் என்ன என்று கேட்டிருக்கிறார்கள்.

வாழ்க்கை இல்லையென்றால் இலக்கியமில்லை. இலக்கிய மில்லையென்றால் வாழ்க்கை இல்லை! இலக்கியமும், வாழ்க்கையும் ஒன்றோடொன்று இணைந்து இருக்க வேண்டும்.

இப்போது வாழ்க்கைக்கும் இலக்கியத்திற்கும் எந்த வகை தொடர்பு இருக்கிறது. இலக்கியத்திற்கும் வாழ்க்கைக்கும் எப்படிப்பட்ட தொடர்பு இருக்க வேண்டும். இப்போது எப்படி இருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இலக்கியம் வளர்ச்சி பெறவேண்டுமென்று பேசுகிறவர்கள் எப்படி வளர்ச்சியை உண்டாக்க வேண்டுமென்று சிந்திப்பதில்லை!

நீங்களும் நானும் இலக்கியப் பேராசிரியர்கள் அல்ல. விழா முடிந்த பிறகு, ஏற்படுகின்ற ஐயப்பாடுகளை எப்படி தீர்த்துக் கொள்வது ?

அனைவரும் வாழ்க்கையைப் பற்றி அறிந்துகொள்ளுவதிலேயும், எப்படி வாழுவது என்பதை அறிய அக்கறை கொண்டிருக்கிறோமே தவிர, இலக்கியத்திற்கும் வாழ்க்கைக்கும் உள்ள தொடர்பு என்ன என்று அறிந்துகொள்வதிலே அக்கறை செலுத்துவதில்லை—எண்ணிப் பார்ப்பதுமில்லை. இலக்கியத்திற்கும் வாழ்க்கைக்கும் என்ன தொடர்பு என்பதை அறிந்துகொள்ள வேண்டும்.

தலைவரவர்கள் புரட்சி என்றால் என்ன என்றும் கேட்டார்கள்.

எதிர்பாராத விதத்திலே வருவது புரட்சி. எண்ணிப் பார்த்து வரும் வரும் என்று காத்திருந்து பெறுவது மறுமலர்ச்சி.

புரட்சி என்னும் சொல் அரசியலில் கலந்துவிட்ட பிறகு நாட்டில் உள்ளவர்கள் இழித்துரைத்தும், பழித்துரைத்தும் பலாத்காரத்தின் அடிப்படை, புரட்சி என்னும் விளக்கம் தருகின்றனர். விஞ்ஞான, இலக்கியத்திலேகூட எதிர்பாராத விதமாக புரட்சி ஏற்பட்டிருக்கிறது. சந்திர மண்டலத்தைப்பற்றி இதுவரை தெரிந்த உண்மையைக் காட்டிலும் புதிய உண்மைகளை திடீரென்று அளித்தது விஞ்ஞான இலக்கியத்தில் புரட்சி என்று கூறலாம்! உலகத்தைப்பற்றி கலிலீயோ கண்டுபிடித்து கூறியதை மறுமலர்ச்சி என்று கொள்ளலாம்! அன்று அவர் விஞ்ஞானத்தில் ஏற்படுத்திய மறுமலர்ச்சி இன்றைய விஞ்ஞான புரட்சிக்கு வித்தாக அமைந்தது.

வளருகின்ற பயிருக்கு நல்ல வளர்ச்சி இருக்கவேண்டுமானல் உரம் போடுகிறோம். அதைப்போல் அன்றைய மறுமலர்ச்சி, இன்றைய—புதிய விஞ்ஞான புரட்சிக்கு உரமாக அமைந்தது! இன்று மறுமலர்ச்சியும், புரட்சியும், ஒன்றுக்கொன்று தழுவிக் கொண்டிருக்கின்றன!

மறுமலர்ச்சி எழுத்தாளர்கள் இன்னும் அதிகமாக பெருகிட வேண்டும் என்று மதுரையில் நடைபெற்ற கூட்டமொன்றில் கூறினேன்.

மறுமலர்ச்சி மனதிலே இருந்துவிட்டால் மட்டும் போதாது! எழுத்தில், எழுதி அதை நடைமுறைக்கு அமைக்காதவர் மறுமலர்ச்சி எழுத்தாளர்களாகமாட்டார்கள்!

வேகமாகவும் எதிர்பாராத விதமாகவும் எடுத்துச் சொன்ன சில எழுத்தாளர்களை புரட்சி எழுத்தாளர்கள் என்று கூறினார்கள். புரட்சி என்னும் சொல் அரசியலில் கலந்துவிட்ட பிறகு சீர்திருத்த படங்களை புரட்சிப் படங்கள் என்றார்கள். மறுமலர்ச்சிக் கவிதைகளை தந்த பாரதிதாசன் அவர்களை புரட்சிக் கவிஞர் என்று நாட்டுமக்கள் பாராட்டினார்கள்.

நாம் காத்திருந்தால், இன்னும் ஐம்பதாண்டு காலம், அறுபதாண்டு காலத்திற்குப் பிறகு இந்தக் கருத்துக்கள் நமக்கே தோன்றும். கவிஞர் வேகமாக சிந்தித்து, அதை வேகமாக மக்களுக்கு அளித்தார், மக்களும் அதை பலப் பட பாராட்டி, பயனுற்றனர்!

வேகம் தாங்காமல் சில அழிந்துவிடும். இப்போது வீதியிலே உருளை வண்டி போகிறது என்றால், அதை இழுத்துச் செல்பவனின் கண்களுக்கு தெரியாமலேயே சக்கரத்தில் அகப்பட்டு வண்டியின் வேகம் தாங்காமல் சில அழிந்துவிடும். அவைகள் கொலை என்று கருதப்பட் டாலும் அப்படிப்பட்ட வழக்குகள் நீதிமன்றத்துக்கு வருவதுமில்லை — தீர்ப்பு சொல்லுவதுமில்லை! வண்டி இழுப்பவன் வேண்டுமென்றே அதைச் செய்வதில்லை. அழிவை அடிப்படையாக வைத்து புரட்சி எழுவது நீடிக்காது!

மேலும் இலக்கியம் யாருக்காக இருக்கிறது. இலக் கியம் இப்போது எப்படி இருக்கிறது. இலக்கிய வளர்ச்சிக் காக என்ன செய்து கொண்டிருக்கிறார்கள். இலக்கியத்தை எப்படி பயன்படுத்திக்கொள்ளப் போகிறார்கள்?

மரத்தில் பழுத்து இருக்கும் பழுத்த பழத்தை பார்த்த தும் தின்பதற்கு ஆசையிருக்கிறது. பழத்தை எப்படி தின்பது? பகிர்ந்து சாப்பிட போகிறார்களா? இல்லை, பாரா மல் எடுத்து தின்னப் போகிறார்களா ?

சித்தர்கள்போல் காத்திருந்து—தானாக கனிந்து விழுந் ததும் சாப்பிடப்போகிறார்களா ? இலக்கிய வளர்ச்சியை எப்படி பயன்படுத்தப் போகிறார்கள் என்பதை அறிய வேண்டும்.

அடிப்படையில் இலக்கியம் யாரால் இயற்றப்பட் டது. அது யாருக்காக இயற்றப்பட்டிருக்கிறது. அது

என்னென்ன காரியங்களுக்கு பயன்பட்டிருக்கிறது என்பதுதான் அதில் முக்கியமானதாகும்.

அதை கவனிப்பதற்கு முன்னால், இலக்கிய வளர்ச்சிக்கு ஏற்ற கல்விமுறை இப்போது இருக்கிறதா என்பது ஐயப்பாட்டுக்குரியதாகும். இப்போது இருக்கிற கல்வி முறையால் இலக்கியம் வளர்ச்சி அடையுமா?

இப்போதெல்லாம் கல்லூரிகள் மூடப்பட்டு வருகின்றன என்ற செய்தியை பத்திரிகை படிப்பவர்கள் அறிந்திருப்பார்கள் என்று கருதுகிறேன். அதற்கு காரணத்தை அவர்கள் கூறுகின்ற நேரத்தில்—மாணவர்கள் குறைவாக வருகிறார்கள் என்று கூறுகிறார்கள்.

மாணவர்கள் தொழில் பள்ளிக்கூடங்களுக்கு சென்று விடுகிறார்களென்றும் கூறுகிறார்கள். இந்த நிலைமை இப்படியே நீடிக்குமானால் இலக்கியத்தை கல்லூரிகள் பரப்ப முடியாது; மணவழகர் மன்றத்தைப் போன்றவர்களால் தான் இலக்கிய வளர்ச்சி பெறமுடியும்.

நான் கல்லூரியிலே படித்துக் கொண்டிருந்தபோது எந்த படிப்பு படிப்பது என்று யோசித்து கொண்டிருந்த போது நண்பர்களும், ஆசிரியர்களும் இலக்கிய படிப்பு படித்தால் வேலை கிடைக்காது, பொருளாதார படிப்பு படித்தால்தான் வேலை கிடைக்கும் என்று வற்புறுத்தினார்கள்.

வரலாற்றுப் படிப்பு படித்தால் வேலை கிடைக்காது என்று மாணவர்கள் பொருளாதார படிப்பு வகுப்பிற்கு சென்றுவிடுவார்கள். வேதாந்த படிப்பு வகுப்பாசிரியர் எப்படியாவது இரண்டு மூன்று மாணவர்களை இழுத்துப் பிடித்து வகுப்பு நடத்துவார். பொருளாதார படிப்பு வகுப்பிற்கு நூறு மாணவர்கள் தேவை என்றால் மற்ற மாணவர்களை ஒதுக்கித் தள்ளினார்கள்.

இன்று படித்தால் மட்டும் போதும் என்கிறுர்களே தவிர, கல்லூரி படிப்பு தேவை என்பது அல்ல! இன்றைய படிப்பு படிக்கின்றவர்கள் வியாபாரக் கண்ணோடு படிக்கின்றனர். வீட்டிலே உள்ள பெரியவர்கள், ஏன் வியாபார நோக்கத்தோடு படிக்கிருய் என்று கேட்டால், நீயும் மாணவனுய் இருந்தபோது வியாபார நோக்கத்தோடு படித்தாய் என்று கேட்கும் அளவிலே இருக்கிருர்கள்.

அன்று இலக்கியம் படித்தவர்கள், குடும்பத்திலே வசதியோடு இருந்தவர்கள் தான் இலக்கிய படிப்பு படித்தார்கள்! படித்து பட்டம் பெற்று, இன்ஞெரு கல்லூரியில் போய் விரிவுரையாளராக பணியாற்றுவார்கள். பொருளாதார படிப்பு முடித்து பட்டம் பெற்ருல் ஒரு 500 ரூபாய் சம்பளத்தில் வேலை காத்திருக்கும் என்று அன்று நினைத்தார்கள்.

இப்போது கல்லூரி படிப்பு என்பது காலக்கேடு, நேரக்கேடு என்றும் கருதுகிருர்கள்! பத்தாவது வரை படித்தால் போதும், அவரவர்கள் விரும்பும் தொழிலில் ஈடுபட்டுவிடுகின்றனர்.

மின்சார தொழிலிலே விருப்பம் உள்ளவர்கள் மின்சார தொழிலுக்கும், பஞ்சாலைக்கு செல்ல விரும்புபவர்கள் பஞ்சாலைக்கும், ஆள் பலம் இருப்பவர்கள் மருத்துவ துறைக்கும் சென்றுவிடுகிருர்கள்.

படிக்கிறபோதே மாணவர்கள் தொகை பிரிந்து விடுகிறது! மிச்சம் உள்ள மாணவர்களில் எத்தனை மாணவர்கள் இலக்கியம் படிக்கப்போகிருர்கள்? 1970-ம் ஆண்டில் எத்தனை மாணவர்கள் இலக்கிய வகுப்பு படிக்கப் போகிருர்கள்?

இப்போதுள்ள கல்வி முறையைக் காணுகின்றபோது, கல்லூரிகளிஞல் இலக்கியம் வளராது என்பது தெளிவாகிவிட்டது! முன்பு கல்லூரிகளில் இருந்த நிலைமை

களை உங்களுக்கு எடுத்துச் சொன்னேன். அந்த நிலைமைகள் மாற்றப்பட்டாலொழிய இலக்கியம் வளராது! மாற்றப்படவில்லையென்றால் கல்லூரிகளால் இலக்கிய வளர்ச்சி ஏற்படாது!

இப்பொழுதுள்ள துரைத்தனத்தார் வியாபாரத் துறைக்கு பெயரிடுவதுபோல், பள்ளிகளுக்கு 'பல விஷயங்களைச் சொல்லிக்கொடுக்கும் இடம்' என்று பெயர் வைத்திருக்கிறார்கள். முன்பெல்லாம் பள்ளிகளுக்கு, கல்விக்கூடம், அறிவாலயம் என்றெல்லாம் அழகாக பெயர் வைத்திருந்தார்கள். அதை இப்போது இப்படி மாற்றியிருக்கிறார்கள். ஆகையால்தான் எதிர்காலத்தில் இலக்கியம் வளருமா என்ற ஐயப்பாடு இருப்பதாக முன்பு சொன்னேன்! ஆகவே நீதிபதியின் முன் இவைகளைச் சொன்னேன். அவர் தீர்ப்புச் சொல்லுவார் என்றும் கருதுகிறேன்.

இலக்கியம் யாருக்காக அமைக்கப்பட்டது. அதனால் என்ன பலன்? இலக்கியத்தால் எத்தகைய பலனை பெற வேண்டும்? அன்றிருந்த தமிழறிஞர்கள் பொதுவாழ்க்கையிலே நாட்டம் கொள்ளாமல் தனி வாழ்க்கையிலே அதிகமாக இருந்திருக்கிறார்கள். இன்று சமுதாயத்தில் தனி வாழ்க்கையை விரும்பவில்லை, கூட்டு வாழ்க்கையையே விரும்புகிறார்கள்.

அன்று தனித்து வாழ்ந்து, அறிவுத் திறனால், காலத்தினால் அழிக்க முடியாத பேரிலக்கியங்களை ஆக்கித் தந்தார்கள்.

டாக்டர் சிதம்பரநாத செட்டியார் அவர்கள் பேசுகையில் கூட்டு வாழ்க்கையின் தன்மையினைப்பற்றி எடுத்துரைத்தார்கள்.

கணவனாலே கைவிடப்பட்ட காரிகையைப் பற்றி சிந்தனை செய்து எழுத்தாளனாலே எழுதமுடியும். அந்தக் காலத்தில் சிலப்பதிகாரத்தில் கோவலன், கண்ணகியைப்

பிரிந்த நேரத்தில், அப்பொழுதிருந்த புலவர்கள் கண்ணகி யின் பிரிவை குறித்து கோவலனிடத்தில் சொல்லவில்லை! சொல்லத் தெரியாது என்பதல்ல, காரணம்! கூட்டு வாழ்க்கை அதிகமில்லாத நேரம் அது! இப்போது சொல் லப் போவது சிலப்பதிகார கண்ணகி அல்ல; ஒரு வள்ள லின் மனைவி கண்ணகி என்று பெயர்!

அந்த வள்ளல் தன் மனைவியை விட்டுப் பிரிந்து காதல் கிழத்தியின் இல்லத்திலே இருந்தான். கண்களிலே கண்ணீர் கலங்க, சோக சித்திரமாய் இருந்த அவன் மனைவியின் நிலை யைக் கண்டு இரண்டு புலவர்கள், அந்த வள்ளலிடத்திலே எடுத்துச் சொல்லச் சென்றார்கள்.

'உன் மனைவி கண்ணீர் விட்டு கலங்குகின்றாள்' என் பதை நேரடியாக எடுத்துச் சொல்ல மனமில்லாது—உன் இல்லத்தின் பக்கம் சென்றேன். ஒரு மயில் கண்ணீர் விட்டு, கலங்கிய வண்ணம் நின்றிருந்தாள். அது நின் மனையாட்டிதானு என்று கேட்டார்களாம்! நேரடியாகச் சொல்லாமல் புலவர்கள், உட்கருத்தாக வைத்துச் சொன் னார்கள்!

இப்போது பொது சிந்தனை வளர்ந்து விட்டது! தனிப் பட்டவர்கள் அறிந்ததை, தனிப்பட்டவர்களுக்கு அறிவிக் கின்ற முறை கடந்து, அறிந்த உண்மைகளை உலகறிய, மக்களுக்கு எடுத்துச் சொல்லுகிறார்கள்.

இப்போதுள்ள சமுதாயத்தின் நடவடிக்கையை பார்க்கிற போது, நீதி குறைந்திருக்கிறது—பலரை வற்புறுத் தும் தன்மை அதிகமாயிருக்கிறது,

ஏழை அழுகிறான் என்றால், அவனைப் பார்த்து ஏன் அழுகிறாய் என்று கேட்டு. அவன் துயரைத் துடைக் கிறோம். ஏன்?

சேற்றிலே பசு அழுந்திக்கிடக்கிறது, வெளியே வர முடியாமல் தவிக்கிறது என்றால், பேசும் சக்தியற்ற உயிர்ப்

பிராணி துன்பப்படுவதை நீக்க வேண்டுமென்று எண்ணு வதில்லை. காரணம், மனிதன் உதவியைப் பெற்று மகிழ் கிறான். கொடுப்பதால் நாம் மகிழ்ச்சியடைகிறோம்; வாங்குவதால் அந்த ஏழை மகிழ்ச்சியடைகிறான். அந்த மகிழ்ச்சியை நாம் காணுகின்ற போது—உதவி செய்த பலன் நமக்கு கிடைத்தது என்று, நாமும் மகிழ்கிறோம்!

அந்தக் காலத்தில் தன்னைப் பற்றி பாடிக் கொண்ட புலவர்கள் தான் அதிகம் பேர் இருந்திருக்கின்றனர். புலவர்கள், கஷ்டப்பட்டு மக்களுக்கு அறிவுறுத்தவில்லை.

மன்னர்களின் உதவியை பெறுவதற்காக மண்டி யிட்டுக் கிடந்தவர்களும் அன்று இருந்தார்கள்! அற நிலை யைக் காப்பாற்றுவதற்கும் புலவர்கள் இருந்தார்கள்! மன்னர்கள் அறவழியிலே இருந்து தவறுகின்ற நேரத்தில் அஞ்சாமல் எதையும் சொல்லும் ஆற்றல் படைத்தவர் களும் அன்று இருந்தார்கள்.

வாழ்க்கைப் படிப்பினை நன்கு உணர்ந்தவர்கள் இருந் தார்கள். அதுவும் உண்மை! தரணி மெச்ச வாழ்ந்தார்கள் என்பது உண்மை!

தமிழர்களின் வாழ்க்கை பிற்காலத்தில் எப்படி மாறி யது? இப்போது எப்படி இருக்கிறது? டாக்டர் அவர்கள் பேசுகையில் நல்ல வாழ்க்கை வாழுங்கள். இலக்கியம் தோன்றும் என்று குறிப்பிட்டார்!

வாழ்க்கை என்பது தானும் வாழ்ந்து மற்றவர்களை வாழ வைப்பதுதான் வாழ்க்கை!

ஆனால் இன்று பத்து பேர் கெட்டால்தான், தன் வாழ்க்கை செம்மை பெறும் என்ற எண்ணம் சிலருக்கு இருக்கிறது! அந்த வழியிலே தான் சமூக அமைப்பும் இருக் கிறது—பொருளாதார நிலையும் இருக்கிறது.

இயற்கை துணை நின்று, உழைப்பை உறுதுணை யாக்கி, அறிவுத் துணையோடு உழைக்கின்ற உழைப்பு

அந்த உழைப்பில் மிச்சப்படுகின்ற நேரத்திலே குறைந்த உழைப்பில் அனுபவித்த பலனை மற்றவர்களுக்கும் அளிக்கின்ற மனம் வேண்டும். அது தான் வாழ்க்கை!

வாழ்க்கை என்றால் தேவைகள் நிறைவுற்றிருக்க வேண்டும்!

வண்டி இழுக்கிற வரதன் வாடுகிறான், வண்டியிலே இருப்பவன் சுகமாக வாழ்கிறான் என்றால், இதை அடுக்கு மொழி என்று சிலர் கேலி பேசுகிறார்கள். வண்டி இழுக்கிற வரதனைப் பார்த்து 'எப்படி இருக்கிறாய்' என்று கேட்டால் ஏதோ இருக்கிறேன் என்று கூறுவான்., இருப்பது வாழ்க்கை அல்ல! இருக்கிறான் என்றால் மற்றவர்கள் மதிக்கத் தக்க விதத்திலே வாழ வேண்டும்! 'பாவி! இவனும் இருக்கிறானே' என்னும் விதத்திலே வாழக் கூடாது!

தமிழர்கள் நல்ல வாழ்க்கை முறைகளை கையாண்டார்கள். துயர் இல்லாது இருந்தார்கள். நிறைவுற்ற வாழ்க்கை வாழ்ந்தார்கள். அதனால் தான் அக்காலத்திலே உள்ள புலவர் ஒருவர் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று பாடினார். தம்மைப் போலவே எல்லா நாட்டினரும் இருப்பார்கள் என்று எண்ணியதால் தான், எங்களுக்கு, எல்லா ஊரும் எங்கள் ஊர் தான் என்று அவ்வாறு சொன்னார்.

ஆனால் பிற்காலத்தில் வந்த உறவினர்கள் இருப்பதைக் கெடுக்க வந்தார்களே தவிர, கொடுக்க வரவில்லை. நள்ளிரவு கள்ளர்களுக்கும் இவர்களுக்கும் பெயரில் தான் மாற்றம், செய்கையில் மாற்றம் ஏதும் இல்லை என்றே நான் கருதுகிறேன். பிற்காலத்திலே வந்தவர்கள் புதுவழி என்று சொல்லிக் கொண்டு தவறான வழியிலே சென்றனர்.

பழந்தமிழர்கள் கடவுள் பக்தியில் குறைந்வர்களாக இருந்தனர் என்று சிலர் கூறுகிறார்கள். பழந்தமிழர்கள் கடவுள் பக்தியிலே அழுத்தமான நம்பிக்கை வைத்துக்

கொண்டிருந்ததால் தான் சிறந்து விளங்கிய வாழ்க்கையின் தரம் குறைந்தது! ஆகவே தான் அந்தக் காலத்தில் பெரும்பாலும் கடவுட் கதைகளாகவே இயற்றப்பட்டன!

ஆனால் திருமூலர் என்னும் புலவர் ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்று பாடினார். இலக்கிய தமிழர் சமுதாயம் பேதமற்ற, வேற்றுமையற்ற சமுதாயமாக, சுரண்டலற்ற சமுதாயமாக விளங்கி யிருக்கிறது!

எப்படியாவது வாழ வேண்டும், வாழ்வதற்கு இன்னின்னது தேவை என்ற எண்ணம் இப்போது தோன்றி விட்டதால்தான் இலக்கியத்திற்கும் வாழ்க்கைக்கும் உள்ள தொடர்பு அற்றுப் போய் விட்டது!

பழந்தமிழர்கள் வாழ்ந்தார்கள் என்று கூறுவதால் பழந்தமிழர்கள் போல் இன்று வாழ இயலுமா? அன்றிருந்த பழந்தமிழர்கள் வேட்டையாடச் சென்றார்கள்—அப்போது ஆண்ட சேர, சோழ, பாண்டிய மன்னர்களுக்கிடையே அடிக்கடி மோதல் ஏற்பட்டுக் கொண்டே இருந்தது. அப்படிப்பட்ட வாழ்க்கையை இப்போது வாழச் சொல்லுகிறீர்களே. இது அறிவுடையாகுமா என்று சிலர் பேசுகிறார்கள்.

இப்படி இப்படி யெல்லாம் பழந்தமிழர்கள் வாழ்ந்தார்கள் என்பது, மக்களுக்கு அறிவூட்டி, அவர்கள் வாழ்ந்த செம்மையான வாழ்வை நாமும் வாழ வேண்டும் என்பதற்காகத் தான் வலியுறுத்துகிறார்கள்.

அந்தக் காலத்திலே வாழ்ந்தவர்கள், இன்று போல் இல்லை. சிகை வளர்ந்திருந்தது! இன்று எல்லோரும் கிராப்பை எடுத்து விட்டு, சிகை வளர்த்துக்கொள்ள முடியுமா?

அன்று, சட்டை போடாமல், இருந்தார்கள். அகன்ற மார்பு காட்டி, போர்களத்திற்கு செல்லும் வீரர்கள் போல் நடை போட்டார்கள். இன்று அப்படி இருக்க முடியுமா?

அன்று வாழ்ந்தவர்களின், இடுப்பிலே எப்போதும் உடை வாளை வைத்துக் கொண்டிருந்தார்கள். வீரத்தோல் ஒன்றியவர்களாக அன்று வாழ்ந்தவர்கள் இருந்தார்கள் ? தேவையற்ற காரியங்கள் அன்று நடை பெற்றிருக்கின்றன. ஆகவே அவைகள் அப்படியே இன்றும் இருக்க வேண்டு மென்பதல்ல! அன்று வாழ்ந்தவர்களின் அடிப்படைக் கொள்கைகளைத் தான் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டுமே தவிர புறத் தோற்றம் முக்கியமல்ல ! ஆகவே தான் அன்று வாழ்ந்த புலவர்கள் அகம்—புறம் என்று பாடினார்கள். அகத்திலே இருப்பதை புறத்திலே பார்க்க முடியாது ! பழந்தமிழர்களின் அடிப்படை கருத்தை நாம் எடுத்துக் கொள்ள வேண்டும் !

அந்தக் காலத்திலே வாழ்ந்த ஆடவன், இல்லக்கிழத்தி என்றும், காமக் கிழத்தி என்றும்,பரத்தை என்றும் மூன்று பெண்களை வைத்திருந்தான். அந்தக்கால இலக்கியமும் இலக்கணமும் இதை ஏற்றுக் கொண்டிருக்கலாம், இது இப்போது இந்தக் காலத்திற்கு ஒத்து வருமா ? இந்தக் காலத்தில் ஒரே பெண்ணோடு தான், எத்தனை ஆண்டு களானாலும் அவளோடு வாழவேண்டும்.

" கள் குடிப்பது தீது என்று சொல்லப்படுகிறது " பழந்தமிழர்கள் குடிப்பதையே பெரிய கலையாகக் கொண்டிருந்தனர். இதற்கு சான்றுகள், சங்க இலக்கியங்களிலே ஏராளமாக இருக்கின்றன !

சங்க இலக்கியத்திலே கள் குடிக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள் என்பதற்காக ஆளுக்கொரு கோப் பையை எடுத்துக் கொண்டு குடிக்கச் சென்று விடுவது தவறு. அதுவல்ல இலக்கிய வாழ்க்கை ! மற்றவர்களை கெடுக்கக் கூடாது. உழைத்து பிழைக்க வேண்டும் இதைத் தான் நல்ல வாழ்க்கை என்று சொல்ல முடியும் ! ஆகையால் வாழ்க்கை எப்படி அமைய வேண்டும் ? இலக் கியத்திலே இருந்து எந்த விதமான கருத்தை எடுத்துக்

கொள்ளலாம் என்று ஆராய்ந்து பார்த்து, அந்தக் கருத்தினை மனதிலே கொண்டு, அதனுடைய துணையால் வாழ்க்கையை செம்மையாக்கிக் கொள்ள வேண்டும்! இப்படி வாழ்ந்தால் தான் இலக்கியத்திற்கு மதிப்பு கொடுப்பதாகும். அன்று வாழ்ந்த தமிழர்களின் புகழுக்கு ஏற்றமளிப்பது போலாகும்!

தமிழ் ஆட்சி மொழியாக வேண்டுமென்று கூறினால் சிக்கல் வரும் என்று கூறுகிறார்கள்! தமிழ் ஆட்சி மொழியாக வேண்டும்! நீதிபதி அவர்கள் வழக்கு மன்றத்தில் தமிழிலேயே தீர்ப்பு எழுதி படிக்கவேண்டும்—அந்த நாளை நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்!

டாக்டர் அவர்கள், தனித் தமிழ் வேண்டுமென்று கூறினார்! இப்போது இருக்கின்ற துரைத்தனத்தில் தமிழர்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள் ஆள்கிறார்கள். தனித்தமிழ் ஆட்சியிலே நிலக்க வேண்டுமென்று சொல்லி வருவது கண்டு வெட்கப்படுகிறேன்! வேறு நாடுகளிலே இது போன்ற நிலை இல்லை!

ஆங்கிலம் பேச எழுதத் தெரியாத பல நாடுகளில், அந்த நாட்டின் தாய் மொழியே ஆட்சி மொழியாக இருக்கின்றன. ஆங்கிலம் வளர்ந்திருக்கும் பல நாடுகளில் கூட அந்தந்த நாட்டின் தாய் மொழியைத் தான் ஆட்சி மொழியாக்கி இருக்கிறார்கள். எஸ்கிமோக்கள் வாழ்கின்ற பகுதியிலே கூட அவர்களின் தாய் மொழி தான் ஆட்சியிலே இருக்கிறது. அவர்களை பார்த்து, அவர்கள் வழி, பின் பற்றினால் பாதி பிரச்னை தீர்ந்துவிடும்! இங்கே இருக்கின்ற துரைத்தனத்தாரை, 'தமிழிலே எழுதுகிறோம் அனுமதி தாருங்கள்', என்று கேட்கும் நிலைக்கு இருக்கிறோம்!

தமிழர்கள் என்றால் வாதாடலாம்—பகைவர்கள் என்றால் துச்சம் என மதிக்கலாம்! 'என் கொடியின் கீழ் நீ நிற்கிறாய், நீ சொன்னால் அதை நிறைவேற்ற வேண்டுமா? இப்போது இருப்பதை உன்னால் மாற்ற இயலாது'

என்று சொல்லுவதைப்போல் இங்கே இருக்கின்ற துரைத்தனத்தார் தமிழை ஆட்சி மொழியாக்க முடியாது என்று கூறுகிறார்கள். ஆங்கிலம் தான் இன்று வழக்கிலே இருக்கின்றன! பேசத் தெரிந்தவர்கள் ஆங்கிலம் பேசுகிறார்கள். பாடத் தெரிந்தவர்கள் வடமொழி சங்கீதத்தைப் பாடுகின்றார்கள், ஆகவே மொழி உரிமையை இழந்து விட்டு இன்னொரு இனம் சும்மா இருக்காது!

சின்னஞ் சிறிய நாடு—அயர்லாந்து! ஆங்கிலேயர்களின் ஆட்சியிலே இருந்த காலம்! சுயாட்சி பெற வேண்டுமென்ற எண்ணம் பிறந்து, விடுதலைக்கொள்கை வித்தூண்றிய காலத்தில், முதலில் தோன்றியது புரட்சிக் கழகமல்ல! ஐரிஷ் மொழியை வளர்க்கும் கழகங்கள் தான் முதலிலே தோன்றின!

ஐரிஷ் மொழி பேசுகின்றவர்களே, ஐரிஷ் மொழியிலே என்ன இருக்கிறது. இலக்கியம் இருக்கிறதா என்றார்கள். மொழி உணர்ச்சிக் கொண்டவர்கள் 'ஆங்கிலத்திலே இலக்கியம் இருக்கலாம். ஐரிஷ் மொழியிலே இயக்கியம் இல்லாமல் இருக்கலாம். ஆனால், உரிமை உணர்ச்சி கிடைக்கும் என்றார்கள். மொழி உணர்ச்சி வலுப்பெற்றபோது ஆங்கில துரைத்தனத்தார், உங்களுக்கு ஐரிஷ் கொடி வேண்டுமா, எங்களது, ஆனந்த வாழ்வு வேண்டுமா, என்று கேட்டபோது விடுதலை தலைவன் டிவேலரா, அடிமை வாழ்வில் கிடைக்கும் ஆனந்தம் தேவை இல்லை. எங்களுக்கு ஐரிஷ் கொடி தான் வேண்டுமென்றார். அதே போல் தான் நாம், நமது மொழி ஆட்சி மொழியிலே இருக்க வேண்டுமென்று விரும்புகிறோம். தனித் தமிழ் வேண்டுமா என்று நம்மைப் பார்த்துக் கேட்கும் துரைத்தனத்தாருக்கு நாம் சொல்லும் பதில், புருவத்தை நெறிப்பதைத் தவிர வேறு ஒன்றும் இல்லை!

தமிழ் இப்போது வேகமாக, முன்புள்ள நிலையை அடைவதற்கு வழிவகைகள் ஏற்பட்டு வருகின்றன. பிற

மொழி கலப்பு மாறி, தனித் தமிழ் பேச்சு வழக்கில் நிறைய வந்து கொண்டிருக்கின்றது.

நான் மட்டும் இப்போது நல்ல தமிழ் பேசவில்லை. இப்போது பலர் நல்ல தமிழிலே பேசிவருகிறார்கள். திரைத் தமிழ் வளர்கிறது என்று டாக்டர் அவர்கள் கூறினார்கள்.

உண்மையிலேயே திரைத் தமிழ் வளர்ந்து கொண்டு தான் வருகின்றது. படத்தில் பத்து ஆண்டுகளுக்கு முன் காதலனும் காதலியும் சந்தித்து உரையாடுகின்ற கட்ட மானால், காதலி—காதலனைப் பார்த்து 'சுவாமி' என்று வசனம் பேசுவாள்! இன்று 'சுவாமி' என்று பேசினால், பார்ப்பவர்கள் இது என்ன கோயில் 'சீன்' என்பார்கள்! இது எப்படி மறைந்தது? எப்படி இருந்தது—இப்போது எப்படி மாறிற்று? இன்று கண்ணாளா, கரும்பே, தேனே, மானே, வெண்ணிலவே என்று பேசுகிறார்கள். இந்த அழகிய தமிழ் எப்படி வந்தது.''

'சுவாமி' என்று பேசினால் தொழுகையிலே பேசுகின்ற பேச்சாகி விட்டது! ஆண்டவனை தொழுதாலும், வரம் தரா விட்டாலும் கோபிக்காமலாவது இருக்கலாம்! ஆகவே இன்று திரையில் அன்பே, ஆருயிரே என்ற அழகிய தமிழ், பழந்தமிழ் பேசப்படுகிறது!

ஒரு திங்களுக்கு முன் துறைத்தனத்தார் கூட்டிய கூட்டத்தில் நானும் கலந்து கொண்டேன். கூட்டத்தில் 'பேரூர்தி நிலையம்' என்று ஒருவர் பேசும் போது கூறினார். உடனே ஒரு காங்கிரஸ் உறுப்பினர் எழுந்திருந்து பேரூர்தி நிலையம் என்பது—இது என்ன தமிழா? இது யாருடைய வாயில் நுழையும் என்று கூறினார். நான் பேசுகிற போது குறிப்பிட்டேன் இது நுழைகின்ற வாய் நிறைய இருக்கின் றன என்று.

நான் படித்த காலத்தில் தீபஸ்தம்பம் என்று சொல்லு கிற போது, அதிலே எத்தனை கம்பீரமாக இருந்தது! அதை

சொல்லிப் பார்ப்பதிலே ஒரு மகிழ்ச்சி இருந்தது! என் மக னிடத்திலே தீபஸ்தம்பம் என்ருல் என்னப்பா அது என் கிருன்! லைட் ஹவுஸுக்கு பெயர் தீபஸ்தம்பம் என்ருல், அவன் சிரித்து கலங்கரை விளக்கமா என்று கூறுகிருன், தீபஸ்தம்பம் என்ருல் அவனுக்கு புரியவில்லை. கலங்கரை விளக்கம் என்ருல் தான் புரிகிறது! இது நான் கற்றுக் கொடுத்தது அல்ல—காலம் கற்றுக் கொடுத்தது! இது எப் படி ஏற்பட்டது? இது தான் மறுமலர்ச்சி வாயிலாக ஏற் பட்ட மொழி உணர்ச்சி!

பதினைந்து ஆண்டுகளுக்கு முன் இப்படி ஒரு கூட்டம் நடைபெற்று, நண்பர் கோகுல கிருஷ்ணன் வர வேற்று பேசுகிற போது, எப்படி பேசியிருப்பார்?

மகாஜனங்களே! சகோதர சகோதரிகளே! உங்களை யெல்லாம் சந்திக்கிற வாய்ப்பு கிடைத்தது பெரும் பாக்கி யம். நான் தன்யனுனேன்! இப்பொழுது உங்கள் மத்தி யிலே ஸ்ரீமான் அண்ணுதுரை அவர்கள் பிரசங்கம் செய் வார் என்று கூறியிருப்பார்! இப்பொழுது சபை—அவை யாகிவிட்டது! நாடு அரசாகி விட்டது! நாடு, விடுதலை, கிளர்ச்சி என்கின்ற சொற்கள் வழக்கில் வந்துவிட்டன! இப்படி வருமென்று யார் கண்டார்கள்! யாரும் நினைக்க வில்லை! இந்த மறுமலர்ச்சி ஏற்பட்டபின் சிலருக்கு அச்சம் ஏற்பட்டது! தாய் தமிழ் இன்று வென்றுவிட்டது! நிலை யாக நின்றுவிட்டது!

ஆகவே, துணிந்து நம்பிக்கையோடு தமிழைச் ஆட்சி மொழி யாக்க வேண்டு மென்று எடுத்துரைக்க வேண்டும். புதிய புதிய சொற்களை நாம் இலக்கியத்திலே இருந்து எடுத்தாள வேண்டும். புதிய சொற்கள் இலக்கியத்தில் நிரம்ப இருக்கின்றன. வழக்கு மன்றங்களுக்கான சொற் கள் சிலப்பதிகாரத்தில் வழக்குரைப் பகுதியில் இருக்கின் றன! அரசாட்சிக்குரிய சொற்கள் மணிமேகலையில் இருக் கின்றன!

இல்லையென்று கூறுகின்றவர்களுக்கு இருக்கிறதென்று காட்ட துணிந்தால் நிச்சயமாக தமிழ் தணித்து இயங்கும். தமிழ் ஆட்சி மொழியாக வேண்டுமென்று கூறுகிற போது தமிழ் செல்வாக்கு இழந்து விடும் என்று ஆட்சியாளர்கள் கூறுவதற்கு காரணம், தமிழ் ஆட்சி மொழியானல், இப்போது இருக்கிற வடமொழி செத்து விடும் என்ற அச்சம் தான், தமிழ் கெட்டு விடும், கெட்டு விடும் என்று கூறுவதற்கு காரணம்! இதற்கு எடுத்துக் காட்டாக ஒன்று சொல்லுவேன்—வடமொழி இப்போது பேச்சு வழக்கிலே இல்லை. லத்தீன் மொழி எழுத்திலே இருக்கிறதே தவிர, பேச்சில் இல்லை. வடமொழிச் சொற்களில் கருத்து இருக்கலாம், ஆனல் அது பெரும்பான்மையாரால், பேசப்படுவதில்லை. பேச்சு வழக்கிலே இல்லை.

தமிழ் மொழியில் நல்ல இலக்கியங்கள் இருக்கின்றன. தமிழர், தாய்மொழி—தமிழ் என்ற நம்பிக்கை, உறுதிப்பாடு உங்களுக்கு ஏற்பட வேண்டும். அந்த உணர்வு இல்லாத காரணத்தினல் தான் இருப்பதை விரட்டப்படாமல் இருக்கவேண்டும் என்பதற்காகத்தான் தமிழ் கெட்டு விடும் என்று அச்சுறுத்துகிருர்கள்.

எந்த மொழியிலிருந்தும் கடன்வாங்கும் நிலையிலே தமிழ் இல்லை. எப்படி துரைத்தனத்தார் மற்ற நாடுகளிலே இருந்து கடன் பெறுவதைப் போல், மற்ற மொழிகளிலே இருந்து கடன் வாங்கப்பட்டால், அந்த நிபந்தனை ஆதிக்கம் —நம் மொழியின் வளர்ச்சியை குலைத்துவிடும்! எனவே தான் நாம் தனித் தமிழ் வேண்டு மென்று குறிப்பிடுகிறேம்.

மொழி வளம், தனித் தன்மை தமிழர்க்கு இருக்கிறது. தமிழ் இலக்கியம், வாழ்க்கையோடு எல்லா வகையிலும் ஒட்டி நன்மை செய்வதை நீங்கள் பார்க்கக் கூடும். செம்மையான வாழ்க்கைக்கு வழிகாட்டியாக, இலக்கியத்தில் உருட்டி திரட்டி எடுத்ததுபோல் குறள் இருக்கிறது.

வாழ்க்கையிலே ஏற்படும் ஐயப்பாடுகளை நீக்கிக் கொள்வதற்கு குறள் துணைபுரிகிறது!

குறளை, வழிகாட்டியாகக் கொள்ள முயற்சிக்க வேண்டும்.

வாழ்க்கைக்கு திருவள்ளுவர் காட்டிய நெறியையும், புறநானூறு காட்டிய வீரத்தையும், அகத்துறை காட்டிய அன்பையும் வருங்காலத்தில் நாம் கடைப்பிடிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டு, இதுபோன்ற மன்றங்கள் செய்யும் பணி, பாராட்டுதற் குரியது. இதற்கு நீங்கள் அதிக அளவில் ஆதரவு தரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.



# சீர்திருத்தத் திருமணங்கள்

இப்போது சீர்திருத்த முறையில் திருமணங்கள் நடை பெறுகின்றன. சீர்திருத்த முறையில் திருமணங்கள் நடை பெற வேண்டுமென்பதில் இப்போதெல்லாம் மக்களிடம் அதிகமான அக்கரை காணப்பட்டு வருகிறது.

20 ஆண்டுகளுக்கு முன்னர் இப்படிப்பட்ட திரு மணங்கள் நடைபெறுவதற்கு எவ்வளவோ எதிர்ப்புகள் இருந்தன. அன்று இப்படிப்பட்ட திருமணங்கள் இல்லை. அப்போது எதிர்ப்புகளும் ஏராளம். இப்படிப்பட்ட திரு மணங்களுக்கு இப்போது எதிர்ப்புகள் குறைந்துள்ளன. அதனால் ஏராளமான சீர்திருத்தத் திருமணங்கள் மிகவும் தாராளமாக நடைபெறுகின்றன. என்றாலும் எதிர்ப்புகள் அடியோடு இல்லவே இல்லையென்று கூற முடியாதே!

எவ்வளவுதான் அதிகமான சீர்திருத்த திருமணங்கள் நடந்தபோதிலும், அவற்றைப் பற்றிய சந்தேகங்கள் மக்க ளுக்கு இன்னமும் அடியோடு நீங்கிவிட்டதா? நீக்கப் பட்டுவிட்டதா? இல்லையே!

சீர்திருத்தத் திருமணங்கள் அதிகம் நடைபெறவேண் டும் என்பதிலும், சீர்திருத்த முறையிலேயே திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்பதிலும் இன்றைக்கு

பெரும்பாலான மக்கள் அக்கறை காட்டத்தான் செய்கிறார்கள். அவர்கள் யாராக இருந்தபோதிலும், காங்கிரஸ் கட்சியிலே உள்ள பகுத்தறிவுத் தோழராலும், கம்யூனிஸ்ட் கட்சியிலுள்ள சீர்திருத்த நண்பராலும் அல்லது வேறு எந்தக் கட்சிக்காரர் ஆனாலும் சீர்திருத்த முறையில்தான் திருமணங்கள் நடைபெற வேண்டுமென்பதில் எந்த விதமான மாறுபட்ட கருத்துக்களும் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை.

இதைப் போலவே எந்த வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், அவர்கள் பார்ப்பனருக்கு அடுத்த ஜாதி நாங்கள்தான் என்று பெருமை பேசிடும் முதலியார் வகுப்பைச் சார்ந்தவர்களாக இருப்பினும், அல்லது செட்டியார், நாயுடு, க்ஷத்திரியர் என்று கூறிக்கொள்ளும் எந்த வகுப்பைச் சார்ந்தவர்களாக இருப்பினும், அந்தந்த வகுப்பிலுள்ள பெரும்பாலான வாலிபத் தோழர்கள் அனைவரும் இப்படிப்பட்ட சீர்திருத்த திருமணங்கள் செய்து கொள்வதிலே பெரிதும் அக்கறை காட்டுகின்றனர்.

இன்று எந்த சமூகத்தைச் சேர்ந்தவர்களானாலும் உலக நிகழ்ச்சிகளைக் கொண்டு முன்னேற விரும்புகிறார்கள். தெளிந்த அறிவுகாட்டும் நல்ல போக்கின்படி நடக்கத் துணிவுகொண்டுள்ளனர். எனவேதான், நாள்தோறும் இப்படிப்பட்ட சீர்திருத்தத் திருமணங்கள் நடைபெற்று வரும் நல்ல நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்த வகையில் எவ்வளவு சீர்திருத்தத் திருமணங்கள் நடைபெற்றாலும், இன்னமும் சாதாரண மக்களிடையே இப்படிப்பட்ட மண முறை முறைகளைப் பற்றிய தவறான கருத்துக்களும் பொருத்தமற்ற சந்தேகங்களும் தோன்றுது அடியோடு மறைந்துவிடவில்லை. எதிர்ப்புகள் அன்று போல அதிக அளவில் இல்லாமலிருக்கிறதே தவிர எதிர்ப்பே இல்லையென்ற நிலை ஏற்பட்டுவிடவில்லை யென்பதை நாம் உணரத்தான் வேண்டும்.

இன்று சீர்திருத்த திருமணங்கள் ஏராளமாக நடை பெறுகின்றன. அதுவும் மிகத் தாராளமாக நடைபெறு கின்றன. என்றாலும் எதிர்ப்புகள் அங்கங்கே இருக்கத் தான் செய்கின்றன. இப்போது இங்கு நடைபெறுகின்ற திருமணத்திற்குக் கூட ஏதோ எதிர்ப்புகள் இருந்ததாக நண்பர்கள் குறிப்பிட்டார்கள்.

இப்படிப்பட்ட சீர்திருத்தத் திருமணங்களைக் கண்டு சிலர் பயப்படுவதற்குக் காரணமே கிடையாது. நாங்கள் என்ன நடக்கக்கூடாது எதையும் செய்யவில்லையே! என்றைக்கும் போல ஒரு ஆணுக்கு ஒரு பெண்ணுக்குந் தானே இங்கே திருமணம் நடத்தி வைக்கிறோம். அதிலும் ஆணின் கண்ணைக் கட்டிக்கொண்டு வந்து மணப்பந்தலில் நிறுத்திவிட்டு அதன் பின்னர் அதோ இருக்கும் அந்தக் பெண்தான் உனக்கு மனைவியாகப் போகிறவள் என்று கூறவில்லையே!

ஆணும் சரி, பெண்ணும் சரி, முன்னதாகவே ஒரு வரைப்பற்றி மற்றவர் நன்றாக அறிந்து தெரிந்துகொண்ட பின்னர் தானே திருமணம் நடைபெற வேண்டுமென்று நாங்கள் கூறுகிறோம்; செய்கிறோம்.

ஒருஆணுக்கும், மற்றொரு ஆணுக்கும், அல்லது ஒரு பெண்ணுக்கும், மற்றொரு பெண்ணுக்குமா திருமணம் நடத்துகிறோம்? இல்லையே! அப்படி ஏதாவது அக்கிரம மான காரியங்கள் செய்தால், செய்ய வேண்டுமென்று பேசினால், ஆகா, அக்கிரமக்காரர்கள், ஆகாத காரியம் புரி கிறார்கள் என்று எங்களைக் கண்டிப்பதற்கு இடமேற்படும். ஆனால் நாங்கள் அப்படி ஏதும் செய்யவில்லையே!

நாங்கள் இங்கே திருமணம் செய்துகொள்ளும் மண மக்கள் தங்கள் வாழ்க்கையில் ஒருவருக்கு ஒருவர் துணைவர்களாகிறோம் என்று இன்று எடுத்துக்கொள்ளும் உறுதிக்குச் சாட்சிகளாகத்தான் வந்திருக்கிறோம். இங்கே கூடியுள்ள அத்தனை பேரும், உற்றார் உறவினர் உள்பட வும் அதற்குத்தானே வந்துள்ளனர்.

மணம் செய்துகொள்வதற்குச் சாட்சிகளாக இருக்கவும், மணமக்களை வாழ்த்தவும், புத்திமதிகளைக் கூறவுந் தான் நாம் அனைவரும் இங்கே கூடியுள்ளோம். இதைத் தான் நாம் செய்கிறோம். இதைக்கண்டு ஏன் சிலர் சந்தேகப்பட வேண்டும்? எதற்காக எதிர்ப்புக் காட்ட வேண்டும்?

சில பெரியவர்கள், வைதீகத்தில் பெரிதும் ஊறியவர்கள், வேண்டுமானால் சில காரணங்களைக் கூறுவார்கள். அதாவது இந்தத் திருமணத்திலே அவர்கள் எண்ணப்படியும் முறைப்படியும் காரியங்கள் நடைபெறவில்லை என்பதுதான் அவர்களுக்கு ஏற்படும் குறைகள்!

அவர்கள் எண்ணப்படி, முறைப்படி நாம் இங்கே அய்யரை அழைத்து அக்கினி வளர்க்கவில்லை. அகல் விளக்கு ஏற்றி வைக்கத் தவறி விட்டோம். அம்மி மிதித்து அருந்ததி காட்டும் வழக்கத்தை விட்டுவிட்டோம். அரசாணிக்கால் நாட்டி அதைச் சுற்றி வரவில்லை. மணமகன் அய்யர் மந்திரம் ஓதித் தாலி கட்டவில்லை.

இப்படிப்பட்ட சில வழக்கமான பல சடங்குகளைச் செய்யவில்லை, இதுதான் இன்று எதிர்ப்புக் காட்டும் சிலரது குற்றச்சாட்டுகள். சீர்திருத்தத் திருமணங்களைப் பொருத்தமட்டில் இக்குற்றச் சாட்டுகளை நாங்கள் மறுக்கவில்லை; மறுக்கவும் மாட்டோம். அவைகளை அப்படியே ஏற்றுக் கொள்கிறோம்.

நாங்கள் சீர்திருத்தம் என்று கூறுவதே; இப்படிப்பட்ட சடங்குகளை நீக்கவேண்டும், அடியோடு விட்டுவிட வேண்டும் என்பதுதானே; அப்படியிருக்க சடங்குகள் இல்லையென்று கூறுவதைக் கேட்டு அவைகளை எப்படி மேற்கொள்ள முடியும்?

சீர்திருத்தத் திருமணம் தேவையென்பதற்காக நாங்கள் கூறும் காரணங்களை மறுத்தல்ல இன்று காணப்படும்

எதிர்ப்புகள் எங்கு காணப்பட்டாலும் அது ஏதோ சில சடங்குகளை அழித்து விடுகிறோம், ஒழித்துவிடுகிறோம் என்பதற்காகத்தான் காணப்படுகிறது.

சங்கராச்சாரியாரிலிருந்து சாதாரண அய்யரிலிருந்து, சாதாரண சாமியார் வரை, படித்தபார்ப்பனர்களிலிருந்து படிக்காத பாமரர்வரை, அவர்கள் யாராக இருப்பினும் இதுவரை சீர்திருத்த முறையில்தான் திருமணங்கள் நிகழ வேண்டும் என்பதற்காக சுயமரியாதைக்காரர்களாகிய நாங்கள் கூறிவரும் காரணங்களை ஒருவரும் மறுத்துப் பேசியது கிடையாதே!

அவர்கள் நாங்கள் கூறும் காரணங்களை மறுத்துப் பேசுவதில்லை. பேசவும் முடிவதில்லை. ஆனால் அர்த்தமற்ற சடங்குகளை பொருத்தமற்ற காரணங்களைக் காட்டிக் கடைப்பிடிக்கவில்லை யென்றுதான் குற்றஞ் சாட்டுகிறார்கள்.

நாங்கள் மேற்கூறப்பட்ட எந்தவிதமான சடங்குகளையும் செய்வதில்லை. செய்ய தேவை இல்லையென்றும் கூறுகிறோம். அத்தகைய சடங்குகளைச் செய்வதற்கு எந்த விதமான அர்த்தமுமில்லை. அதற்குக் கூறப்படும் காரணங்களும் பொருத்தமானதாகத் தெரியவில்லை. ஆகவேதான் அவைகளை நாங்கள் செய்வதில்லை யென்பதுடன் செய்வதும் கூடாது என்வும் குறிப்பிடுகிறோம்.

இந்த சடங்குகளை நாம் ஏன் செய்யவேண்டும்? அவைகளை விட்டுவிட்டால் என்ன? என்ற கேள்விகளுக்கு அவைகள் அந்தக்காலத்திலிருந்து இருந்துவரும் பழக்கங்களாயிற்றே! , அவைகளை எப்படி விட்டுவிட முடியும்? என்ற முறையில்தான் பதில் கிடைக்கிறது. வேறு ஏதாவது தக்க காரணங்கள், பொருத்தமான பதில்கள், அர்த்தமுள்ள, அறிவுக்கும் பொருத்தமான விளக்கங்கள் தரப்படுகின்றனவா? கிடையாதே!

ஏதோ சில காரியங்களைச் சடங்குகள் என்றும் சாஸ்திர முறைகள் என்றும் பழையவழக்கங்கள் என்பதற்காக மட்டும் எந்தவிதமான காரணங்களுமின்றி நம்மையறியாமலேயே நாம் செய்து வருகிறோம். இவைகளைத்தான் நாம் சரியா? தேவைதானா? என்று சீர்தூக்கிப் பார்த்து முடிவு கட்டவேண்டும்.

மக்கள் தமது அன்றாட வாழ்வில் எத்தனையோ காரியங்களைச் செய்கிறார்கள்; செய்கின்ற அத்தனை காரியங்களுக்குமா எண்ணிப் பார்த்துச் செய்து கொண்டிருக்கிறார்கள்! இல்லை! அப்படிச் செய்வதில்லை.

எத்தனையோ காரியங்களை ஏன் செய்கிறோம்! என்ன அர்த்தம், எப்படிப் பொருத்தம் என்றெல்லாம் பார்த்துக் கொண்டிராமலே, ஏன்? ஒரு சிறிதும் எண்ணிப் பாராமலுங்கூடத் தங்களை யறியாமல் பல காரியங்களைப் பலர் செய்துவருவதை நாம் காண்கிறோம்!

உதாரணத்திற்காக நான் சிலவற்றைச் சுற்றிக்காட்ட விரும்புகிறேன். சிலருக்குத் தூக்கம் வருவதற்கு கொட்டாவி வரும். அப்படிக் கொட்டாவி விடும்போது விரல்களால் மூன்று சிட்டிகை போடுவதைப் பார்க்கிறோம். அப்படிப்பட்ட நண்பரைப் பார்த்து, அவர் கொட்டாவி வரும்போதெல்லாம் மூன்று சிட்டிகை போடுகிறாரே, அதற்கு என்ன காரணம் என்று கேளுங்கள்.

கொட்டாவி விடும் நண்பர் சிறிது கோபக்காரராக இருந்தால் முறைத்துப் பார்ப்பார். அல்லது சாந்தமானவராக இருந்தால் மெதுவாக சிரித்துக்கொண்டே அது ஏதோ பழக்கம் —காரணம் ஒன்றுமில்லை என்று பதில் கூறுவார்.

இதைப் போலவே சூளையில் உள்ள பெரியவர், புரசைவாக்கத்தில் நடந்த ஒரு சச்சரவில் பஞ்சாயத்து செய்யப் புறப்படுகிறார் என்று வைத்துக் கொள்ளவாம்.

சூளையிலுள்ள பெரியவர் புரசைக்கம் போவதற்குத் தன்னுடைய வீட்டை விட்டுப் புறப்பட்டுப் போகிருர்.

அவர் புறப்பட்டுத் தெருவில் சிறிது தூரம் செல்லும் போது அடுத்த வீட்டிலுள்ள பூனை எதிர்த்தவீட்டுத் திண்ணைப்பக்கமாக ஒரு எலியைப் பிடிக்க குறுக்கே ஓடுகிறது. இதைக் கண்டவுடனே, பஞ்சாயத்துக்காக வேகமாக நடந்துசென்ற பெரியவர் திடுக்கிட்டுத் திரும்பி வந்து தன் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து விடுகிருர்.

திரும்பி வந்தவர் திண்ணையில் உட்கார்ந்தபடியே 'அடியே காமாட்சி!' என்று தமது மனைவியை அழைப்பார். இப்படி அவர் அழைத்த உடனே அந்த அம்மையார் 'சகுனம் சரியில்லை போலிருக்கிறது' அதுதான் திரும்பி வந்துவிட்டார்' என்றுதீர்மானித்து கையில் தண்ணீருடன் திண்ணைப் பக்கம் வருவார். பெரியவர் அந்தத் தண்ணீரைக் குடித்துவிட்டுச் சிறிது நேரம் உட்கார்ந்த பிறகே தான் மீண்டும் எழுந்து புரசைவாக்கம் போவார்.

இந்தப் பெரியவர் போவதே புரசைவாக்கம் சச்சரவைத் தீர்ப்பதற்காக. குறுக்கே பூனை ஓடியதோ எதிர்த்த வீட்டுப் பக்கம் ஓடிய எலியைத் துரத்திப் பிடிப்பதற்காக! குறுக்கே ஓடிய பூனையைக் கண்டு இவர் திடுக்கிடுவானேன்? திரும்பி வருவானேன்? திண்ணையில் உட்கார்ந்து தண்ணீர் சாப்பிடுவதும்தான் எதற்காக?

இவர் போகின்ற காரியத்திற்கும் பூனை குறுக்கே ஓடியதற்கும் என்ன தொடர்பு இருக்கிறது? ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லையே? என்ருலும் பூனை குறுக்கே ஓடிஞல் அவர் மேலே போகமாட்டார். சகுனத் தடையாகிவிட்டது. போகிற காரியம் தடையாகிவிடும் என்று அஞ்சுகிருர்.

'ஏன் இப்படி'? என்று அந்த பெரியவரைக் கேட்டால் பொருத்தமான காரணம் ஏதாவது கூற முடிகிறதா

என்றால் அதுதானே இல்லை. ' ஏதோ பழக்கம் ' என்று தானே அனைவரும் இப்படிப்பட்ட காரியங்களுக்குப் பதில் கூறுகின்றனர் !

இதே போன்ற மற்றொரு உதாரணத்தையும் குறிப்பிட விரும்புகிறேன். ஒரு வீட்டுத் திண்ணையில் இரண்டு தோழர்கள் உட்கார்ந்துகொண்டு காரசாரமாக அரசியல் பிரச்சினைகளைப் பற்றி விவாதித்துக் கொண்டிருக்கின்றனர். கையில் ' தினமணி ' பத்திரிகை இருக்கிறது. அதில் உள்ள அகில உலகச் செய்திகளை படித்து ரசமான பேச்சு நடக்கிறது,

அந்த இரண்டு தோழர்களில் ஒருவர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர். மற்றவர் பிரஜா சோஷலிஸ்டுக் கட்சியில் பங்கு கொண்டவர். காங்கிரஸ் தோழரைப் பார்த்து, பிரஜா சோஷலிஸ்ட் 'டாக்டர் லோகியாவை காங்கிரஸ் சர்க்கார் கைது செய்தது நியாயமா ?' என்று கேட்பார். அதற்குக் காங்கிரஸ்காரர் உடனே 'உங்கள் பட்டம் தாணுப்பிள்ளை மட்டும் திருவாங்கூரில் குஞ்சன் நாடாரைக் கைது செய்தது மட்டும் என்ன நியாயம் ' என திருப்பிக் கேட்டார். இதைத் தொடர்ந்து ரசமான விவாதம் தொடரும்.

இவர்கள் இப்படி விவாதம் செய்துகொண்டு இருக்கும்போது அந்த வீட்டுக் கூரையில் உள்ள பல்லி ஒன்று ஒரு பூச்சியைப் பிடிப்பதற்காக பாயும். அப்போது அது சிறிது சத்தமிடும்.

பூச்சியைப் பிடிக்க பல்லியிடம் சத்தம் கேட்டதும், திண்ணையில் உட்கார்ந்து அருமையான அரசியல் விஷயங்களைப் பற்றி விவாதித்துக் கொண்டிருக்கும் நண்பர்கள், தாங்கள் பேசிக் கொண்டிருக்கும் பிரச்சினைகளையும் விட்டு விட்டு வாயில் சப்புக்கொட்டி தரையில் மூன்றுதரம் விரலால் தட்டுவார்கள் !

பூச்சி பிடிக்கும் பல்லி சத்தமிட்டால் இவர்கள் ஏன் பேச்சை நிறுத்தவேண்டும், தரையை மூன்று தரம் தட்ட வேண்டும் ?

அந்த நண்பர்களைக் கேட்டால் சாந்தமான நேரமாக இருந்தால் 'என்னமோ பழக்கம் சார், விட மாட்டேன் கிறது' என்று பதில் சொல்வார்கள் ! இன்னும் சிலர் நாம் இப்படிக் கேட்டால், உங்களுக்கு வேறு என்னதான் வேலை ! சுய மரியாதைக்காரர்களுக்கு இப்படி எதையாவது கிளரிக்கொண்டு கேலி செய்து கொண்டிருக்கத்தான் தெரியும்' என்று சலித்துக் கொள்வார்கள்.

பூச்சி பிடிக்கச் செல்லும் பல்லியின் சத்தத்தைக் கேட்டதும் தாங்கள் பேசி அலசிக்கொண்டிருந்த அகில உலகப் பிரச்சினைகளையும் அலட்சியப்படுத்தி விட்டுத் தரையில் மூன்று தரம் தட்டுவதற்குப் பொருத்தமான காரணம் எதையுமே கூற முடியாது.

கொட்டாவி விடும்போது மூன்றுதரம் சிட்டிக்கை போடுவதும், போகும்போது எதிரே பூனை குறுக்கே வந்தால் சகுனம் சரியில்லை என்று திரும்பிவிடுவதும், பல்லி சொல்லுக்குத் தரையைத் தட்டுவதும், அதற்குப் பலன் பார்த்துப் பதைப்பதும் மக்களிடம் எப்படியோ ஏற்பட்டு விட்ட பழக்கமும் அதனால் ஏற்பட்ட அறியாமையினாலுந் தான்.

இவைகளையெல்லாம் காரணந் தெரியாமல் ஏன் செய்கிறோம், எதற்காகச் செய்கிறோம் என்பதைப் பற்றிய எண்ணம் ஒரு சிறிதுமின்றி, தங்களையறியாமலேப பழக்கத்தினால் செய்து வருகிறார்கள். இப்படிப்பட்ட காரண காரியமற்ற செயல்கள் பழக்கத்தின் பேராலும், வழக்கத்தின் மூலமாகவும் பல நடைபெறுவதை நாம் காண முடியும்.

இவைகளைப் போலவேதான் திருமணக் காலங்களிலேயும் சில அர்த்தமற்ற காரியங்களைச் செய்து வருகிறார்

கள். தேவையற்ற பொருள்களைச் சேகரித்து வைத்து வீணாக்குகிறார்கள்.

இத்தனை காரண காரியங்களுடன் கூடிய இப்படிப் பட்ட சடங்குகளைத்தான் நாங்கள் சடங்குகள் கூடாது என்று கூறி, அவைகளை அடியோடு நீக்கிவிட்டுப் பல ஆண்டுகளாக எத்தனையோ சீர்திருத்தத் திருமணங்களை நடத்தித்தான் வருகின்றோம். அதனால் என்ன கெட்டு விட்டது? ஏதும் இல்லையே!

எனவே மக்கள் சடங்குகளைத் தள்ளிவிடுவதைக் கண்டு சந்தேகப்படுவதும், பழைய வழக்கங்களை விட்டு விட்டோமே என்பதற்காகப் பதை பதைப்பதும் அர்த்த மற்றதாகும்!

திருமணத்தின்போது தாலி கட்டும் பழக்கம் மக்களி டையே இருந்து வருகிறது. தாலிக்கயிற்றில் புலியின் நகத் தைப் போலும் பல்லினைப் போலும் பொன்னால் சேர்த்துக் கட்டுகிறார்கள். இதற்கு என்ன அர்த்தம்?

நம்முடைய பெரியவர்களும் இதற்கு ஒரு விதமான விளக்கங் கூறுகிறார்கள். அதாவது பழங்காலத்திலே காடு கள் அதிகம்—நாடுகள் குறைவு. காட்டிலே புலிகளும் அதிகம். ஆதலால் ஒரு மங்கையை மணக்க விரும்பிடும் வாலிபன், காட்டிற்குச் சென்று புலியை வேட்டையாடிக் கொன்று அதனுடைய பல்லையும், நகத்தையும் கொண்டு வந்து, தான் காதலிக்கும் பெண்ணிடம் காட்டுவானாம்! இதோ பார்! நான் வேட்டையாடிக் கொன்ற புலியின் நகம். இதுதான் அதனுடைய பல், என்று மங்கை நல்லா ளிடம் தன் வீரத்தை அறிவிப்பான். இதைக்கண்டு மங்கை யும் இப்படிப்பட்ட வீரனைத்தான் நான் மணப்பேன், என்று கூறி அந்த வீரனையே மணந்து கொள்வாள். தனது காதலனின் வீரத்தின் சின்னமாக அந்த புலி நகத்தையும், பல்லையும் தன் கழுத்தில் அணிந்து கொள்வாள். இதுதான் தாலிகட்டுவதன் பொருள் என்று கூறுகின்றனர். அன்று

காடுகள் அதிகம் நாடுகள் குறைவு. எனவே காட்டி லிருந்து நாட்டுக்குள் புகுந்து மனிதனை தாக்கிடும் புலியை யும் எதிர்க்கும் உடல் வலிமையும் உள்ள உரமும் படைத் தவனைத்தான் பெண்கள் மணக்க வேண்டும் என்ற ஏற் பாடு—தீர்மானம் இருந்தது. பொருத்தமாக இருந்திருக் கலாம்.

இதே ஏற்பாடு இன்றைக்கும் இருக்கவேண்டுமா? உண்மையில் எத்தனை பேர் திருமணம் செய்து கொள்வதற் காக இத்தகைய புலி வேட்டைக்குப் போய்வரத் தயாராக இருப்பர் இந்த நாளில்? ஒருவரும் இருக்க மாட்டார்களே!

இன்று அத்தகைய ஏற்பாடும் பழக்கமும் ஒரு சிறிதும் இல்லையென்றாலும், தாலிக்கயிற்றில் மட்டும் பொன்னால் புலி நகமும் பல்லும் செய்து கோர்த்திட நாம் தவறுவதில்லை இது தேவைதானா?

இன்றைக்கு நாடுகள் அதிகமாகவும் காடுகள் குறை வாகவும் இருக்கின்றன. இருக்கின்ற காடுகளிலும் புலிகள் காணப்படுவதும் குறைவு. அந்த நாட்களைப் போல இன் றும் நான் போய் காட்டில் புலி வேட்டையாடி, புலியைக் கொன்று அதன் பல்லையும், நகத்தையும் எடுத்துச் சென்று என் காதலியிடம் என் வீரத்தைக் காட்டி அவள் கழுத்தில் இவைகளைத் தலியாக கட்டுவேன் என்று எந்த இளை ஞனாவது இன்றைக்குக் கிளம்பமுடியுமா? அப்படிக் கிளம்பி னாலும் காடுகள் அனைத்தும் சர்க்காரின் ரிசர்வ் இலாகா வைச் சேர்ந்திருப்பதால் புலி வேட்டையாட விடமாட் டார்கள்.

பழைய காலத்தைப் போலவே இன்றும் புலி வேட் டையாடி காதலிக்கு தன்னுடைய வீரத்தை வெளிப்படுத் திய பிறகே மணமுடிப்பேன் என்று எவனாவது ஒரு வாலிப வீரன் எப்படியோ ஒரு புலியைக் கண்டு பிடித்து அதனைக் கொன்று விடுகிறான் என்றே வைத்துக் கொள் ளுங்கள்.

தான் வேட்டையாடிக் கொன்ற புலியின் நகத்தையும் பல்லையும் காதலியிடம் காட்டி, "பெண்ணே"! இதோ பார். நானே வேட்டையாடிய புலியின் நகம்! இதுதான் அதனுடைய பல்! என் வீரத்தைக் கண்டாயா! இவைகளை என் வெற்றிச் சின்னமாக உனக்குத் தருகிறேன். இவைகளைக் கயிற்றில் கோர்த்து கழுத்தில் தாலியாகக் கட்டுகிறேன், என்று கூறினுல் எத்தனை பெண்கள் 'சரி' என்று ஏற்பர்! ஏற்கும் சூழ்நிலை இன்று இருக்கிறதா? இல்லையே!

புலியைக் கொன்றேன், இதோ அதன் பல்! அதன் அளவைப் பார்! நகத்தின் கூர்மையைக் கண்டாயா! என்று கேட்கும் காதலனின் வீரத்தையா இந்தக் காலத்துப் பெண் எண்ணிப் பெருமைப் படமுடியும்?

காதலனிடம் சிக்கிய காட்டுப் புலிக்கே இந்தக் கதி ஏற்பட்டு விட்டதே! இப்படிப்பட்டவனிடம் நாம் சிக்கி விட்டால் என்ன பாடுபட வேண்டியிருக்குமோ என்று தானே அஞ்சி நடுங்குவாள்.

இந்தக் காலத்துப் பெண்கள் தன் கணவன்மாரிடம் புலிவேட்டையாடும் அளவுக்கு உள்ள வீரத்தை எதிர் பார்க்கவில்லை. எந்தக் கணவனும் புலி என்றவுடனே கிலி கொண்டிடும் நிலையில் தானே இருக்கிறுர்கள். பெண்கள் இன்று தங்கள் கணவன்மார்களின் மட்டற்ற வீரத்தை மட்டுமே பெரிதாகக் கருதவில்லை.

அவர்கள் தங்களுக்கு வரப்போகும் கணவன் அழகாக இருக்கவேண்டும், அதோடு அன்புடையவனுக நடந்து கொள்ளவேண்டும் நல்ல குணவானுக பண்புள்ளம் படைத்தவனுக இருக்கவேண்டும், வெளியில் செல்லும் போது தங்களையும் அழைத்துச் செல்லவேண்டும். நல்ல நாகரீகமுடையவனுக விளங்கவேண்டும். குடும்பத்தில் அக்கறையுள்ளவனுகத் திகழவேண்டும் என்றுதான்விரும்புகிறுர்கள்.

எதிர்ப்பவர்களைத் தாக்கித் தகர்த்திடும் கட்டான உடலும், உள்ள உரமும், உருட்டு விழியும் உள்ளவனுக ஊரார் கண்டு நடுங்கிடும் மனிதனுகத் தங்கள் கணவன் மார் இருக்க வேண்டும் என்பதைப் பெண்கள் விரும்பிய காலம் போய் விட்டது.

எனவே தாலி கட்டுவதிலும் நாம் செய்யும் காரியம் அர்த்தமுள்ளதா ? அறிவுக்குப் பொருத்தமுள்ளதுதானு என்பதை எண்ணிப்பார்க்க வேண்டுகின்றேன்.

அய்யரை அழைத்து மந்திரம் ஓதாமல், அம்மிமிதித்து அருந்ததி காட்டுவது போன்ற சடங்குகளைச் செய்யாமல் நடைபெற்று வரும் திருமணங்கள் சட்டப்படி செல்லாது என்று மக்களிடையே ஒரு பயம் முன்பெல்லாம் நிலவி வந்தது. சந்தேகம் உதித்து வந்தது.

நான் கேட்கிறேன், யாருக்குச் சட்டத்தின் பாதுகாப் புத் தேவையென்று ? நாமெல்லாம் பெரும்பாலும் ஏழை கள் தானே ! நமக்குப் பிறக்கும் பிள்ளைகளுக்கு நமது சொத்து பற்றிய உரிமை ஏற்பட வேண்டும் என்பதற்குத் தானே சட்டம் தேவைப்படுகிறது.

ஏராளமான பணத்தைத் தேடிவைத்துள்ள பணக் காரர்கள் தானே இதைப்பற்றிக் கவலைப்பட வேண்டும் !

மக்களுக்கு இனி இத்தகைய அச்சமும், ஆயாசமும், பரிதவிப்பும், பீதியும் ஏற்படுவதற்குக்கூட காரணமில் லாமற் போய் விட்டது. ஏராளமான சீர்திருத்த திருமணங் கள் நாட்டில் நடைபெற்று வருகின்ற காரணத்தால், இப்படிப்பட்ட சீர்திருத்தத் திருமணங்களும் இனி சட்டப் படி செல்லுபடியாகும் என்றசூழ்நிலை இப்போது உருவாகி வருகிறது.

ஆச்சாரியார் மந்திரி சபையில் சட்ட மந்திரியாக இருந்த குட்டி கிருஷ்ணன் நாயர் காலத்தில் சீர்திருத்தத்

திருமணங்கள். சுயமரியாதைத் திருமணங்களைப் பற்றிய கேள்வி நீதி மன்றங்களில் எழுந்தது. அதன் காரணமாக அவர் ஏற்கனவே நடந்துவிட்ட சுயமரியாதைத் திருமணங்கள் அனைத்தும் சட்டப்படி செல்லுபடியாகும் என்று ஒரு சட்டம் கொண்டு வந்தார்.

ஆனால் இன்று காமராசர் ஆட்சியில் இதனை ஏற்கனவே நடந்த திருமணங்கள் மட்டுமல்லாமல் இனி நடக்கும் சுயமரியாதைத் திருமணங்களும் சட்டப்படி செல்லுபடியாகும் என்ற முறையில் மாற்றியமைக்கத் திட்டமிட்டுள்ளனர்.

இதன் மூலம் சுயமரியாதைத் திருமணங்கள் சட்டப்படி செல்லாது என்று பேசி வந்த நிலைமை அடியோடு மாறிவிடுகிறது. இப்படிப்பட்ட சீர்திருத்தத் திருமணங்களுக்குச் சட்டத்தின் பாதுகாப்பும் ஏற்பட்டு விட்டது.

இதுவரையில் நாம் சட்டம் ஒப்புகிறதா? இல்லையா என்பதைப் பற்றிக் கவலைப்படவில்லை. சமூகம் மக்கள் மனந்திருந்துகிறார்களா? என்பதை மட்டுந்தான் கவனித்துச் சுயமரியாதைத் திருமணங்களை நடத்தி வந்தோம். நாம் எதற்கும் அஞ்சாது தொடர்ந்து இத்தகைய பணியினைச் செய்து வந்ததன் பயன்தான் இப்பொழுது சட்டம் நம்மைத் தேடி வந்து நமக்குப் பாதுகாப்புத்தரும் நிலைமை ஏற்பட்டு விட்டது.

இதே முறையில் நாம் நாடு முழுவதும் பேசியும், எழுதியும் பிரச்சாரம் செய்து வந்த மற்றொரு காரியமும் இன்று சட்டமாகி வருகிறது. நாம் தான் கேட்டோம் முதன் முதலில் ஒரு ஆண் பல மனைவியரை மணந்து கொள்வது நியாயமா? என்று.

அவனுக்கென்ன ஆண்மகன்! ஒன்னென்ன ஒன்பது மனைவிகளைக்கூட கட்டி ஆளலாம்! என்று பெருமை

பேசிவந்த காலமும் இருக்கத்தான் இருந்தது! சமூகத்திலும் இப்படிப்பட்ட பலதாரத் திருமணத்திற்குச் சம்மதம் அளிக்கப்பட்டிருந்தது. ஆசைக்கு ஒரு மனைவி, சொத்துக்கு ஒரு மனைவி, சுகத்திற்கு வேருெருத்தி, போகிற இடத்தில் வேருெருத்தி, பெருமைக்கு மற்ருெருத்தி என்ற முறையிலே ஒரே ஆண், பல மனைவியரை மணந்துவந்த முறையினை நாம்தான் தகாது எனக் கூறினேம். முறையல்லவென்று கண்டித்தோம்.

பல பெண்களை ஒரு ஆண் மணந்து கொள்வதினுல் எவ்வளவு கேடுகள் விளைந்தன! எத்தனை பெண்கள் கணவனை கட்டிய பிறகு, கணவன் முகத்தைக்கூட பார்க்க முடியாத பயங்கர நிலைமையில் தத்தளித்தனர்? எத்தனை குடும்பங்களில் கண்ணீர் வெள்ளம் புரண்டோடியது.

இந்தக் கொடுமையைக் களையவேண்டும். ஒரு ஆண் ஒரு பெண்ணைத்தான் மணக்கவேண்டுமே தவிர, இஷ்டம் போல் எத்தனை பெண்களை வேண்டுமாஞலும் மணப்பேன் என்று நடப்பது அநாகரிகம் என்று நாம் கண்டித்தோம். அதன் பலனை இன்று காண்கிருேம்!

இன்று சட்டப்படி ஒரு ஆண் ஒரு பெண்ணைத்தான் மணந்துகொள்ள முடியும். ஒரு மனைவி உள்ளபோது மற்ருெரு பெண்ணை மணந்துகொள்வது சட்டப்படி செல்லுபடியாகாது. இதோடு இரண்டாவது மனைவியை மணந்துகொள்ளும் ஆணுக்கும் அவனுக்குப் பெண் தரும் பெண் வீட்டாருக்கும் சட்டப்படி பல வருடம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்படும்.

பல மனைவியரை நான் மணப்பேன். என்னைத் தடுப்பவர் யார், என்று ஆண்மகன் பேசிவந்த காலம் போய்விட்டது. ஆணுக்கு என்ன, எத்தனை பெண்களை வேண்டுமாஞலும் மணக்கலாம். 'ஆண்டவனே பல மனைவியை மணந்துள்ளாரே' என்று பேசிவந்த வைதீகர்களின் போக்

கும் இன்று சட்டத்தின் மூலம் தடுக்கப்பட்டுவிட்டது ஏற்கனவே ஒரு மனைவி இருக்கும்போது மற்றொரு பெண்ணை மணப்பது இன்று கிரிமினல் சட்டப்படி குற்ற மாகும்.

இந்த நிலைமை ஏற்படக் காரணமானவர் யார்? நாம் தானே! கல்லடிகளையும் அதைவிட எதிர்த்தவர்களின் படு மோசமான சொல்லடிகளையும், பிறர் ஏளனத்தையும், ஏசலையும் பொருட்படுத்தாது தாங்கிச் செய்துவந்த சுய மரியாதைப் பணியின் பிரச்சாரத்தின் விளைவாக மக்க ளிடையே ஏற்பட்ட விழிப்புணர்ச்சிதான், சர்க்கார் இப்படிப்பட்ட சட்டமியற்றுவதற்கான சூழ்நிலை ஏற்பட்ட தற்குக் காரணமாகும்.

முன்பெல்லாம் தனது மனைவியைப் பிடிக்கவில்லை என்பதற்காகத் தள்ளிவைத்து விட்டுத் தன்னிஷ்டமாக வேறு மனைவியைத் தேடிக்கொள்வதைப் போலச் செய்ய முடியாது. தனது மனைவியை அர்த்தமற்ற காரணங்களுக் காக எவரும் ஒதுக்கிவிட்டு புது மனைவியைத் தேடவும் முடியாது. இருக்கும் மனைவியைத் தள்ளிவிட்டு வேறு மனைவியை மணம் புரிந்துகொள்ள வேண்டுமானால், கண வன் முதலில் நீதிமன்றத்தில் தெரிவிக்க வேண்டும். பிறகு தன் மனைவி கருத்தரிக்கவே முடியாது என்றோ, அவள் குடும்ப வாழ்க்கைக்கு இலாயக்கே இல்லையென்பதையோ, தக்க டாக்டர்களைக்கொண்டு நிரூபிக்க வேண்டும்.

தன் மனைவிக்குத் தீராத நோய் இருந்தால் நீக்கலாம். அதைக் கோர்ட்டில் டாக்டர் மூலம் உறுதிப்படுத்திக் காட்டவேண்டும். மனைவிக்குக் குட்டம் என்பதையோ அல்லது தீராத பைத்தியம் என்பதையோ கோர்ட்டாரின் முன் நிரூபித்த பின்னர்தான் எந்த மனிதனும் இன்று வேறொருத்தியை மீண்டும் மணக்க முடியும்!

இதைப் போலவே இன்றைக்குச் சட்டத்தின் மூலம் மணமக்களுக்கு விவாகரத்து உரிமை தரப்போகிறார்கள்.

இதற்கான சட்டம் டில்லியில் தயாராகி வருகிறது. இதற்கும் நமது பிரச்சாரம்தான் முக்கிய காரணமாகும்.

மண வாழ்க்கையில் இருவரும் ஒன்றுபட்டு வாழமுடியாத நிலைமை ஏற்பட்டுவிட்டால், அந்த நிலைமையில் அவர்கள் விவாக விடுதலைபெறும் உரிமை இருக்கவேண்டும் என்று நாம் கூறிவந்தோம். நாம் இப்படி கூறிய நேரத்தில் பலரும் ஏளனம் செய்தனர். ஆகாதவேலை, தகாதகாரியம் என்றுகூடக் கூறினர். கட்டிய மனைவிக்கு விடுதலை உரிமை தருவதா ? என்றெல்லாம் ஆர்ப்பரித்தனர்.

இவைகள் அத்தனையையும் தாங்கி, நாம் தொடர்ந்து செய்துவந்த பணி இன்று பலன்தர ஆரம்பித்துவிட்டதே !

எத்தனையோ குடும்பங்களில் நாம் கணவனால் கவனிக்கப்படாத மனைவியரைக் காண்கிறோம். கட்டிய மனைவியைக் கண்ணெடுத்தும் பாராது, விலைமாதரிடமே திரிந்து வரும் வீணர்களால் மனம் வெதும்பித் துடித்திடும் பெண்களையும் நாம் பார்க்கிறோம். ஆகவேதான் கணவனால் கொடுமைப்படும் மனைவியும்சரி, மனைவியினால் தொல்லைக்கு ஆளாகும் கணவனும் சரி, தங்களுக்குள் பிடித்தமில்லாத போது, விவாகரத்து செய்துகொள்ளும் உரிமை பெற்றாக வேண்டும் என்று நாம் வலியுறுத்தி வந்தோம். விவாகரத்துரிமை இருந்ததால், பொருத்தமற்ற திருமணங்கள் தவறுதலாக நடந்துவிட்டாலும் பின்னர் அதனைத் திருத்திக் கொள்ள வழிவகை பிறக்க முடியும். பிடித்தமற்றவர்கள் காலமெல்லாம் கூடி வாழ்வதென்பது நடவாத காரியந்தானே. எனவே பிடித்தமற்றவர்கள் விவாகரத்து கோரி விடுதலைபெறும் உரிமையைப் பெறுவது நன்மைதானே !

விவாகரத்ன் உரிமை வழங்கும் சட்டம் அமுலாக்கப்பட்டுவிட்டால், கண்டபடி திரியும் கணவனை மனைவி தட்டிக்கேட்டு திருந்தாவிடின் விவாக விடுதலை பெற்றுக் கொள்ள முடியும். குடிகாரக் கணவனின் கொடுமைக்கு

நாளெல்லாம் ஆளாகி அவதியுறும் மனைவி அவனிடமிருந்து விடுதலைபெற வழிபிறக்கும்.

மனைவியைக் கவனியாது பிற பெண்கள்மீது நாட்டம் செலுத்தும் கணவனிடமிருந்து விடுதலைபெற மனைவி கோர்ட்டில் வழக்குத் தொடரமுடியும். என் கணவன் வீட்டுக்கு இரவில் வெகு நேரம்கழித்தே வருகிறார். வந்தாலும் என்னிடம் பேசுவதில்லை. சம்பாதிக்கும் பணத்தையும் செலவுக்குக்கூட தருவதில்லை. தூக்கத்தில் காந்தா சாந்தா என்றும் கனவுகண்டு வாய் பிதற்றுகிறார். இவருக்கு என்மீது பிரியமில்லை, வேறு பெண்களுடன் தொடர்பு கொண்டிருக்கிறார் என்று தெரிகிறது. ஆகவேதான் இவரிடமிருந்து விவாகரத்து கோருகிறேன் என்று மனைவி கோர்ட்டில் கூறமுடியும்.

கோர்ட்டாரும் இதைத் தீரவிசாரித்து கேள்விகளுக்கு மேல் கேள்விகளை போட்டு, ஒழுங்கான வாழ்க்கை நடத்த கணவன் இலாயக்குள்ளவன்தானா என்பதை ஆராய்ந்து பார்த்து அவசியமாயின் அந்த மனைவிக்கு விவாகரத்து உரிமையைத் தருவர். இதைப்போலவே குடும்பத்திற்குச் சிறிதும் பொருத்தமற்ற மனைவியையும் ஒழுங்கீனமான பெண்ணையும் விலக்க ஆண்களும் உரிமைகோரலாம். ஒத்த கருத்தின்மை ஏற்படும்போது விலகிவாழ உரிமை பெறுவது இருவருக்கும் நல்லதுதான். இதனால் சமூகத்திற்கும் நன்மை உண்டு.

விவாகரத்து உரிமைக்கான சட்டம் வருவதைப் போலவே நாம் நெடுநாட்களாகத் தேவையென்று பாடுபட்டுவரும் மற்றொரு பிரச்சினைக்காகவும் சட்டமியற்றப் படுகிறது டில்லியில்.

நாம் பல ஆண்டுகளாகக் கூறிவருகிறோம் பெண்களுக்கும் ஆண்களைப் போலவே தகப்பன் சொத்துக்களில் உரிமை இருக்கவேண்டும் என்று.

நாம் இப்படிக் கூறியபோதும் பெரும்பாலேர் எதிர்த்தனர். ஏளனம் செய்து தூற்றவும் செய்தனர். பெண்ணுக்குச் சொத்துரிமையா? பெண்ணிடம் பணம் இருந்தால் ஆணை அவள் எப்படி மதிப்பாள் என்று கூக்குரலிட்டனர். நாம் எதற்கும் அஞ்சாது இதனை வலியுறுத்திப் பிரச்சாரம் செய்துவந்தோம்.

அதன் பலன் இன்று பெண்களுக்குச் சொத்துரிமை தரும் மசோதா விரைவில் டெல்லிப் பாராளுமன்றத்தில் சட்டமாக்கப்படுமென்ற நிலைமை ஏற்பட்டுள்ளது.

நாம் எக்காரணத்திற்காகப் போராடி வந்தோமோ அவைகள் எல்லாம் இன்று சட்டமாகி வருகின்றன என்பதைக் காணும்போது நாம் செய்து வரும் பணி எவ்வளவு மகத்தானது என்பது மட்டுமல்ல, நாட்டுக்குத் தேவையான நல்ல பணியைச் செய்து வந்தோம் என்பதும் தெரிகிறது.

இந்த நிலையைக் கண்டு நாம் பெரிதும் மகிழ்கிறோம், பெருமைப்படுகிறோம்.

இந்த முறையில்தான், நாம் சீர்திருத்தத் திருமணங்கள் செய்து வருவதிலும் வெற்றி கண்டோம்! மேலும் மகத்தான வெற்றிகளைக் காண்போம் என்பதும் உறுதி.

சீர்திருத்த முறையில் திருமணங்களை நடத்த வேண்டும் என்பதற்காக நாங்கள் கூறும் காரணங்களை ஒருவராலும் மறுக்க முடியாமற் போனாலும் சிலர் அந்தக்காலம் முதல் இருந்து வரும் 'பழக்கங்களையா தள்ளி விடுவது' என்று கேட்கிறார்கள்.

அந்தக்காலம், அந்தக்காலம்! என்று பேசி வரும் தோழர்களையும், பெரியவர்களையும் நான் கேட்கிறேன். நீங்கள் குறிப்பிடும் 'அந்தக்காலம், எது? சொல்லுங்கள். நிர்ணயமாக அந்தக்காலம் எந்தக்காலம் என்பதை!

சென்னையில் ஒரு பகுதிக்கு 'சூளை' என்று பெயரிடப்படுகிறது. இங்கிருந்து இதுவரை சூளை என்பதற்குக் குறிப்பிட்ட நிர்ணயம் இருக்கிறது. புரசைவாக்கம் என்பது அங்கேயிருந்து அதுவரையில் பகுதிகள் என்பதற்கு அத்தாட்சியான வரம்பு கூறப்படுகிறது! ஒரு ரூபாய் என்ருல் 16 அணு என்று ஒரு திட்டம் ஏற்பட்டிருக்கிறது. ஒரு வீசை என்பது 40 பலம் கொண்டது என்று ஒரு நிர்ணயம் உண்டு. ஒரு கஜம் என்ருல் இத்தனை அடி அல்லது இத்தனை முழம் என்று அறுதியிட்டுக் கூறமுடியும்.

இதைப்போலவே 'அந்தக்காலம்' அந்தக்காலம் என்று பேசிவரும் பெரியவர்கள் 'அந்தக்காலம்' எதிலிருந்து எதுவரை அந்தக்காலம்? அவர்கள் எடுத்துக் காட்டிக் கூறும் காலம் எது? என்பதற்கு ஒரு நிர்ணயம் கூறட்டுமே! கூற முடியுமா அவர்களால்? என்னுடைய மகன் இன்று பத்தாவது வகுப்பில் படிக்கிருன். அவன் படிப்பில் ஏதாவது தவறுகள் செய்யும்போது நான் கூறுகிறேன். "இதெல்லாம் என்ன படிப்படா? இதற்கு எவ்வளவு கஷ்டப்படுகிறீர்களே! அந்தக் காலத்தில் நான் படித்தபோது—?" என்று பேசுகிறேன்.

நான் குறிப்பிடும் 'அந்தக் காலத்தை'யா இந்த வைதீகப் பெரியவர்கள் அந்தக்காலம் என்று பேசுகிருர்கள்?

நான் சிறுவனுக இருந்தபோது நான் என்னுடைய மகனைப் பார்த்து கேட்டதைப் போலவே என்னுடைய தந்தை என்னைப் பார்த்து கேட்டார். நீ படிப்பது என்னடா படிப்பு. அந்தக் காலத்தில் நாங்கள் படித்த படிப்பு என்ன அருமையானது தெரியுமா? என்று இதைப்போலவே எனது தகப்பனுரைப் பார்த்த அவருடைய தகப்பனுர், அதாவது என் பாட்டனுர் இதே முறையில்தான் கேட்டார். என்னுடைய பாட்டனுரின் தகப்பனுர்கூட எனது பாட்டனுரைப் பார்த்துக் கேட்டார். நீங்கள் படிப்பதற்கு

இப்படி அழுகிறீர்களே ! அந்தக் காலத்திலே நாங்கள் எல்லாம் மணலைக் கொட்டி அதில் ஹரநமோத்து சிந்தம் என்று கைவிரலால் எழுதி முடிவதற்குள் கைவிரலிலுள்ள இரத்தம் எல்லாம் சுண்டியே விடும் என்று.

இவர்களில் யார் குறிப்பிடும் அந்தக்காலத்தை வைதீகர்கள் அந்தக்காலம் என்று கூறுகிறார்கள். நான் குறிப்பிடுகிற அந்தக்காலத்தையா ? அல்லது எனது பாட்டனார் சொன்னாரே அந்தக் காலமா ? அதைவிட அவரது தகப்பனார் கூறினாரே அந்தக் காலமா ? எந்தக் காலத்தை இவர்கள் அந்தக்காலம் என்று கூறுகிறார்கள் ? அந்தக் காலம் எது என்பதற்கு ஒரு நிர்ணயம் ஏற்படுத்தி விட்டுப் பிறகு கூறட்டும் அந்தக்கால பழக்கங்கள் என்று. அதற்குப் பிறகு நல்லதா கெட்டதா என்பதைப் பற்றி பேசுவோம். அந்தக்காலம் எந்தக்காலம் என்பதைக் குறிப்பிட்டுக் கூறிடாமல் வெறும் அடிமூச்சுக் குரலால் அந்தக்காலம் அழிவதா ? அந்தக்கால ஏற்பாடுகள் தொலைவதா ? என்று உரத்துப் பேசுவதால் என்ன பயன் ?

இன்று வெள்ளைக்காரன் கூடத்தான் பேசுகிறான். நாங்கள் அந்தக் காலத்தில் இந்தியாவை ஆண்டபோது என்ன செய்தோம் தெரியுமா ? என்று இதைப்போலவே முஸ்லீம்களுந்தான் அந்தக் காலத்தில் இருந்த செல்வாக்கே செல்வாக்கு ' என்று முஸ்லீம்கள் பேசுகிறார்கள். ' அந்தக் காலத்தில் ஆண்ட விக்கிரமாதித்திய ராஜாவின் காலமே காலம் ' என்று இந்துக்களும் பெருமையோடு பேசுகின்றனர். பௌத்தர்கள் அந்தக் காலத்தில் ஆண்ட அசோகனை நினைக்கிறார்கள். இப்படிப் பலரும் அந்தக் காலத்தைப்பற்றி பலவிதமாகப் பேசுகிறார்களே! பெருமைப்படுகிறார்களே! இதில் எதை அந்தக்காலம் என்று திட்டவட்டமாக ஏற்பது ? பின்பற்றுவது.

அந்தக்காலம் எது என்பதற்கு யாராலும் திட்டவட்டமானமுடிவு கூறமுடியாது. நிர்ணயத்தையும் காட்ட முடி

யாது. அந்தக்காலம் என்பது முடிவுற்றது. அளவிட்டுக் கூற முடியாதது. அளக்க அளக்க நீண்டு கொண்டே போகிற கெஜக்கோல் அது!

ஆகவே 'அந்தக்காலம் என்று பேசுவதும்' அந்தக் கால ஏற்பாடுகள் என்று கூறுவதும், பழக்கங்கள் என்று சுட்டிக் காட்டுவதும் நிச்சயமற்றவைகளாகும். பொருத்த மானதாகவும் இல்லாதவைகளாகும்.

வைதீக நண்பர்களையே கேட்கிறேன்! அவர்கள் புராணப்படி பார்த்தாலும் அந்தக்காலம் என்பதைக் கூற முடியுமா? ஹரிச்சந்திரன் ஆண்ட காலமா? இராமன் ஆண்ட காலமா? அவருக்கு முன்னர் அறுபதினாயிரம் மனைவியரை மணந்து வாழ்ந்ததாகப் பேசப்படும் தசரதன் காலமா? அதற்கு முன்னர் இருந்ததாகக் கூறப்படும் இலட்சுவாகு பரம்பரையினர் காலமா? எது அந்தக்காலம்? கூறுங்கள்! உலகம் தோன்றியது எனக் கூறப்படும் காலமா? அல்லது உலகம் தோன்றாத அநாதி காலமா? மகாவிஷ்ணு ஆலிலைமீது திருப்பாற் கடலில் பள்ளிகொண் டிருந்தார் என்று கூறும் புராண காலமா? அப்படிப்பள்ளி கொண்டிருந்த மகாவிஷ்ணுவின் உந்திக்கமலத்திலிருந்து முளைத்த தாமரை மீது பிரமா வீற்றிருந்த காலமா? பிர்மா வின் நாவில் இருந்து சரஸ்வதி வேதங்களை ஓதிய காலமா? அது எந்தக்காலம்? புராணங்களின்படி பார்த்தாலும் அந்தக்காலம் இதுதான் என்றோ, அது தான் என்பதாகவோ உறுதியாகக் கூறமுடியுமா? முடியாதே! முடியவில்லையே!!

எந்தக் காலத்தையாவது குறிப்பிட்டு அது தான் 'அந்தக்காலம்' என்று, நாங்கள் கூறும் காலம் என்று சொல்லிவிடட்டும். அந்தக்காலத்தில் உள்ள பழக்க வழக் கங்களை மட்டும்தான் பின்பற்ற வேண்டும் என்றுவது நிர்ணயம் செய்யட்டும்.

அப்படி ஏதாவது ஒரு காலத்தை 'அந்தக்காலம்' என்று தீர்மானித்து விட்டாலும், அதன்படி நடக்க, வாழ யாராலும் முடியாதே!

அந்தக்காலம் போலவே இந்தக்காலத்திலும் நடக்கத்தான் வேண்டுமென்றாலும், காஞ்சீபுரத்திலுள்ள நான் இந்தத் திருமணத்திற்கு வர வேண்டுமானால், நான்கு நாள் முன்னதாகவல்லவா புறப்பட்டு இருக்கவேண்டும். கட்டுச் சோறு கட்டிக்கொண்டு கட்டை வண்டியில் பிரயாணம் செய்ய வேண்டும். அல்லது கால் நடையாக காடு மேடு சுற்றித்தானே வந்தாகவேண்டும். ஆனால் இன்று அப்படி நடக்க முடியுமா ? அல்லது நடப்பது தான் நல்லதா ?

இராமன் காலந்தான் அந்தக்காலம் என்று முடிவு கட்டினால் அந்த நாளைப்போலவே இந்த நாளிலும் வாழ முடியுமா ? வாழத்தான் வேண்டுமென்றாலும் முடியுமா ? இராமர் காலத்தை நல்ல காலம் என்று போற்றிப் புகழ்பவர்களால் கூட அப்படி வாழ முடியாதே !

இராமர் காலத்தில் இரயில் கிடையாது. ஆகவே இரயில் கூடாது என்று இந்த நாளில் தள்ளிவிட முடியுமா ? அல்லது இராமரே ஏறாத இரயிலில் நாம் ஏறுவதா ? என்று இரயிலில் ஏறாமல் எத்தனை இராமபக்தர்கள் இருக்கிறார்கள். இருக்க முடியும். இராமர் காலத்தில் இல்லாத ரயிலில் ஏறித்தானே இராமேசுவரம் போகிறார்கள். அதைப்போலவே அரிச்சந்திரன் காலத்தில் ஆகாய விமானம் இல்லையென்று ஆகாய விமானம் ஏறாமலா இருக்கிறார்கள். தர்மராஜா காலத்தில் தபால் கார்டு இல்லை ; தந்தி கிடையாது என்று தள்ளி விடுகிறார்கள் ? கிடையாதே !

எனவே அந்தக்காலம் அந்தக்காலம் என்று பேசுவதும் அந்தக்காலப் பழக்கங்கள் என்று கூறி அவைகளை அப்படியே பின்பற்ற வேண்டும் என்று பிடிவாதம் செய்வதும் பொருத்தமற்றவைகள் என்பது நன்கு விளங்குகிறது.

எந்தக்காலத்துப் பழக்கமானாலும் சரி ; அது இந்தக் காலத்துக்குப் பொருந்துகிறதா, வாழ்க்கைக்குத் தேவை

யானது தானா? அறிவுக்கு ஏற்றதா? என்றுதான் நாம் பார்த்துப் பின்பற்றவேண்டுமே தவிர; அந்தக்காலத்துப் பழக்கம் என்பதற்காகவும் கண்ணை மூடிக்கொண்டு எதையும் அர்த்த மற்றும், பொருத்தமில்லாமலும் பின்பற்றக் கூடாது. உலகத்தில் மற்ற நாடுகள் எவ்வளவோ முன்னேற்ற மடைந்துள்ளன. இந்நாடு மட்டுமே தான் எல்லாத் துறைகளிலும் பழம் பெருமை பேசிக்கொண்டும், அந்தக்காலம் என்று கூறிக் கொண்டும் முன்னேறாமல் பின் தங்கிக்கிடக்கிறது. நாமும் மற்ற நாடுகளைப் போலவே எல்லாத்துறைகளிலும் முன்னேறியாக வேண்டும். நாம் அறிவுத் துறையில் முன்னேறியாக வேண்டும்.

நாம் அறிவுத் துறையில் முன்னேற்றமடைந்தால் தான் நம்மிடமுள்ள பழமைக் கருத்துக்கள் அகலும், பாசி பிடித்துப்போன கண்மூடி பழக்கங்களும் தொலையும், மத மூட நம்பிக்கைகள் முறியடிக்கப்படும் என்பதை நாம் உணர வேண்டும்.

இப்படிப்பட்ட சுயமரியாதைத் திருமணங்கள் செய்து கொள்வதும், சீர்திருத்தத் திருமணங்களைப் பரப்புவதும் அறிவுத்துறையில் நாம் முன்னேறுவதற்கான அடிப்படைகளில் முக்கியமானதாகும். சீர்திருத்தம் திருமணத்திலிருந்து துவங்குவது,வாழ்வில் நல்லதொரு நிகழ்ச்சியாகும், எனவே இதைக் கண்டு யாரும் அச்சப்படத் தேவையில்லையென்று மீண்டும் கேட்டுக் கொள்கிறேன். உலகம் அறிவுத்துறையில் எவ்வளவோ முன்னேறி யிருந்துங்கூட இந்நாடு மட்டும் உலக முன்னேற்றத்துடன் ஒட்டி முன்னேறாது பழமையிலே பெருமைகண்டு பின்தங்கிக் கிடக்கிறது என்று குறிப்பிட்டேன்.

இதனை நம் நாட்டில் தினமும் காணும் காட்சிகளிலிருந்தே காணலாம். அண்மையில் வடநாட்டில் நடந்த கும்பமேளா என்ற விழா எதைக் குறிக்கிறது? அதில்

நடந்த நிர்வாண ஊர்வலம் எதைக் காட்டுகிறது? அறிவுத் துறையில் ஏற்பட்ட முன்னேற்றத்தையா? அல்லது இன்னமும் இந்த நாட்டில் காட்டுமிராண்டித்தனம் மக்களிடம் இருக்கிறது என்பதைத்தானே காட்டும்! இத்தகைய காட்சியைக் காணும் எந்த வெளி நாட்டானும் நம்மைப் பற்றி எவ்வளவு கேவலமாக எண்ணுவான்.

இதைப்போல நான் அடிக்கடி குறிப்பிட்டு வரும் கோவைக்கு அருகிலுள்ள காரமடை என்ற ஊரில் நடக்கும் அர்த்தமற்ற ஆபாசத் திருவிழாவும் இருக்கிறது! அங்கே அனுமார் ஆவேசமாடும் ஒரு சாமியார் வாயிலிட்டு மென்று கீழே துப்பும் எச்சில் வாழைப்பழத்தைப் புசிப்பதால் பிள்ளைப்பேறு கிடைக்குமென்று நம்பி, எத்தனையோ பெண்கள் எடுத்துப் புசித்து வருகிறார்களே! இதெல்லாம் சரியா? இந்தகாலத்திற்கும் தேவைதானா? அண்மையில் எங்கோ ஒரு இடத்தில் பாரதப் பிரசங்கம் நடந்ததாம். அதன் கடைசி நாளன்று பீமன் வேஷம் போடுபவன் துரியோதனனைக் கொல்வதற்காகும் படுகளம் நடந்தது. அன்று 6 அடி நீளமுள்ள துரியோதனன் உருவம் மண்ணினால் செய்யப்பட்டிருந்தது. இதனை பீம வேடதாரி வெட்டி வீழ்த்தினான். இதனைச் சுதேசமித்திரன் பத்திரிகை படம் பிடித்து பெரிதாகப் போட்டுக் காட்டியிருக்கிறது.

இப்படிப்பட்ட படத்தை பார்க்கும் வெளிநாட்டான் என்ன நினைப்பான்? இன்னமும் இந்த நாட்டில் மண் பொம்மை வெட்டுவதில்தான் வீரம் காணப்படுகின்றது என்று தானே கருதுவான்.

இப்படிப்பட்ட கேவலமான பழக்கங்களையும், அர்த்தமற்ற திருவிழாக்களையும் பொருத்தமற்ற சடங்குகளையும் விட்டொழித்தால் நாம் உண்மையிலேயே முன்னேற முடியும். ஆகவேதான் சீர்திருத்த திருமணங்கள் நடப்பதின் மூலம் அறிவுப் பணி நன்கு வேரூன்றி நிலைத்துப்பரவ வழியிருக்கிறதென்று குறிப்பிடுகிறோம்.

சுயமரியாதைத் திருமணங்கள் ஒவ்வொரு குடும்பத்திலும் நடக்கத் தொடங்கி விட்டால், நாட்டிலே பரவிக் கிடக்கும் மூடக்கொள்கைகள் தாமாகவே சீந்துவாரற்றுப் போய்விடுமே. ஆகவேதான் இப்படிப்பட்ட மணம் செய்துகொள்ளும் இந்த மணமக்களை நான் பெரிதும் பாராட்டுகிறேன்; மனதார வாழ்த்துகிறேன்.

இந்தத் திருமணத்தில் தேவாரம் ஒன்று பாடுவார்களா? ஒரு திருவாசகமாவது பாடக்கூடாதா என்றும் சிலர் கேட்டதாக நண்பர்கள் குறிப்பிட்டார்கள். இப்படிப்பட்ட திருமணங்களிலே அப்படிப்பட்ட பாடல்களைப் பாடத்தான் மாட்டோம், பாடவும் கூடாது என்பதை நண்பர்களுக்குத் தெரிவித்து விடுகிறேன்.

அந்தக்காலத்தில் ஊசி முனையில் நின்றும், ஒற்றைக் காலில் நின்றும், பற்பல விதமாக அகோர தவம் செய்த முனிவர்கள் அனைவரும் ஆண்டவனைப் பார்த்து எதைக் கேட்டார்கள்? மற் ஆழ்வார்களும் சரி, நாயன்மார்களும் சரி, கடவுளிடம் எதைக்கோரினார்கள்?

மக்கள் வாழ வேண்டும்; உலகம் உருப்பட வேண்டும்; வறுமை ஒழியவேண்டும்; உலகத்தில் உண்மை தழைக்க வேண்டும் என எந்த முனிவராவது, எந்த பக்தனாவது நாயான்மாராவது கேட்டிருக்கிறார்களா? இல்லையே! பொது நன்மைக்காக கடவுளை வரம் கேட்ட பக்தர்கள் யாரையாவது காட்ட முடியுமா? ஒருவரும் கிடைக்கமாட்டார்கள். எல்லோரும் தங்கள் சுயநலத்தைத் தானே பெரிதாகக் கருதியிருக்கிறார்கள். 'எனக்கு இந்திரப் பதவியைக் கொடு' என்றொரு முனிவர் கேட்பார். எனக்குக் காமதேனு வேண்டும். கற்பக விருட்சம் தேவை என்று மற்றொரு தவசி கேட்டிருக்கிறார். மேனகை, ரம்பை, திலோத்தமை, ஊர்வசி போன்ற தேவலோகத்து நடன மாதர்களின் சுகத்தையனுபவிக்க சொர்க்கவாசம் தேவையென்று ஒரு நாயன்மார் கேட்பார்.

வைகுந்த பதவியையும் சிவலோக வாசத்தையும் தங்களுக்காக கேட்ட அந்த முனிவர்களையும், அவர்கள் பாடிய பாடல்களையும் இந்தத் திருமணத்தில் அழைப்பதும் பாடுவதும் பொருத்தமற்றது தானே! இங்கே வந்தாலும் அவர்கள் தங்களுக்குத் தான் எதையாவது கேட்பார்களே தவிர நமக்காக ஒன்றும் பேசமாட்டார்கள்; கேட்கமாட்டார்களே! ஆகவேதான் இங்கே எந்தப் பக்தரையும் சரி, அய்யரையும் சரி, நாங்கள் அழைக்கவில்லை அழைப்பதுமில்லை. அதைப் போலவே நமக்காக எழுதப்படாத பாடப்படாத எந்தப் பாடலையும் பாடுவதில்லை. பாடவும் விடுவதில்லை.

நம்மைப் பற்றியும், நமது வாழ்க்கையைப் பற்றியும் கவலைப்படும் அக்கரை காட்டும் நண்பர்களைத் தான் நாம் அழைக்கிறோம். அப்படிப்பட்டவர்களால்தானே நாம்முன்னேற வழிவகைகளைக் காட்டமுடியும்! கூறமுடியும்.

ஆகவே தேவாரம் பாடவில்லை. அய்யரைக் கூட்டிட்டு மந்திரம் ஓதவில்லை என்பதற்காக எவரும் கவலைப்படத் தேவையில்லை யென்பதை மறுமுறையும் வலியுறுத்திக் கூறுகிறேன்.

கடைசியாக சில பெரியவர்கள் இங்கே அம்மி மிதித்து அருந்ததி காட்டவில்லை, ஆண்டவனைப் போற்றவில்லை என்று குறைபடுவதற்கும் அர்த்தமில்லை என்று சொல்லி விடுகிறேன்.

திருமணத்தில் அக்கினி வளர்ப்பது எதற்காக? திருமணத்திற்கு அக்கினித்தேவன் சாட்சியாக இருக்கிறான் என்பதற்குத் தானே! அந்த அக்கினி பகவான் யோக்கியதை என்ன? அருந்ததி என்று ஒரு சினிமாகூட வந்ததே! அதைப் பார்த்தவர்களுக்கு மிக நன்றாகத் தெரியும், நான் கூறப்போவது. ஒரு காலத்தில் சப்தரிஷிகள் ஒரு யாகம் செய்தனராம். அந்த யாகத்திற்குச் சென்று அவிர்ப்பாகம்

வாங்கச் சென்ற அக்கினிபகவான் அந்த ஏழு ரிஷி பத்தினிகள் மீதும் காமுற்றானும், இதனை வெட்கத்தை விட்டுத் தன் மனைவியிடமே கூறினானும். இந்தக் காலத்தில் எப்படிபட்ட கேடுகெட்ட மனிதனுங்கூட தான் கட்டிய மனைவியிடம், தான் பிற பெண்ணின்மீது ஆசை வைத்திருப்பதாகக் கூறமாட்டான். ஆனால் ஆண்டவனான அக்கினி தன் மனைவியிடம் தான் ரிஷிபத்தினியிடம் காமுற்று இருப்பதைக் கூறியவுடன் தன் மனைவியரையே அதற்கான ஏற்பாடுகளையும் செய்யும்படிக் கேட்டானும். அவன் மனைவியும் சப்த ரிஷிகளில் ஆறு பேர்களின் மனைவியைப் போலவே உருவமெடுத்து தன் கணவனின் காமத்தைத் தடுத்தாளாம். ஆனால் ஏழாவது முனிவரின் மனைவியான அருந்ததியைப்போல் மட்டும் உருவம் மாறவில்லைஎன்றும், அதற்குக் காரணம், அருந்ததி ஆதித்திராவிடப் பெண்மணி என்றும் புராணம் மேலும் தொடருகிறது.

பிறர் மனைவியைக் காமுறும் தீய குணம் படைத்த அக்கினியையா நம்முடைய திருமணக் காலங்களிலே சாட்சிக்கு அழைப்பது? கூடாது கூடவே கூடாது. ஆகவே தான் அக்கினி வளர்ப்பதில்லை. இப்படித்தானே மற்ற கடவுள்களும் இருக்கிறார்கள்? புராணங்கள் சொல்லுகிறபடியே பார்த்தாலும், எந்தக் கடவுளும் யோக்கியமான கடவுளாகத் தெரியவில்லையே! பிரமன் திலோத்தமையைக் கெடுத்தான். சிவன் தாருகா வனத்து ரிஷிபத்தினிகளைக் காமுற்றான். இந்திரன் அகலிகையையும், சந்திரன் குரு பத்தினி தாரையையும், மகாவிஷ்ணு சலந்திரன் மனைவியையும் கெடுத்தனர். இப்படித் தான் புராணங்கள் சொல்கின்றன.

இப்படிப்பட்ட ஒழுக்கக் கேடான கடவுளையா நாம் நமது விழாவிற்கு வழிகாட்டியாகக் கொள்வது? காமக் குரோதம் மிகுந்த அக்கினி பகவானை அழைத்து அவனைச் சாட்சியாக வைத்துத் திருமணம் நடத்துவது அறிவுக்குப் பொருத்தமானதுதானா? அதைப்போலவே கண்மூடித்தன

மாக நடந்து, காமக் களியாட்டங்களில் ஈடுபட்ட மற்றக் கடவுள்களையும் திருமணக் காலங்களிலே எண்ணுவதும் கூடாதே!

இவைகளை நாம் கூறும்போது சில ஆத்திக நண்பர்களுக்குக் கோபம் ஏற்படலாம்! கோபம் ஏற்பட்டு என்ன பலன்? நாங்களாகக் கதைகட்டி எதையும் கூறவில்லையே?

நாங்கள் எடுத்துக்காட்டி விளக்குவதும், ஆபாசங்கள் என்று கூறிக் கண்டிக்கும் ஆண்டவன் திருவிளையாடல்களும் கற்பனைகள் அல்லவே அல்ல! அவைகள் அத்தனையும் பக்தர்கள் பக்தியோடு படித்துப் பாராயணம் செய்து வரும் புராணங்களில் காணப்படுபவைகள் தான் என்பதை ஆத்தீக நண்பர்கள் உணர்ந்து திருந்த வேண்டுகிறேன். கடவுள் என்றும், மதம் என்றும், சாஸ்திர சடங்குகள் என்றும், மக்கள் தங்கள் காலத்தையும், கருத்தையும், நேரத்தையும், நினைப்பையும், உழைப்பையும், ஊக்கத்தையும், பணத்தையும், பகுத்தறிவையும் சிறிதும் பயன்படுத்தாது பாழாக்குவதைத் தடுத்தாகவேண்டும்!

பழைய காலத்தைப் போல நாம் நடக்க முடியாது. நடக்கத் தேவையுமில்லை. புதிய கருத்துக்களைத் தைரியத்துடன் கவனித்து ஏற்று புதுவாழ்வு நடத்த நம்மை நாம் தயாராக்கிக் கொள்ள வேண்டும். மக்களைப் பழமைப் பிடியிலிருந்து மீட்டு, பகுத்தறிவுப் பாதையில் நடத்திச் செல்ல திராவிட முன்னேற்றக்கழகம் பெரிதும் பாடுபட்டு வருகின்றது. பழமைக் கருத்துக்களையும், மத மூடநம்பிக்கைகளையும், அர்த்தமற்ற சடங்குகளையும், கண்மூடி வழக்கங்களையும் மக்கள் அடியோடு விட்டொழிக்க வேண்டுமென்று தி. மு. க. பலமாகவே வற்புறுத்தி வருகின்றது.


சுயமரியாதைப் பிரச்சாரந்தான், சமுதாய சீர்திருத்த முன்னேற்றந்தான் தி. மு. கழகத்தின் அடிப்படை வேலையாக கருதப்பட்டு வருகிறது.

ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்ற கருத்துடன் வாழ்ந்த திராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள் நாம் என்பதை மக்கள் உணர்ந்து, இனத்தால் ஒன்றுபட்டு வாழும் முறையை மக்களிடையே எங்கள் கழகம் ஏற்படுத்தி வருகின்றது.

நாம் திராவிடர், நமது இனம் திராவிடம், நமது கலை கலாச்சாரம் இவையிவை என்பதை மக்கள் நன்ருக உணர வேண்டும். அப்போதுதான் பிறப்பால் உயர்வு தாழ்வு கற்பிக்கும் மனப்பான்மை வேரோடு அழியும். மதமூட நம்பிக்கைகள் இருந்த இடம் தெரியாமல்மறையும். கருத்தற்ற கண்மூடிப் பழக்கவழக்கங்களும் மாய்ந்தொழியும். ஆகவே நாமெல்லாம் திராவிடர், நமது இனம் திராவிடம் என்ற உணர்ச்சி மக்களிடையே ஏற்பட்டுப் பெருகி திராவிட சமுதாயம் நல்வாழ்வு வாழ வழி வகுப்போம்.

நாம் எந்தெந்தக் கொள்கைகளை வலியுறுத்திப் பாடுபட்டு வருகிருேமோ அவைகளில் சில இன்று சட்டமாகி வருகின்றன என்று குறிப்பிட்டேன். இதனுல் நமது பணி நாட்டு மக்களுக்கு மிகவும் தேவையானது, அவசியமானது என்பதை அறிகிருேம். நமது எண்ணம் ஈடேறியதைக் கண்டு மகிழ்கிருேம்.

இங்கிலையில் நாம் அறிவுத் துறையில் முன்னேறவும் சமுதாயம் சீர்திருந்தவும் அடிப்படையான இத்தகைய சீர்திருத்தத் திருமணங்களைத் தொடர்ந்து செய்துவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



# மறுமலர்ச்சி

"பிடி சாபம்"

"ஏன் ஸ்வாமி! என்ன அபசாரம் செய்துவிட்டேன்?"

"அபசாரம் செய்யவில்லையா? உனக்கு விசேஷ ஆணவம் பிடித்துவிட்டது. எதற்கும் எப்போதும், தமிழ்! தமிழ்!! என்று கூவுகிறாய். தமிழில் பேசு; தனித்தமிழைத் தேடு: தமிழிலே எழுது; தமிழில் பாடு என்று கிளர்ச்சிகள் செய்கிறாய். தமிழர் நாகரிகம் தமிழர் நிலை என்று பேசுகிறாய். தமிழ்நாடு என்றும் கேட்கிறாய். உன் தொல்லை வளர்ந்து விட்டது"

"இதுவா அபசாரம்? தமிழன் தமிழை, எழுத்தில் எண்ணத்தில், இசையில், காண கேட்க விரும்புகிறான். இது எப்படித் தவறாகும்?"

"தமிழ் இசை ஏன்? இருக்கிற இசை போதாதா? இத்தனைக் காலமாக இருந்துவந்த 'சுஜன ஜீவனா' வும் இனிமை ததும்பும் 'சுனோ சுனோ' வும் இருக்கும்போது தமிழ்ப் பாடல்கள் என்று வேறு ஏன் வேண்டும்?"

"தமிழனுக்குத் தமிழ்ப் பாடல் வேண்டாமோ?"

"தமிழா, நீ இங்ஙனம், எதிலும் தமிழ் தமிழ் என்று பேசிக்கொண்டே போகிறாய். அது எங்கு கொண்டுபோய்

விடும் தெரியுமோ? நீ குறுகி, கூனி குவலய மறியாத் தவளையாகி விடுவாய்.''

"இல்லையே! தமிழில் எழுதும்போது, இன்பம் காண்கிறேன். தமிழ்க் கவிதை, உள்ளத்தைக் கொள்ளை கொள்கிறது. தமிழ் இசை, நெஞ்சை அள்ளுகிறது. தமிழில் இருக்கும் இனிமையை உண்ண நான் அவாவுறுவது குற்றமாயின், நான் குற்றவாளிதான். ஆனால், உமது நோக்கம் என்ன? நீர் தமிழரா? ஆமெனில், உமக்கேன் இந்தத் தமிழ்ப் பற்று உண்டாக வில்லை? தமிழைக் கண்டதும் ஏன் பதைக்கிறீர்? அது எழுத்தாக வந்தால் எதிர்க்கிறீர். இசையில் வந்தால் சீறுகிறீர். நீர் ஆரியராதலால் எதிலும் ஆரியம் இருக்கப் பாடுபடுகிறீர். ஆரியத்தை ஒழிக்க, தமிழர் எந்தத் துறையிலே பாடுபட முன் வந்தாலும் எதிர்க்கிறீர். இனி உமது எதிர்ப்பைக் கண்டு, தமிழன் தன் காரியத்தைக் கவனியாவது இருக்கப் போவதில்லை. தமிழா! உன் தோள் வலிமை, தரணியெலாம் அறியாதோ! என்றதோர் இசை கேட்டேன். தடுக்க முடியாத பேராவல் கொண்டேன், தமிழே விழைவேன். அதை வளர்க்கவே முயலுவேன்.!'

இது ஊரார் பல்வேறு இடங்களில், உரையாடுவதன் சுருக்கம். தமிழர் என்ற சொல் கிளப்பிவிட்ட எழுச்சி, எங்கெங்கு ஆரியம் தங்கித் தொல்லை தருகின்றதோ, அங்கெல்லாம், அதனை அறுத்தொழிக்கக் கிளம்பி விட்டது. அது கண்டு ஆரியர், தமது ஆதிக்கம் அழிவுபடுவதைத் தடுக்க, இன்று அண்டமுட்டக் கூக்குர லிட்டுப் பார்க்கின்றனர். நில வொளியைக் கண்டு குக்கல் குலைக்குமாம்!

தமிழ் நாட்டிலே, தமிழ்ப்பாடல் கிடையாது. பாட வேண்டுமானால், தமிழ்ப் பாடகர்கள் கூச்சப்படுகின்றனர். தியாகய்யரின் கீர்த்தனங்களென்ன, சாமா சாஸ்திரிகள் சுருதிகளென்ன, மற்றுமுள்ள தெலுங்குக் கீர்த்தனங்களைப் பாடினால் சங்கீத விற்பன்னர்கள் என்று பெயர் கிடைக்கும். தமிழில் என்ன பாடுவது! மள மளவென்று

ஆறு தியாகய்யர் கிருதிகள் பாடிவிட்டு 'சுரம்' இரண்டு கிருதிகளுக்குப் போட்டுவிட்டு, ராகமாலிகையை ரசமாகப் பாடிவிட்டு ஜ்வாளிக்குப்போய், கடைசியில் இரண்டு தமிழ்த் துக்கடாவைக் கிடுகிடுவெனப் பாடிவிட்டு, "நீ நாம ரூபகு" என்று மங்களம் பாடி விடுவதைச் சங்கீத வித்வான்கள் சம்பிரதாய மாக்கிவிட்டனர். பெரிய வித்வான் என்பதற்கு இலட்சணமே இது தான் என்று கருதிவிட்டனர். இதனை எதிர்த்து யாராவது தமிழ்ப் பாட்டுப் பாடக்கூடாதா என்றால், நாடக மேடைபோல் ஆகி விடுமே என்று நையாண்டி செய்வர். இது தமிழ் நாட்டில் பல காலமாக இருந்து வரும் வாடிக்கை.

இசை, இன்பத்தைத் தரவேண்டுமானால், அதைக் கேட்போரின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ள வேண்டுமானால், யார் முன்னால் பாடல் பாடப்படுகிறதோ, அதை அவர்கள் புரிந்து கொள்ளக் கூடியதான மொழியில் இருத்தல் வேண்டும். இது அறிவுத் துறையில் அரிச்சுவடி! இதனை 'ஆரிய மேதாவிகள்' மறுக்கின்றனர்! என்ன அறிவீனம்!

நீக்ரோவின் நடனத்தைக் காண்கிறோம், கண்டு விட்டு நகைக்கிறோம். ஆனால் நீக்ரோவுக்கு நெஞ்சு இழைகிறது நீக்ரோ நடனத்தைக் கண்டு! ஏன்? அதனைப் புரிந்து கொள்கிறான்.

நேற்று, சித்தூர் பாடினார் அருமையாகப் புஷ்ப ராகத்தை ஜொலிக்கச் செய்து என்று கூறினால், புஷ்ப ராகம் என்று ஒரு ராகம் இருப்பதாக எண்ணிக்கொள்ள எத்தனையோ பேர்கள் உண்டு. அது அவர்கள் குற்றமல்ல; வராகம் என்று இன்னொரு ராகம் இருப்பதாக நம்பினாலும் நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை ராக விஷயங்கள், மக்களில் நூற்றுக்கு எத்தனைப் பேருக்குத் தெரிய முடியும்? கருப்பையா என்பதற்குச் சுப்பையா என்று கையொப்பமிடும் பேர்வழிகள் நிரம்பியுள்ள நாட்டிலே நாம் இருக்கிறோம்.

கச்சேரிகளுக்குச்சென்று திரும்பியவர்கள், இன்னின்ன பாடல்கள் இன்ன ரசத்துடன் பாடப்பட்டன என்பதைப் பேசுவதைவிட, மிருதங்கக்காரரின் உச்சிக் குடுமி இத்தனை முறை அவிழ்ந்துவிட்டது: வித்துவான் மூன்றுமுறை பால் குடித்தார். பிடில் வாசிப்பவரின் முகம் சில சமயங்களிலே மாருதி வேடமா யிருந்தது என்று இவைகளை அதிகமாகப் பேசுவதைக் கேட்கிறோம். காரணம் அவர்கள் கேட்ட பாடல்களில் பல அவர்களுக்குப் புரிவதில்லை.

பெரும்பாலும், தியாகராஜ கீர்த்தனங்களையே பாடுகிறார்கள். அதில் அடிக்கடி ராமா ராமா என்று வருவதைத் தெரிந்து கொண்டிருப்பார்களே ஒழிய, அதன் கருத்தை அறிந்து கொண்டவர்கள் அதிகம் பேர் இருக்க முடியாது. தமிழ் நாட்டிலே தெலுங்கு கீர்த்தனங்களுக்குப் பொருள் விளங்க முடியுமா? ஆந்திர நாட்டிலே 'அரவம்' தெரிகிறதா?

எனவே, ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் தமிழோடு இசை பாட மறந்தவர்களுக்குத், தமிழ்ப் பாடல்கள் பாட ஓர் சந்தர்ப்பத்தை உண்டாக்கி வைத்தார். நல்லதோர் தொகையை நன்கொடையாக ஒதுக்கி வைத்து, தமிழ்ப் பாடல்கள் இயற்றவும், பாடவும், ஆர்வம் வர, ஒரு வழி கண்டார்; அதற்காக கூடிய சிதம்பரம் மகா நாட்டிலே, இசை வல்லோர் கூடித் தமிழ்ப் பாடல்களே பெரும்பாலும் பாடப்பட வேண்டும் என்று தீர்மானித்தனர்.

இசையில் ஆரியம் புகுந்து இழுக்கு செய்வதைத் தடுக்க, தமிழ்நாடு தமிழ்ப்பாடல் கேட்பதைத் தர. கொடைவள்ளல் ராஜா சர் அவர்கள், செய்த இந்தப் பேருதவிக்குப், பார்ப்பனர்கள் எதிர்ப்புக் காட்டுகிறார்கள். தமிழரின் எண்ணம் ஈடேறச் செய்வது கண்டு சீறுகின்றனர் தெலுங்குக் கீர்த்தனங்களுக்கும், இந்துஸ்தானி துக்கடாக்களுக்கும் வக்காலத்து வாங்கிக்கொண்டு

வாதாடுகின்றனர். தமிழன் மறுமலர்ச்சி கண்டு ஆத்திர மடைந்து, ஆர்ப்பரிக்கின்றனர். 'இந்து' பத்திரிகை, இசையில் தமிழ் புகுந்தது கண்டு, குட்டித் தலையங்க மெழுதி, குறும்புத்தனமாகக் கண்டிக்கத் துணிந்து விட்டது.

ஆரியரின் இந்த எதிர்ப்புக் கண்டு தமிழர் அஞ்சத் தேவை யில்லை. தமிழ் நாட்டிலே தமிழே இருத்தல் வேண்டும், தமிழருக்குத் தமிழ் இசையே தேவை. அதுவே அவர்களுக்கு இன்பத்தைத் தரும். பார்ப்பனரின் பிழைப்புப் பாதிக்கப்படும், என்று பதைத்துப் பயன் இல்லை. ஆரியத்தை இலக்கியம், எண்ணம், இசை முதலிய எல்லாத் துறைகளிலுமிருந்து விரட்டி ஒழித்தால்தான், தமிழர் தமிழராக வாழ முடியும், ஆகவே, தமிழர்கள் இந்த ஆரிய எதிர்ப்பைக் கண்டு தளராமல் தனித் தமிழ், தமிழ் இசை ஆகியவற்றிற்கு உழைத்துத், தமிழ் நாடு தனி நாடாவதையும் கண்டு களித்து வாழும் வரை, உழைக்க முன்வர வேண்டும்.

* * *

தமிழ் வளர்ச்சி, தமிழர் முன்னேற்றம் என்ற சொற்களைக் கேட்டால் போதும், உடனே ஒரு கூட்டத்தார் மற்ற மொழிகளுக்குக் கேடு; மற்ற வகுப்பினருக்குத், தீங்கு என்று நினைத்துக் கொள்ளுகிறார்கள்; அதனால் உடனே இவைகளுக்கு எதிர்ப்பு வேலை செய்யத் தொடங்கி விடுகிறார்கள். இவர்களுடைய விபரீத உணர்ச்சி காரணமாகவே, மொழிச் சண்டை, வகுப்புச் சண்டை நமது நாட்டில் வலுத்து வருகின்றன. உண்மையிலேயே இத்தகைய நிலை ஏற்படுவதற்கு நாம் வருந்துகிறோம்.

சில ஆண்டுகளுக்கு முன் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பல மகாநாடுகள் நடைபெற்றன. தமிழ்நாட்டில் உள்ள புகழ் பெற்ற இசைவாணர்கள், இசைக்கலை அன்பர்கள், தமிழன்பர்கள் அனைவரும் அங்குக் கூடினர். நான்கு நாட்கள் தமிழிசைக் 'கச்சேரிகள்' நடத்தினர்.

தமிழிசையைப் பற்றிப் பலர் பேசினர். அம் மகாநாட்டில் ஒரு சிறந்த முடிவும் செய்யப்பட்டது.

"சங்கீதப் பள்ளிக்கூடங்களில் தமிழ்ப் பாட்டுக்களையே சொல்லிக் கொடுக்க வேண்டும். சபைகளில் தமிழ்ப் பாட்டுக்களையே பாட வேண்டும்" என்று அம் மகாநாட்டினர் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி வைத்தனர்.

இத் தீர்மானத்தை எல்லா இசைக் கலைவாணர்களும் ஒப்புக்கொண்டனர். நமது நாட்டுப் பத்திரிகைகள் பலவும் இதைத் தமிழ் வளர்ச்சிக்கு வந்திருக்கும் நல்ல காலத்தைப் பற்றி நாவாரப் புகழ்ந்தன. தமிழ்க்கலை வளர்ச்சியிற் கருத்துடையவர்கள் அனைவரும் உள்ளங் குளிர்ந்தனர். இத் தகைய மகாநாட்டுக்குக் காரணராக இருக்கும் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் நிறுவனர், செட்டிநாட்டு அரசர், சர் அண்ணாமலைச் செட்டியா ரவர்களைப் பாராட்டினர். அவருடைய அரும் பெரும் முயற்சிக்கு வாழ்த்துக் கூறினர்.

தமிழில் இசைப்பாடல்கள் இயற்றுவதற்குப் பரிசளிப்பதற்காகவும், அவற்றைப் பாடுவோரைப் பாராட்டுவதற்காகவும், செட்டிநாட்டு அரசர் அவர்கள், பெருந்தொகையை நன்கொடையாக அளித்துள்ளார். இச்சிறந்த வேலையைத் தனது செல்வப் பிள்ளையாகிய அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் மூலமே செய்வதற்கு முன் வந்தார்.

தமிழ் மொழியே, இயற்றமிழ் இசைத்தமிழ் நாடகத் தமிழ் என்று முப்பிரிவை யுடையது. இவற்றுள் இசை யென்பது, இயற்றமிழிலும் உண்டு; நாடகத் தமிழிலும் உண்டு; தமிழே இசை யுருவாக அமைந்தது. இசையே தமிழில்தான் முதன் முதலில் தோன்றிய தென்பது பல தமிழாராய்ச்சியாளர்களின்முடிபு. தமிழாராய்ச்சியுடையஇசை வாணர்களுடைய முடிபும் இதுதான். இத்தகைய இசைத் தமிழ் இடைக்காலத்தில் குன்றிவிட்டது. இசைவாணர்கள்

பலர், தமிழ்ப் பாடல்கள் பாடுவதே அவமானமெனக் கருதி யிருந்தனர். பொருள் விளங்காத பாடல்களையே பாடி வந்தனர்.

ஆனால், பல ஆண்டுகளாகப் பல தமிழன்பர்கள் இசைத்தமிழ், வளர்ச்சி யடையவேண்டுமெனக் கூறி வந்தனர். ஒவ்வொரு சங்கீத மகா நாடுகளிலும் இதைப்பற்றிப் பேசப்பட்டது. இம்முயற்சி காரணமாக இசைவாணர்கள் பலரும், சபைகளில் தமிழ்ப் பாடல்கள் பாடவும் தொடங்கினர். அப்பாடல்களை இசைக் காதலர்கள் சுவைக்கவும் தொடங்கினர். தமிழ்ப் பாடல்களைத் தமிழ் மக்கள் சுவைக்கின்றனர். என்பதை அறிந்தவுடன், இசைவாணர்களுக்கும் தமிழ்ச் 'சாகித்யம்' பாடுவதில் ஊக்கம் வளர்ந்து வந்தது.

அண்ணுமலை நகரில், பல்கலைக் கழகத்தில், இசைவாணர்களின் கூட்டத்தில், தமிழன்பர்களின் ஒத்துழைப்பின் பேரில் செய்யப்பட்ட முடிவு இசைவாணர்களுக்கு ஊக்க மளிக்கும்; இசைக் காதலர்களுக்கும் மகிழ்ச்சி யளிக்கும்! இதில் ஐயமில்லை!

ஆனல் ஒரு சிலர், அண்ணுமலை நகரில் செய்யப்பட்டிருக்கும் அருமையான முடிவைக் குறைகூறத் தொடங்கி யிருக்கின்றனர். அவர்கள், தமிழிலேயே இசைபாடுவது என்று தொடங்கினுல் கர்நாடக சங்கீதம் அழிந்துபோய் விடும்; தியாகராஜ கீர்த்தனங்கள் மறைந்து போய்விடும்; தமிழில் கர்நாடக சங்கீதத்தை அமைக்க முடியாது; என்னும் வாதத்துக்கு, நம் மாகாணப் பத்திரிகையாகிய 'இந்து' வும் ஆதரவளித்து வருகிறது.

கர்நாடக சங்கீதம் ஒருநாளும் அழியாது. கர்நாடக சங்கீதத்தை அமைத்துப் பாடக்கூடிய பாடல்கள் தமிழில் ஏராளமாக இயற்றிக்கொள்ளலாம். இதற்குச் செட்டி நாட்டு அரசரின் நன்கொடை பேருதவி செய்யும். தமிழ் நாட்டில் பண்டுதொட்டு நிலவி வரும் சங்கீதம் கர்நாடக

சங்கீதமாகும். ஆகையால் தமிழ்ப் பாடல்கள் பாடுவதால் கர்நாடக சங்கீதம் அழிந்துவிடும் என்பது தமிழரின் தன்மையை அறியாதவர் கூற்று. தியாகராஜ கீர்த்தனைகள் மறைந்து விடுமென்று கூறுவதும் தவறு. அவற்றையும் இசைவாணர்கள் பாடிக்கொண்டுதான் இருப்பார்கள். ஆதலால் கர்நாடக சங்கீதம் போய்விடும்; தியாகராஜ கீர்த்தனை மறைந்துவிடும் என்று காரணங்கூறி, தமிழிசையை வளர்க்கும் முயற்சிக்குத் தடை செய்வது சிறிதும் அறிவுக்குப் பொருந்தாத செயலே யாகும்.

தமிழர்கள், தமிழின் உயிர்ப் பகுதியாகிய இசைத் தமிழை வளர்க்கவே, இம்முயற்சியில் தலையிட்டிருக்கின்றனர். இம்முயற்சி செட்டி நாட்டு அரசரின் அறச் சிந்தையாலும், நன்கொடையாலும், நிறைவேறத் தொடங்கியிருக்கின்றது. இனி இம்முயற்சியை யாரும் தடுக்கமுடியாது. இம்முயற்சியைப் பொதுமக்களும் ஆதரிக்கின்றனர்; இசைவாணர்களும் போற்றுகின்றனர்; தமிழன்பர்களும் பாராட்டுகின்றனர். ஆதலால் இசைத்தமிழ் இனி வளர்ச்சியடையும் என்பது உறுதி.

அன்றியும், அண்ணாமலை மகாநாட்டின் முடிவு கண்டு, சிலருக்கு ஆத்திரம் உண்டான காரணம் விளங்கவில்லை. அங்கு வேற்றுமொழிக்கோ. கலைக்கோ எதிரான முடிவு ஒன்றுமே செய்யப்படவில்லை, அங்குக் கூடியிருந்தவர்களுக்கு அத்தகைய உணர்ச்சி, எண்ணம் சிறிதுகூட இருந்தாகத் தெரியவில்லை.

அண்ணாமலை மகாநாட்டுத் தீர்மானத்தில் தமிழ்ப் பாடல்களைப் பாடவேண்டும்; என்றுதான் தீர்மானம் செய்திருக்கின்றனர். தெலுங்குப் பாடல்கள் கூடாது; தியாகராஜ கீர்த்தனங்களைப் பாடக்கூடாது என்று சொல்லவில்லை. தெலுங்கின் மீதோ, தியாகராஜ கீர்த்தனத்தின் மீதோ, எந்தத் தமிழன்பர்களுக்கும் தமிழிசைப் புலவர்களுக்கும் வெறுப்பில்லை; பகைமை யில்லை.

செட்டி நாட்டு அரசர் வகுப்புவாதக் கருத்துடன் இக் காரியத்துக்கு உதவி செய்யவில்லை; அரசியற் கருத்துடனும் இம் முயற்சிக்குத் துணை செய்யவில்லை. செட்டி நாட்டு அரசரை நன்றாக உணர்ந்தவர்கள், அவரால் அதிக உதவி பெற்று வருகிறவர்கள் எந்த வகுப்பினர் என்பதை அறிவார்கள். அவர் எந்த அரசியல் கட்சியிலும் கலந்து கொள்ளவில்லை; அரசியலை விட்டு விலகியே இருக்கிறார். ஆதலால் தமிழிசையை வளர்க்கவேண்டும் என்னும் அவருடைய நோக்கத்திற்கு, வகுப்பு வெறுப்பையோ, அரசியலையோ காரணமாகக் கூற முடியாது.

தமிழர்கள் தமிழ்ப் பாடல்கள் வேண்டுமென்று கேட்பது பிற மொழியின்மீது வெறுப்பாகுமா ? தமிழில் நல்ல பாடல்கள் இயற்ற முயல்வதுபிற மொழிக்குச் செய்யும் கெடுதி யாகுமா ? தமிழ்க் கலையை வளர்ப்பதற்குத் தமிழர்களும், தமிழன்பர்களும் செய்யும் முயற்சிக்குக் கூடவா தடை விளைவிக்க வேண்டும் ? தமிழ்க் கலை வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை போடுகிறவர்களைத் 'தமிழ்ப் பகைவர்கள்; தமிழ்க் கலை விரோதிகள்; தமிழரின் எதிரிகள்; என்று கூறத் தொடங்கினால், அதை இல்லையென்று கூற முடியுமா ?

முஸ்லிம்கள் தங்கள் கலைகளைக் காப்பாற்றவேண்டும் என்று கூறவில்லையா? அவைகளின்தனித்தன்மையை அழியாமற் காப்பாற்ற வேண்டும் என்பதையும், ஒரு காரணமாகக் காட்டித்தானே அரசியலிலும் பாதுகாப்புக் கேட்கின்றனர். அவர்கள் தங்கள் கலைகளையும் அவற்றின் கருத்துக்களையும் காப்பாற்ற முயல்வதை, யாரேனும் குற்றமென்று கூற முடியுமா? தடுக்க முடியுமா? தமிழ்க் கலை வளர்ச்சிக்கு மாத்திரம் ஏன் முட்டுக்கட்டை போட வேண்டும் ? ஏன் வகுப்பு வாதம் கற்பிக்கவேண்டும் ?

அண்ணாமலை மகாநாட்டுத் தீர்மானம் ஒரு வகுப்பினரால் நிறைவேற்றப்பட்டதன்று; ஒரு கொள்கையினரால்

நிறை வேற்றியதன்று; பல வகுப்பினரும், பல கொள்கை யினரும் கூடிச் செய்த முடிவுதான் அது. பார்ப்பனர், பார்ப்பன ரல்லாதார் அனைவரும் அம் மகாநாட்டிற் கலந்து கொண்டனர். அம் மகாநாட்டின் முடிவைப்பற்றிக் குறை கூறி, வீண் வகுப்பு வேற்றுமையையும், மொழி வேற்று மையையும் கிளப்பி விடுவதற்குக் காரணம், நமக்கு விளங்கவில்லை. "இந்து" பத்திரிகை கூட, இந்த வீண் கிளர்ச்சிக்கு ஆதரவளிப்பதை நாம் வன்மையாகக் கண்டிக் கிறோம்.

இம்மாதிரியே தமிழ்க் கலை வளர்ச்சிக்காகச் செய்யப் படும் எல்லா முயற்சிக்கும், ஒரு கூட்டம் தடை செய்து கொண்டிருந்தால், இறுதியில் தமிழர் நிலை எப்படி முடி யும் ? தமிழ்க் கலை வளர்ச்சிக்கு உதவி செய்யவேண்டி யதே தமிழன்பர்கள் கடமை; தமிழ் நாட்டில் உள்ளவர் கள் கடமை.

தமிழ் நாட்டைப்போல் வேறு எந்த நாட்டிலும், அந்த நாட்டின் மொழியல்லாத வேறு மொழியிற் சங்கீதம் பாடுவதைக் கேட்க முடியாது. ஒவ்வொரு நாட்டினரும், தங்கள் தங்கள் தாய் மொழியிலேயே எல்லாக் கலைகளையும் புதிதாக ஆக்கி வருகின்றனர். தமிழரைப் போலத் தாய் மொழிக் கலை உணர்ச்சியற்றவர்களை எந்த நாட்டிலும் காணமுடியாது.

இப்பொழுதுதான் தமிழ்க் கலையுணர்ச்சி, தமிழரிடம் புகுந்திருக்கிறது. பல வழிகளில் தமிழ்க் கலைகளை வளர்க்க முயன்று வருகின்றனர். இம் முயற்சியில் இசைக் கலை தமிழுக்குப் புதிதன்று. தமிழோடு பிறந்தது; தமிழோடு வளர்ந்தது. இன்றும் தமிழோடு இணைபிரியாமல் இயைந்து கிடக்கின்றது. இவ்வுண்மையை இசைவாணர் மறந்தனர். ஆதலால் இடைக்காலத்தில் மழுங்கிவிட்டது. அதை விளக் கவே அண்ணாமலைப் பல்கலைக் கழகம் முனைந்திருக்கிறது. தமிழ் நாட்டில் கலை வளர்ச்சித் துறையிலும், வீண் பகை

யையும் வெறுப்பையும் கிளப்ப வேண்டாமென்று இக் கூட்டத்தார்க்கு எச்சரிக்கை செய்கின்றோம்.

* * *

வளைந்து வளைந்தோடும் அந்த அருவி, வெண் மணலைத் தழுவிக்கொண்டு, தழதழத்த குரலில் பாடுவது கேளீர்! எந்தப் பாட்டு இதற்கு ஈடாகும்!

செடியும் கொடியும், தளிரும் இலையும், மலரும் கனியும், ஆடும் காரணம் அறியீரோ! அதோ, வீசும் காற்றுடன் கலந்து வரும் இசை கேட்டே, அவைகள் ஆடுகின்றன; நடன சுந்தரிகள் போல!

பச்சிளங்கன்று, தாயைக் கூப்பிடும் குரல் கேட்டீரோ? அதிலுள்ள இசை இன்பமே தனியானது!

போர் வீரன், தனது உடலில் கவச மணிந்து, வாளை உறையினின்றும் எடுக்கிறானே, அச்சமயம் கிளம்பும் ஒலி, வீர உள்ளம் படைத்தோர்க்கு இசை!

இம்மட்டுந்தானா! குழலா இனிது? யாழா இனிது? மக்களின் மழலையே இனிது, ஈடு எதிர் இல்லாத இசையாகும் இது!

இங்ஙனம் மக்கள் இசை இன்பத்தை, ஓடும் அருவியில், வீசும் காற்றில், விளையாடும் கன்றின் குரலில், கொஞ்சும் குழந்தையிடம், வீரரின் செயலில், காதலியிடம் காண்பர்! களிப்பர்!!

இசை இன்பம், இயற்கையிலும், தமது அன்புக்குரிய இடங்களிலும் இருக்கக் காண்பர். உள்ளத்தில் களிப்புக் கொள்வர்! பிறகு, ஓடும் அருவி பாடினது என்ன? எனின் கூற இயலாது. இனிமை இருந்தது என்று மட்டுமே சொல்ல இயலும். களிப்புடன் கருத்துக்கு விருந்தும் இருக்கவேண்டுமாயின், இசை இன்பத்தோடு பொருள் இன்பம் இழைந்து குழைந்து இருத்தல் வேண்

டும். காதுக்கு இனிமையும் தேவையெனில், எம்மொழி யில் இசைபாடப்படுகிறது என்பதைக் கவனித்தாக வேண்டும். இது பாடலைப் பொறுத்தமட்டில், இன்றியமை யாததாகும். இசைக் கருவிகள், நாதத்தைத் தரும். மொழிப் பிரச்சினை அங்கு இல்லை. ஆனால், வாய்ப்பாட் டுக்கு மொழிப் பிரச்சினை முக்கியம். அவர் பாடுகிறார் என்றால், "சஹானா ராக ஆலாபனம் செய்தார்; பிறகு இந்தக் கிருதியைப் பாடினார்; அதிலே ராம சௌந்தரியம் அழகாகக் கூறப்பட்டது" என்றுதான் அக்கிரகாரமும் பேசும். சாஹித்தியம், சங்கீதத்துக்கு, மலருக்கு மணம் போன்றது. அந்த மணம், நறுமணமாக இருக்க வேண்டும் என்று தமிழர் கூறுகின்றனர் 'இது தகுமா? இது முறையா' என்று ஆரியர் ஆர்ப்பரிக்கின்றனர். ஒடிந்த உள்ளங்களை ஒன்றாக்குவிக்கும் இசை விஷயமாக இன்று, எழும் கிளர்ச்சி இதுவரை ஒடியாதிருக்கும் உள்ளங்களையும் ஒடித்துவிட முற்பட்டு விட்டது.

ராஜா சர். அண்ணாமலையார் ஆற்றியுள்ள அருந் தமிழ்த் தொண்டை, இங்ஙனம் திரித்துக் கூறி, அவரது முயற்சியைக் குலைப்பது கண்டு, நாம் மனங் கலங்கவில்லை; கொதிப்படையவுமில்லை. மாறாகக் களிக்கிறோம்! ஏனெ னில், வகுப்புவாத நோக்கமற்று, இசைக்கும் தமிழுக்கும் அவர் உணர இ·தோர் வாய்ப்பு! அதனை அவர் உணர்ந்து, அவரும் ஓர் 'வகுப்புவாதி' யாகிவிட்டால், அக்கிரகாரத் தின் ஆதிக்கம் அழிவது திண்ணம். ஆகவே, இன்று ஆரி யர் கிளப்பும் எதிர்ப்பு, அவர்களுக்கே கேடு தரத்தான் போகிறது என்று நிச்சயமாக நம்புகிறோம். அந்த நம் பிக்கை நமது மனதில் களிப்பை ஊட்டுகிறது.

"கூவுங்கள் ஆரியர்களே! கொக்கரியுங்கள்! தமிழ் மீது மோதிக்கொள்ளுங்கள். தமிழரின் முயற்சிக் கெல்லாம் தடைசெய்யுங்கள்; தமிழ் மொழியைத் தழைக்க விடாதீர் கள்; தமிழிலே வடமொழியை, ஆங்கிலத்தை, இந்தியைக் கலக்கிக் குழப்புங்கள். தமிழன், தன்னைத் தமிழன் என்று

ரைத்தால் சீறுங்கள். தமிழ் மொழியில் இசை இருக்கட்டும் என்றால், எதிர்த்துப் பேசுங்கள். கலைச் சொற்களுக்கு வடமொழியே இருக்கவேண்டும் என்று வாதாடுங்கள். தமிழனைத், தாழ்ந்த ஜாதி என்று சொல்லுங்கள். கூட இருக்ககூடாது என்று கட்டளையிடுங்கள். கோயிலிலும் குளத்திலும் இழிவு படுத்துங்கள். சாப்பாட்டு விடுதிகளிலும், சாக்கடை இடத்தையே தமிழருக்குத் தாருங்கள். உமது ஆணவச் செயலை, திமிர் வாதத்தை, ஆரியத்தை நாம் வரவேற்கிறோம். ஆம்! உமது எதிர்ப்பு வளர வளரத்தான், தமிழனின் உள்ளத்தில் வேதனை பிறக்கும். வேதனை வளர்ந்தால், அவன் *வேல்பட்ட புலி போலச் சீறுவான்*. அந்தச் சீற்றம் கிளம்பிவிட்டால், நாங்கள் 'ஜெயமுண்டு பயமில்லை மனமே' என்று பாடும் காலம் பிறக்கும்! 'தமிழ் நாடு தமிழருக்கே' என்ற எண்ணம், உருவமாக அமையும் காலம் தோன்றும். சேரனும், சோழனும், பாண்டியனும் இறந்துபடினும், அவர்கள் காத்தாண்ட செந்தமிழ் நாட்டில், தமிழராட்சி தோன்றும். ஆகவே, ஆரியர்களே ஆரம்பியுங்கள் உங்கள் போரை!'' என்று நாம் ஆரியரை அறைகூவி அழைக்கின்றோம்.

ஆனால் தமிழ் இசைபற்றிப் பேசும்போது, சொத்தைக் காரணங்களை ஆரியர்கள் கூறுகின்றனர். அது நமக்குப் பிடிக்கவில்லை. அறிவு படைத்த யாருக்கும் பிடிக்காது. தமிழ் இசை என்று ஆரம்பிக்கும் தமிழன், வேறு எங்குமே தமிழ் ஆட்சிதான் தேவை என்றல்லவா கூறத் தொடங்குவான். அது நமக்கன்றோ ஆபத்தாக முடியும். ஆகவே, முளையிலேயே கிள்ளுவோம். தமிழ் உணர்ச்சி தலைதூக்க ஒட்டாது அடிப்போம் என்பதே ஆரியரின் நோக்கம். தமிழகத்தின் தமிழ் உணர்ச்சி, தமிழர் என்ற உணர்ச்சியையும் வளர்த்துவிடும் என்ற அச்சம் ஆரியரைப் பிடித்துக்கொண்டது. அதனை வெளிப்படையாகப் பேச வெட்கி, ''இசையிலே மொழிப்போர் என்ன? தியாகய்யர் என்னாவது? சியாமா சாஸ்திரிகள், தீட்சிதர் கிருதிகள் என்னாவது?'' என்று நீலிக் கண்ணீர் வடிக்கின்றனர்.

அண்ணாமலை நகரில் கூடினோர், மேற்படி கிருதிகள் அழிந்தொழிய வேண்டும் என்று கூறினரில்லை. அவைகள் உள்ளன, ஆனால், தமிழ் நாட்டிலே, தமிழ் இசை இருக்கட்டும் : இதற்கு ஆதரவு தேடுவோம் என்று கூறினர். இதற்கும் எதிர்ப்பு இருக்கிறதென்றால், பிறகு தமிழகத்துக்குத் தேவையில்லாதவைகளைத் துரத்தும் வேலை, மும்முரமாக நடக்கும் என்பது திண்ணம்.

''சுதேச மித்திரன்'' இதுபற்றி எழுதுகையில், ''நமது சங்கீத வித்வான்கள் கச்சேரிகளில் தமிழ்ப் பாட்டுக்களை ஏன் அதிகமாகப் பாடுவதில்லை; கச்சேரிகளைக் கட்டத் தகுந்த போதிய பாட்டுக்கள் தமிழில் இல்லாத தோஷந் தான்'' என்று எழுதுகிறது.

தமிழ் நாட்டிலே, தமிழர் முன்னால் பாட, போதிய பாட்டுக்கள் தமிழில் இல்லை! இதைவிட வெட்கக் கேடான நிலைமை வேறு இருக்க முடியுமா என்று கேட்கிறோம். தமிழனின் தன் மானம் இருக்கும் விதம் இது! அவனது நாட்டில் அவன் மொழியில் பாட்டு இல்லை!

ஜெர்மன் நாட்டிலே ஜெர்மன் மொழியில் பாட்டு உண்டு.

நீக்ரோ நாட்டில் நீக்ரோவின் மொழியில் பாட்டு உண்டு.

வங்காள நாட்டிலே, வங்க மொழியிலே பாட்டு உண்டு.

தமிழ் நாட்டிலே, தமிழ் மொழியிலே போதுமான அளவு கச்சேரி களைகட்டத் தகுந்த பாட்டு இல்லை! இது ஏன்? மித்திரன் கூறுமா? என்று கேட்கிறோம். தமிழர் நாடோடிக் கூட்டமா? இல்லை! பழங்குடி மக்கள்! இந்த நாட்டுக்குச் சொந்தக்காரர்கள்! தமிழர் அறிவுத் துறையிலே பழக்க மற்றவர்களா? இல்லை. பலப்பல இனத்தார் பக்குவமடையா முன்னம், அறிவுத் துறையில் மேலோங்கி விளங்கியவர்கள்; தமிழர், இசை அறியாதவரா? இல்லை. அவர்களின் மொழியே இயல், இசை, நாடகம் என்ற மூன்று முத்துக்கள் கொண்டது. பின்னர் ஏனையா! தமிழ் நாட்

டிலே போதுமான தமிழ்ப் பாட்டுக்கள் இல்லையென்கிறீர்கள் என்று, மித்திரனையும் மற்றையோரையும் கேட்கிறோம்.

குருடன் காணமாட்டான்; செவிடன் கேட்க இயலாது; முடவன் ஓடமாட்டான். அதுபோல், தன் மானத்தைப் பறிகொடுத்த இனம், தன் கலை, தன் மொழி, தன் நிலை குலைந்து தவிக்கும். அத்தகைய நிலை தமிழனுக்கு ஏற்பட்டதால்தான், தமிழிலே பாட்டு இல்லை என்று கூறும் கேவலமான, கொடிய, இழிவான நிலையிலேஇருக்க வேண்டி வந்தது. மித்திரன் கூறியுள்ளதை மனதில் பதிய வைத்துக் கொள்ள வேண்டுகிறோம்.

பண்டைப் பெருமை வாய்ந்த தமிழகத்திலே தமிழில் பாடல்கள் கிடையா. ஆகவே, விழி யற்றவனுக்குத் தடி துணையாவதுபோல் வேற்று மொழியிலே, இசை பாடக் கேட்கிறான்.

இந்த நிலைமையை மாற்றி, மற்ற எந்நாட்டிலும் உள்ளது போலத், தமிழ் நாட்டிலே தமிழ்ப் பாட்டுக்கள் வளர வழி செய்யத் தமிழ் வள்ளல் முற்படுகிறார். அதை 'மித்திரனும்' அவரது மித்திரர்களும் கெடுக்க முற்படுகின்றனர். அது ஏன்?

ஆரிய மித்திரர்கள் எண்ணம் அதுவல்ல! தமிழ் நாட்டிலே தமிழ்ப் பாடல்கள் இல்லை. வேறு பாடல்கள் உள்ளன. அதைக்கொண்டு திருப்தி அடையுங்கள் என்பது ஆரியரின் வாதம்.

தமிழ் நாட்டிலே தமிழ்ப் பாடல்களை வளர்க்க வேண்டுமென்றால், தமிழ்ப் பாடல்கள் பாடுவோருக்கு ஆதரவு தருவதாகவும், தமிழ்ப் பாடல்களைப் பாடும்படி ஊக்குவிக்க, கழகங்கள் இருந்தால் முடியுமா? வெறும் ஏட்டில் எழுதி வைத்தால் முடியுமா? எனவே, அண்ணாமலை நகரில் கூடினோர், சங்கீதக் கழகங்களில் தமிழ்ப் பாட்டுக்களைத்தான் அதிகமாகச் சொல்லிக் கொடுக்க

வேண்டும் என்றும், சங்கீத சபைகளில் பெரும்பாலும் தமிழ்ப் பாட்டுக்களையே இயற்றி வித்வான்கள் அவற்றைப் பாடும்படி செய்யவேண்டும் என்றும் தீர்மானித்தனர்.

* * *

இன்று தமிழ்ப் பாடல்கள் இருப்பினும், பாடுவதில்லை. பாடினாலும், கச்சேரியின் கடைசி பாகத்தில் துக்கடாக்களாகவே இருக்கும். பாடகரின் முழுத்திறமையையும், இராக ஆலாபனத்திலும், பல்லவியிலும், கிருதிகளிலும், பாடிக்காட்டி ஓய்ந்த பிறகு, "வித்வாம்சான்" களித்தான பிறகு, விஷயமறியாத சாதாரண ஜனங்களுக்கு ஏதோ இரண்டொரு சில்லறை உருப்படிகள் பாடுவோம் என்று பாடகர், "சிக்கல் சிங்கார வடிவேலா உனை" என்று பாடுவார். இல்லையேல், "பித்தா பிறை சூடி" என்பார். கச்சேரி முடிகிறது என்பதற்குத் தமிழ்ப் பாடல்களை அறிகுறியாக வைத்துக்கொண்டனர்.

இதற்குக் காரணம், சபை அல்ல! சபையினர் தமிழர். தெலுங்குக் கிருதிகள் அவர்களுக்குப் புரிவதில்லை. வித்வானுடைய அபார திறமையை, சபையிலே பலர் அவருடைய முகத்திலே தோன்றும், பலவித பாவங்களைக் கண்டோ, தொடையில் போட்ட தாளம், அவிழ்ந்த குடுமி, நெகிழ்ந்த ஆடை, பக்க வாத்தியக்காரருக்கும் வித்வானுக்கும் நடக்கும் பார்வைகள், கனைப்புக்கள், கண் சிமிட்டல்கள், கால் தட்டுதல் இவைகளின் மூலமாகவோ தெரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது. முன் வரிசையிலே உள்ள சிலருக்கு வித்வானின் அருமை தெரிந்திருக்கும். ஆனால் சபை, முன் வரிசையோடு முடிந்துவிடுகிறதா!

சபையினர் களிக்க முடியாத—ஏனெனில், தெரிந்துகொள்ள இயலாத—மொழியிலே பாடல்களை, வித்துவான்கள் பாடுவதுதான், "வித்வத் இலட்சணம்" என்ற தப்பு எண்ணம் வளர்க்கப்பட்டு, அத்தகைய பாடல்களைக் கற்

றுக் கொடுக்கும் கழகங்களே அதிகரித்து, அத்தகைய பாடல்களையே போற்றும் சங்கீத சபைகள் வளர்ந்ததனால் தான் தமிழ்ப்பாடல்கள் வளரவில்லை, தமிழ்ப் பாடல்கள் அதிகரிக்க வேண்டுமானால், புதுப் பாடல்கள் இயற்றப் பட்டு, அவைகளைக் கற்றுக்கொடுக்க கழகங்கள் உற்சாகத் தோடு முன்வந்து, அத்தகைய பாடல்களைப் பாடும்படி சங்கீத சபைகள் ஊக்குவித்தால்தான் முடியும்.

தமிழிலே, புதுவைக் கவிஞர் பாரதிதாசன் பாடல்கள் இயற்றிப்புத்தகக்கட்டு நிலையத்தில் தங்கினால் பயன் என்ன? பாடகர்கள் அவைகளைப் பயிலவேண்டும்;பாட வேண்டும்.

தமிழ் நாட்டிலே தமிழ்ப்பாடல் தேவை என்று கருது பவர், அண்ணாமலை நகர மா நாட்டார் முயற்சியை எதிர்க் கார். ஆரியர் எதிர்க்காம லிரார்! ஆரியர் எதிர்ப்புப்பற்றி நாம் அஞ்சத் தேவையுமில்லை. தமிழர், தமிழ் இசையை வளர்க்கத் தீர்மானித்து விட்டனர் என்ற செய்தியைத், தமிழர் பொதுக்கூட்டங்கள் கூட்டித் தெரிவித்துவிட் டனர். தமிழகம் இந்த முயற்சியில் முழுமனதுடன் ஆத ரவு தருகிறது என்பது தெரிந்துவிட்டால், ஆரியர் சுருண்டு விடுவர் என்பதும் திண்ணம். ஆரியத்தைக் காப்பாற்ற அவர் தம் ஆட்சியிலே போலீசும், ராணுவமும், பொக்கிஷ மும் பிறவுங் கொண்டும் முயன்றே தோற்ற ஆரியர்கள், விழித்த தமிழன் வெஞ்சினத்துடன் வீறுகொண்டெழுந் தால், என்ன செய்ய இயலும்?

தனித் தமிழ் கேட்டால், மொழிவளம் குன்றும் என் பர்; தமிழ் இசை கேட்டால், சங்கீதக் கலை க்ஷீணமடை யும் என்று கூறுவர்; தமிழர் அதிகாரம் வேண்டும் என்று கேட்டால், ஆட்சியிலே திறமை குறையுமே என்று கூறுவர்; தமிழருக்குச் சம உரிமை வேண்டும் என்று கேட் டால், பழங்காலப் பக்குவம் பாழாகுமே என்கு பகருவர். தமிழனுக்குத் தனிநாடு வேண்டும் என்று கேட்டால் பாரத மாதா பிரலாபிப்பாளே என்று பசப்புவர்; இது அவர்

களின்—ஆரியர்களின் பழைய பல்லவி. இது இனி பலிக்காது.

சேரனுடைய கொலு மண்டபத்திலே, கொண்டாட்டங்களின்போது, இசைவாணர்கள், "*வாதாபிகண*" பாடவில்லை.

சோழன் களிக்க "*சுஜே சுஜே*' பாடவில்லை!

பாண்டியன் பரிபாலத்தின்போது, "*பலுகவே ஏமீஞ*" என்று பாடவில்லை.

மூவரசர்கள் வாழ்ந்த நாட்களிலும், அதற்கு முன்பும், தியாகய்யர் சாஸ்திரி, தீட்சிதர் கிருதிகள் பாடவில்லை, இசையே இல்லையா? உண்டு! தமிழ் இசை பாடப்பட்டது, அந்த இசை, இன்று எங்கே?

பொன்னும் மணியும் பொலிவுடன் விளங்க, வீரமும் ஈரமுங்கொண்டு ஆண்ட தமிழ் மன்னர்கள், மற்றைச் செல்வங்களை வளர்த்ததுபோல், கலைச் செல்வத்தையும் வளர்த்தே வந்தனர். தமிழகத்துச் சந்தனம், ரோம் சாம்ராஜ்யத்தில் வாடை வீசியதுபோலத், தமிழ் கலையின் மணம், எங்கும் பரவி இன்பம் ஊட்டிற்று. எங்கே அந்தக் கலை இன்று?

சேர நாட்டின் மங்கையர், வேழத்தை விரட்டிய தமது வீரக் காதலரை வாழ்த்திப் பாடியது தமிழில் தான். வெற்றிக் கொடி பறக்க, எதிரியை விரட்டி அடித்துத் திரும்பிய சோழ மன்னர்கள் சிறப்பைத், தமிழில் தான் பாடினார்கள்,

பாண்டியனின் குமரிகளுக்குப், பாங்கிகள் பாடியது தமிழ்ப் பாட்டுக்கள்தான். எங்கே அந்தத் தமிழ்ப் பாட்டுக்கள்?

கதிரவன் காய்வதை அடக்கிக்கொண்டு, மேனி சிவந்து மறையும் நேரத்தில், கடலோரத்தில், பட்டுக் கூடா

ரத்தினுள்ளே, பக்கத்தில் இருந்த கோவலனின் உள்ளம் குழைய மாதவி பாடியது, "மாரு பல்கா, கொன்ஞவே ஏமிரா" வுமல்ல; "சல்சல்ரே, நவ்ஜவா"னுமல்ல! தமிழ்! இன்று, தமிழ் இசை போதுமான அளவு இல்லை என்று கூறும் நிலை வந்தது. காரணம் என்ன?

தமிழர், இசையை வளர்த்ததுபோல், வேறு இனத்தவர் வளர்க்கவுமில்லை; தமிழர் இசையை இழந்தது போல் வேறுயாரும் இழக்கவுமில்லை. தமிழனின் இன்றைய நிலை இழந்த இன்பத்தைப்பற்றி, எண்ணி ஏங்குவதாகவே இருக்கிறது.

தமிழிலே நல்ல பாடல்கள் இல்லை என்பதைக் கேட்கும் தமிழன், தமிழ் இசை முன்னம் இருந்த தன்மையை அறிந்தால், தலையைக் கவிழ்த்துக்கொள்ளத்தான் வேண்டி வரும். அத்தகைய இசை இருந்தது.—இன்று மறைந்தது! மறைந்தது மீண்டும் வெளிப்பட, இன்று முயற்சிகள் செய்யப்படுகின்றன; அந்த மொகஞ்சதாரோவைக் கண்டு, ஆரியர்கள் மருளுகின்றனர்.

"தமிழர் காட்டுமிராண்டிக் கூட்டம். அவர்களுக்கு நாங்களே நாகரீக போதனை செய்தோம். தமிழர் மொழி வளமறியாக் கூட்டம். நாங்களே நூற்கள் வகுத்தோம். தமிழர், வாழும் முறை தெரியாக் கூட்டம், நாங்களே அவர்களுக்குச் சட்டதிட்டம், கட்டு, காவல், கற்றுக் கொடுத்தோம் என்று ஆரியர் கூறினர் ஆங்கிலேயரிடம். புத்தகங்களில் எழுதினர்; பொதுக் கூட்டங்களில் பேசினர். தமிழருக்கு ஆசான், ஆரியரே என்று வெளி நாட்டாரிடம் கூறவே, வெளிநாட்டார், தமிழரை,ஓர் "லம்பாடிக்" கூட்டம் என்றே எண்ணினர். ஒரு ராகவ ஐயங்கார், தமிழருக்குக் "கற்பு" என்பதே தெரியாது என்றும் கூறத் துணிந்தார்!

ஜெர்மன் நாட்டு மாக்ஸ்முல்லர், ஆரியவர்த்தம், ஆரிய மொழி, ஆரிய நாகரீகம், ஆரிய மதம் என்பவைகளையே

ஐரோப்பியருக்கு எடுத்துக் கூறினர். தமிழர் என்ற உணர்ச்சி மங்கிற்று. ஆரியரின் பிரசாரம் ஆங்கில நாட்டவரையும் மயக்கிற்று. விபசாரியிடம் சிக்கி வீட்டிலுள்ளோரை இழிவுபடுத்தி, வீட்டுப் பொருள்களைப் பாழாக்கும் காமாந்தகாரனின் கதைபோல, ஆரியரிடம் மயங்கிய ஆங்கிலேயன் நாட்டுக்குடையவர்களாகிய நம்மவரைப் புறக்கடையில் நிறுத்திவிட்டு ஆட்சி பீடத்திலே ஆரியரை சர்வாதிகாரி யாக்கினர். தமிழர் தத்தளித்தனர். அந்த தத்தளிப்பு தன்னுணர்வைத் தந்தது. தன்னைத்தான் அறியத் தொடங்கிய பிறகு, தமிழன் தான் இழந்தவைகளைத் தேடத்தொடங்கினன். தேடிக்கொண்டும் வருகிருன். தமது அழிவுக்குக் காணம் என்ன என்று கண்டுபிடித்தான். அதனைக் களைய முற்படுகிருன். தூங்கியவன் விழித்ததுபோல் இன்று தமிழரிடை ஒரு எழுச்சி உண்டாகியிருக்கிறது. இந்த மறுமலர்ச்சியைப் பல்வேறு துறைகளில் காண்கின்ருேம். தமிழ் மொழியில் துவங்கி, தமிழ் நாடு என்ற எண்ணம் வரை இந்த மறுமலர்ச்சி இருக்கிறது.

வழி தவறி அலேந்தவன், நேர் வழி தெரிந்து நடக்க ஆரம்பிக்கும்போது, செந்நாய் சீறிலைும், சிறுத்தை உறுமிலைும், சிந்தை கலங்கத் தேவையில்லை. நமது பாதையை நாம் விட்டு அகலோம் என்றே உறுதிகொள்ள வேண்டும், மனம் இருக்க மார்க்கம் இல்லாது போகுமா?

இத்தகைய மறுமலர்ச்சி, இன எழுச்சி—இயல்பு—இதுபோல் பல்வேறு நாடுகளில், நடந்துள்ளன. ஆனல் இங்கு இருப்பது போன்ற எதிர்ப்பு அங்கு இருந்ததில்லை,

15, 16—வது நூற்றுண்டுகளில், ஐரோப்பாவிலே பல்வேறு நாடுகளிலே, இத்தகைய மறுமலர்ச்சி ஏற்பட்டது. அந்தக் காலத்திலே விளைந்த பலன்களே அந்நாடுகளை மேன்மைப்படுத்தின,

பிரிட்டனிலே, (Tudor) டியுடர் மன்னர் காலத்திலே, மறுமலர்ச்சி ஏற்பட்டது. மதத்துறையிலே சீர்த்திருத்தம், மக்கள் மன்றத்துறையிலே மாறுதல்கள், கலையிலே ஓர் புதுமை தோன்றிற்று. சிறந்த இலக்கியங்கள் வெளி வந்தன. தன்னுட்டுணர்ச்சி, தன்மொழிப்பற்று, தன் மானம் ஆகியவைகள் தாண்டவமாடின. பின்னரே பிரிட்டன், பலமுள்ளதாயிற்று. பிரிட்டனிலே, கவிகள், எழுத்தோவியங்களை ஏற்படுத்திக்கொண்ட நேரத்திலே தான், பிரிட்டிஷ் கப்பல்கள், திரைக் கடல்களைக் கடந்து சென்றன. மக்கள் தீரச் செயல்கள் புரிந்தனர். பழங் காலம் என்பது எல்லாத் துறைகளிலும் மடிந்தது. எழுதுவது புது முறையில்; பேசுவது புதுவிதமாக; இலக்கியம் புதுவிதமானது, என்ற நிலைமை ஏற்பட்டது.

ஐரோப்பாக் கண்டத்திலே, அறிவுலகமும் வீரர் உலகும் அமளியில் ஈடுபடும் விதமான, புரட்சிக்குக் காரணமாக இருந்த வால்டேர், ரூசோ, மார்ட்டின் லூதர் போன்றவர்கள், இத்தகைய மறுமலர்ச்சித் தோட்டத்தின் உழவர்கள்! அவர்களுக்கும் அவர்கள் புகுத்திய எண்ணங்களுக்கும், எதிர்ப்பு இருந்தது! இறந்தது! இங்கும் இன்று மறுமலர்ச்சி காண்கின்ருேம், இதற்கு எதிர்ப்பும் காண்கின்ருேம். அந்த எதிர்ப்பு இறுதியில் மடியத்தான் போகிறது. கடல் அலையை, கைத் தடிக்கொண்டு அடிக்க முயலுவோனின் கை சலிக்குமே யொழிய, அலை சலிக்காது!

ஆனல், மற்றைய நாடுகளிலே நடந்ததற்கும், இங்கு நடப்பதற்கும் ஒரு வித்தியாசம் உண்டு. அங்கெல்லாம் மறுமலர்ச்சியை எதிர்த்தவர்கள், வெறும் பழமை விரும்பிகள். இங்கு எதிர்ப்பவர்கள், பழமை விரும்பிகள் மட்டுமல்ல; இன்று இருக்கும் முறையினல், ஆதிக்கம் செலுத்தி வாழும் கூட்டத்தினர், மறுமலர்ச்சி, பழமையைப் பாழாக்குமோ என்பது அல்ல அவர்களின் பயம். நமது ஆதிக்கம் போய்விடுமே என்பதே அவர்களின் திகில்.

எனவே தான் அங்கு, எதிர்ப்பு கடுமையாக இருக்கிறது. இந்தக் கடுப்பைப் பொருட்படுத்தாமல், புதிய எழுச்சிக்காகப் போரிடும் முன்னணிப்படையினர், தேசத் துரோகி, வகுப்புவாதி என்று ஏசப்பட்டுத், தூற்றப்பட்டு வருகின்றனர். ஆனால் அந்தமுன்னணிப்படை போட்டுவைக்கப் போகும் பாதையிலே. பட்டாளங்கள் பலப்பல பிறகு நடக்கும், மக்கள் மகிழ்ச்சியோடு அந்தப் பாதையிலே நடந்து, புதூர் சென்று வாழ்வார் என்பது திண்ணம்.

* * *

தமிழரின் மறுமலர்ச்சியே. தமிழில் ஏன் பிறமொழி கலக்க வேண்டும்? என்று கேட்கச் சொல்கிறது.

தமிழரின் மறுமலர்ச்சியே, தமிழகத்திலே இந்தி கட்டாயப் பாடமா? என்று கிளர்ச்சி நடத்தச் சொல்லிற்று.

அந்த மறுமலர்ச்சியே மார்க்கத் துறையிலே, ஆரிய ஆபாசங்கள் கூடாது என்று தைரியமாக எடுத்துக் கூறச் சொல்லிற்று. சமுதாயத்துறையிலே, நீ உயர்ந்தவன். நான் தாழ்ந்தவன் என்ற பேதம் கூடாது என்று கூறச் சொல்லிற்று.

இத்தகைய ஒவ்வொரு முயற்சிக்கும் ஆரியர்கள் கூடி தமிழரைக் கண்டிக்கின்றனர். தமிழ் இசைக்கு ஆதரவு தரவேண்டுமெனப்படும் முயற்சியைக் கண்டித்து, சின்னாட்களுக்கு முன்னம், சென்னை இரானடே மண்டபத்தில் ஆரியர்கள் பேசினர். அவர்கள் வெளியிட்ட கருத்து சங்கீதத்துக்கு நாதம்தான் பிரதானம். ஆகவே, எந்த மொழியில் சாஹித்தியம் இருக்கிறது என்பது பற்றிக் கவலை இல்லை. தெலுங்குக்கிருதிகள் இப்பவை நல்லவை. தமிழ்ப் பாடல்களைத் தேடிக்கொண்டிருக்கத் தேவையில்லை. தியாகய்யர் போலத் தமிழகத்திலே ஒருவர் தோன்றியதும், தமிழ்ப் பாடல்கள் உண்டாகும்—என்பதாகும்.

இசையை, மக்கள் கேட்டு இன்புறவேண்டுமானால், அவர்களுக்குத் தெரிந்த மொழியில் சாஹித்தியம் இருந்தால்

முடியுமே தவிர. சாஹித்தியம் வேறு மொழியிலே இருந்தால் முடியாது. நாதம் காதைக் கவரும்; கருத்துக்கு என்ன அளிப்பது? தமிழனுக்குத் தமிழ்; தெலுங்கருக்குத் தெலுங்கு; வடவருக்கு வடநாட்டு மொழியில், சாஹித்தியம் அமைத்தால்தான், அந்த இசையைக் கேட்டதும் அவர்கள் இன்புற முடியும்.

இப்போது தமிழ் நாட்டிலே நடைபெறும் கச்சேரிகளில் தமிழ் இசை எவ்வளவு விரும்பப்பட்டு வருகிறது என்பதையும் நாம் விவரிக்கத் தேவையில்லை.

தோழர் தியாகராஜ பாகவதரின் பாடல்கள், இன்று தமிழருக்குத் தெவிட்டாத விருந்தாக இருக்கின்றன. அவருடைய குரல் அமைப்பு மட்டுமல்ல அதற்குக் காரணம்; அவர் தமிழ்ப் பாட்டுக்களைத் தெளிவாகக் கேட்கும் போதே, பொருட் சுவையை மக்கள் ரசிக்கும் விதத்திலே பாடுவதுதான் முக்கியமான காரணம். சங்கித வித்துவான்கள் என்ற சன்னதுக்கள் பெற்று விளங்குவதாகக் கூறப்படும் பேர்வழிகளிடம் உள்ள வித்தை, பாகவதரிடம் இருக்கிறதா இல்லையா என்பதுபற்றியோ, 'சுரம்' போடுவதில் அவர் இன்னுரைவிடக் குறைந்த திறமை உள்ளவரா என்பது பற்றியோ, மக்கள் யோசிக்கவில்லை. அவசியமுமில்லை. பாகவதர் "மாயப் பிரபஞ்சத்தில் ஆனந்தம் வேறில்லை" என்று பாடினுல், அது வீட்டிலே, வெளியிலே, இரவிலே, பகலிலே கிழவர் குழந்தை உள்பட, பாடும் பாட்டாகி விடுகிறது. அழகும், அழுத்தந் திருத்தமும், பொருட்சுவையும் ததும்ப, "உனைக் கண்டு மயங்காத பேர்களுண்டோ" என்று பாகவதர் பாடினுல், நாட்டினர் அதனைப் பாடுகின்றனர். காரணம் அவர் பாடுவது புரிகிறது. கேட்பவர் களிக்கின்றனர். அந்த இசை, கேட்போர் உள்ளத்திலே சென்று தங்குகிறது.

தோழியர் கே. பி. சுந்தரம்பாளின் இசைக்குத் தமிழர், தமது செவியையும் சிந்தனையையும் பரிசாக அளித்த

காரணமும் இதுவே. "செந்தூர் வேலாண்டி—" என்று பொருள் விளங்கப், பாடும்போது, இன்ன விஷயமாகப் பாடப்படுகின்றது என்று புரிந்துகொண்டு பூரிக்கின்றனர்.

இசை விருந்தை இன்று அளித்துக்கொண்டு வரும் தோழியர் எம். எஸ். சுப்புலட்சுமி தியாகராயர் கீர்த்தனங்களைப் பல வருடப் பாடப் பழக்கத்துடன், பாடிக்கொண்டிருந்தபோது, வித்துவான்களுக்கு அறிமுகமாகி இருந்தாரே யொழிய, நாட்டுமக்களுக்கு அறிமுகமாகவில்லை. ஏன்? நாட்டினர் எம். எஸ். எஸ். பாடுவது பிரமாதமான வித்தை அடங்கிய பாட்டு என்று கேள்விப் பட்டார்களே யொழிய, அதன் சுவையை அனுபவிக்க முடியவில்லை. ஆனால், அதே எம். எஸ். எஸ். "மனங் குளிர" என்ற செந்தமிழ் இசையைப் பாடியதும், தமிழரின் மனமெல்லாம் குளிர்ந்தது. இசை நம்மை இழுத்து· சகுந்தலை கண்ட சோலை, சாலை, பசு, மான், கன்று, குயில், மயில் ஆகியவற்றை நமது மனக்கண் முன் நிற்கும்படிச் செய்தது. இசை இன்பத்தை மக்கள் முழுவதும் அடைய முடிந்தது.

தமிழ் இசைக்கு ஆதரவு இருக்குமா என்று கேட்கும் பேர்வழிகள், இசையரசு தண்டபாணி தேசிகரின் தமிழ் இசை, மக்களை எவ்வளவு உருக்குகிறது. பொருள் விளங்க, உணர்ச்சி ததும்ப, அவர் நமது தமிழில், நம்மிடம் பாடுவதால் மக்கள் உருகுவது இருக்கட்டும்; தேசிகரே உருகுவதைக் காணலாம், தமிழ் இசை பாடும் போது!

மதுரை மாரியப்ப சுவாமிகள், சிதம்பரம் ஜெயராமன், திருவாரூர் நமச்சிவாயம் ஆகிய இசைமணிகளின் ஒலி, நமது தமிழாக இருப்பதால் நமது நெஞ்சை அள்ளுவதைக் கூறவேண்டுமா ?

நம்மவரின் நெஞ்சில் நேராகச் சென்று இன்பத்தைத் தர, தமிழ் இசையினால் மட்டுமே முடியும். அத்தகைய தமிழ் இசையை வளர்க்க, பாடகர்களும், [illegible]களும்

முற்படுகின்றனர். வெளிமொழிக் கீதங்கள் என்ற முறையிலே இரண்டோர் கிருதிகள் பாடலாம். குற்றமில்லை. ஆனால், இசை என்றாலே அது தெலுங்கோ, இந்துஸ்தானியோ தான் என்ற பொருள்படும்படி கச்சேரிகள் இருப்பதை இனித் தமிழர் வரவேற்க மாட்டார்கள்.

"ராகப் பிரதானமுள்ள கீர்த்தனங்கள்" தமிழிலே இல்லை, இனி ஏற்படவேண்டும் என்று 'மித்திரன்' கூறுகிறது. ஆனால், இன்றுள்ள இசை வல்லுநர்களால், இத்தகைய ராகப் பிரதானமுள்ள கீர்த்தனங்கள் இயற்ற முடியாது என்று மித்திரன் கூறத் துணிகிறதா என்று கேட்கிறோம். கர்நாடக சங்கீத வர்ண மெட்டுக்களை அனுசரித்துச் சில தமிழ்ப் பாட்டுக்கள் உள்ளன என்பதை 'மித்திரன்' ஒப்புக்கொள்கிறது. அவை போன்ற பாடல்கள் வளரவே, அண்ணாமலை நகர் மா நாட்டினர் வழிவகை தேடினர்.

சங்கீதம் எந்தப் பாஷையா யிருந்தாலென்ன? என்று கூறுபவர்கள், ராக இலட்சணமே முக்கியம்; சாஹித்ய இலட்சணம் முக்கியமாகாது என்று கூறுபவர்கள், திருவாவடுதுறை ராஜரத்தினம் அவர்களின் நாதஸ்வரமும், கும்பகோணம் ராஜமாணிக்கம் பிள்ளையின் பிடிலும் இருக்க, வாய்ப்பாட்டு வேறு ஏன் தேடுகிறார்கள்? அந்த நாதஸ்வரத்தில், ராக இலட்சணங்கள், போதும் என்கிற அளவுக்குக் கேட்கலாமே! ஜிலுஜிலுப்பு வேண்டுமா? கமகம தேவையா? ஆலாபனத்தில் அலங்காரம் வேண்டுமா? எது நாதஸ்வரக்காரரால் முடியாது? தாளவரிசைகளிலே திறமைகள் கேட்கவேண்டுமா? பக்கத்திலே நிற்கும் தவுல்காரரைப் பார்த்தால் போதுமே! கோடை இடி கேட்கும்! சங்கீதம், வெறும் ராக இலட்சணம், நாதம் என்று பேசுவோர், நாதத்தை, நாதஸ்வரத்தில், பிடிலில், வீணையில், புல்லாங்குழலில் கேட்கின்றனர் என்றாலும், ***வாய்ப் பாட்டும்*** தேடுகின்றனர்! காரணம் என்ன? வாய்ப்பாட்டிலே நாதமும், நெஞ்சை அள்ளும் சாஹித்தியமும் இருக்

கின்றது என்பதற்காகத்தான் நெஞ்சை அள்ளும் சாஹித்தியம் தமிழருக்குத் தமிழில் இருத்தலே முறை.

* * *

"பொழில்தரு நறுமலரே புதுமணம் விரிமணலே
பழுதறு திருமொழியே பணையிள வனமுலையே
முழுமதி புரைமுகமே முரிபுரு வில்லிணையே
யெழுதரு மின்னிடையே யெனையிடர் செய்த
[வையே"

பக்கத்திலே காதலி! எதிரே கடல்! யாழை வாசித்துக் கொண்டு. மேலே குறிப்பிட்டுள்ள இசையை இனிமையாகப் பாடுகிறுன். இளமையும் செல்வமும் பொருந்திய கோவலன். மாதவியின் மனம் மகிழப் பாடிஞன்! மாதவியோ, ஆடலிலும் பாடலிலும் தேர்ந்த அணங்கு. கோவலன் வணிகன் ஆயினும், அவன் பாடியது, மாதவியை மகிழ்விக்கும் விதமாக இருந்தது.

நறுமலரே! விரிமணலே! மதிமுகமே! மின்னிடையே என விளித்துக் கோவலன் யாழை இசைத்துக் கானல் வரி பாடுகிறுன். அந்நாட்டினருக்குத்தான் இன்று, "கச்சேரிகளில், கனை கட்டும் பாட்டுக்கள்" இல்லை; தெலுங்குக் கிருதிகள் போய்விட்டால், சங்கீதக் கலையே க்ஷீணமாகி விடும் என்று "மித்திரன்" கூறும் நிலை வந்தது!

"மரகதமணித்தாள் செறிந்த
மணிக்காந்தண் மெல் விரல்கள்
பயிர் வண்டின் கிளைபோலப்
பன்னரம்பின் மிசைப் படர
வார்தல் வடித்தலுந் தலுறழ்தல்
சீருடனுருட்ட றெருட்டலுள்ள
லேருடைம் பட்டடை யென
விசையோர் வகுத்த

*வெட்டுவகையினிசை காரணத்துப்*
*பட்டவகை தன்செவியினோர்த்*
*தேவலன் பின் பாணியாதெனக்*
*கோவலன் கையாழ் நீட்ட*

கோவலன், யாழை மீட்டி இசைபாடி, இன்புற்றான்!

வார்தல் :—சுட்டு விரற் செய் தொழில்.

வடித்தல் :—சுட்டு விரலும் பெரு விரலுங் கூட்டி நரம்பை அகமும் புறமும் ஆராய்தல்.

உந்தல்:—நரம்புகளை உந்தி, வலிவிற் பட்டதும், மெலிவிற் பட்டதும், நிரல் பட்டதும், நிரவிழிப்பட்டதும் என்றறிதல்.

உறழ்தல்;—ஒன்றிடை யிட்டும், இரண்டிடை யிட்டும் ஆராய்தல்.

என்று, மேற்படி செய்யுளில் வரும் பதங்கட்கு, அடியார்க்கு நல்லார் தரும் பொருளைப் படித்துவிட்டுப் பிறகு, தமிழின் இசை உள்ளமும், இசை வளமும் எங்ஙனம் இருந்தது என்பதை ஆரியத் தோழர்கள் அறியட்டும்.

இசைக் குழல்கள் எண்ணற்றன இருந்த இடம் இது! இங்கு இசை பயின்று, இசை நுணுக்க முணர்ந்து, ஏழிசையைப் பாடி வாழ்ந்தவரே தமிழர்,

சிறு வயது முதலே, இசையே தமிழரின் தோழன்.

ஊசல் வரி, கந்துவரி, ஆற்றுவரி, கானல் வரி முதலியன இன்று தமிழருக்கு வெறும் சொற்றொடர்கள்; முன்னாளில், அவைகள் இனிய இசைகள் !

இசை என்னும் சொல்லுக்கே, வயப்படுத்துவது, இசைவிப்பது என்பது பொருள். இதனைத்தமிழர் நன்

குணர்ந்து, பயன்படுத்தி வந்தனர். மகிழ்ந்தனர்; மகிழ்வித்தனர்.

தினைப் புனத்திலிருந்து ஓர் தீஞ்சுவை மொழியாள் தத்தை எனப் படுவாள்! இசை மொழிவாள். அந்த இசை கேட்ட பறவைகள் இசைக்கு வயமாகி மயங்குமாம்!

மலையோரத்தில், குறிஞ்சி பாடக் கேட்ட களிறு உறங்குமாம்! இனிய இசையில் மயங்கி "அசுணமா" எனும் இசையறி பறவை, எதிரில் தன்னை மறந்து நின்று, பிடிபடுமாம்; ஆனினங்கள் அடங்குமாம்; மதங்கொண்ட யானையும் இசைக்கு அடங்கும் என்று கலித்தொகை கூறுகிறது. அதுமட்டுமா?

*"ஆறலை கள்வர் படைவிட அருளின்*
*மாறுதலை பெயர்க்கும் மருவின் பாலை"*

அதாவது, கள்வரும், இசை கேட்டுக், கொடுந் தொழில் மறந்து நின்றனராம்!

தோற் கருவி, துளைக் கருவி, நரம்புக் கருவிகள் என இசைக் கருவிகள் எண்ணற்றன இருந்தன.

தோற்கருவிகளில் மட்டும், பேரிகை, படகம், இடக்கை, உடுக்கை, மத்தளம், சல்லிகை, காடிகை முதலிய முப்பதுக்கு மேற்பட்டு இருந்தன.

இசைக் கருவிகளுக்கு இயம் என்றோர் பெயருண்டு. பலவகை இசைக் கருவிகளையும், வாசிக்கத் தெரிந்த காரணம் பற்றி, ஒரு புலவருக்கு நெடும் பல்லியத்தனார் என்ற பெயரும் இருந்தது!

பாடுவோர் பாணர் என்ற தனிக் கூட்டமாகவும் இருந்து. தமது முதுகுகளில், வகை வகையான இசைக்

கருவிகளை ஏற்றிக் கொண்டு, பல நாடு சென்று, பாடி மகிழ்வித்துப், பரிசு பெற்று வாழ்ந்தனர்.

இன்னின்ன காலத்துக்கு இன்னின்ன இன்னிசை பாடுதல் பொருத்த மென்றறிந்து பாடி வந்தனர். காலையில் மருதப் பண்ணும் மாலையில் செவ்வழிப்பண்ணும் படுவாராம்!

இசைத் தமிழின் இலட்சண விளக்கமாகச், சிகண்டியார் என்பவர் இசை நுணுக்கம் என்ற நூலையும், நாடகத் தமிழுக்குச் செயிற்றியம் என்ற நூலைச் செயிற்றியனார் என்பவரும் இயற்றினர்.

ஷட்ஜமம், ரிஷபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம் என்ற வடமொழிப் பெயர்களுடன் உள்ள சுரம் ஏழும், ஏழிசை என்ற பொதுப் பெயருடன் முறையே குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்ற தமிழ்ப் பெயருடன் முன்னம் விளங்கின.

தமிழர் ஒரு சுரத்தைப் பதினாறு ஆகப் பகுத்துணரும் பக்குவமும் பெற்றிருந்தனர்.

ராகம் என்று கூறப்படுவது, தமிழரால் பண் என்று குறிக்கப்பட்டு வந்தது.

ராக லட்சணங்கள் பொருந்திய தமிழ்ப்பாடல் இல்லையென்று கூறுவோருக்குக் கூறுகிறோம். தமிழரின் பண்கள் எண்ணற்று இருந்தன. வடமொழியில் கர கரப் பிரியா எனக் குறிப்பிடப்படுவதே படுமலைப் பாலைப் பண் என்றும்; கல்யாணி எனும் ராகம், அரும் பாலைப் பண் என்றும் முன்னாளில் குறிப்பிடப்பட்டது. அரிகாம் போதிக்குத் தமிழர் அளித்த பெயர், கோடிப் பாலைப் பண்; பைரவிக்கு விளரிப் பாலைப்பண்; தோடிக்குச் செவ் வழிப் பாலைப்பண் என இங்ஙனம் ராக லட்சணங்கள் எவ்வளவோ தமிழில் இருந்தன; மறைந்தன! ஆரியத்தால் மங்கின; அழிந்தனவும் உண்டு.

ஆலாபனம் என்ற இசை நுணுக்கத்தைத் தமிழர் ஆலத்தி என்று அழைத்து வந்தனர். ஆரோகணம், அவரோகணம், கமகம், என்பன முறையே; ஏற்றம், இறக்கம், அலுக்கு என்ற பெயருடன் விளங்கின. தமிழர் அவைகளில் தேர்ச்சி பெற்று, தேன் தமிழை உண்டு வாழ்ந்து வந்தனர். இன்று, இரவல் இசை பெறும் நிலையில் உள்ளனர்.

எந்தப் பார்ப்பனர், மனு, 4-ம் அத்தியாயம், 15-ம் விதிப்படி இசை பயின்று, பொருள் ஈட்டக்கூடாது என்று தடுக்கப்பட்டு இருந்தனரோ, அதே ஆரியர்களின் சொத்தாக இசை இன்று கருதப்பட்டு வரும் நிலைமை ஏற்பட்டது.

அரியக்குடியார் அலறுகிறார்; பாபநாசம் சிவன் பதறுகிறார்; மருங்காபுரியார் மனவேதனைப்படுகிறார் என்று 'இந்துவும்' 'மித்திரனும்' முகாரி பாடியபடி உள்ளன. தமிழரின் அடாணா வெளிப்படும்வரை, இசைபற்றி இவர்கள் இறைச்சலிட்டபடிதான் இருப்பர்.

பாவ, ராக, தாளம் எனும் மூன்றும் இழைந்திருக்க வேண்டும் இசையிலே என்பர்: இசை நூல் வல்லோர் பாவம் விளக்கமாக இருக்க, அவரவருக்குப் புரியும் மொழியில் பாடல்கள் இருந்தாக வேண்டும். தமிழருக்குத் தமிழ் மொழியில் பாடல் இருந்தால் தான் புரியும்; சுவைக்க முடியும்; எனவே, தமிழ் நாட்டிலே தமிழ் இசைதான் முக்கியமாகத் தேவை.

தமிழரின் இசைப்பற்று, தியாகய்யர் காலத்துக்குப் பலப்பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே இருந்தது. தெலுங்குக் கீர்த்தனங்கள் தோன்ற முன்னம்' ராமகதையையோ, கிருஷ்ண கோலாகலத்தையோ, கீர்த்தனங்களாக அமைக்கு முன்னம், தமிழரின் இசை, இறைவன், இயற்கை இன்பம் எனும் மூன்று துறைகளை உள்ளடக்கியதாக, உணர்ச்சியும் உற்சாகமும் தரத்தக்கதாக இருந்

தது; இசைக்கருவிகள் எண்ணற்று இருந்தன. இசை நூற்களும் உண்டு, இசைக் கடலில் நீந்தி விளையாடி மகிழ்ந்தனர் மக்கள். ஆணும் பெண்ணும் பாடுவர், ஆடுவர். அரசனும், மக்களும், இசை பயின்றனர், இன்புற்றிருந்தனர்.

கடலைக் கண்டால் ஓர் பாடல்; கரியைக் கண்டால் ஓர் பாடல்; தளிரைக் கண்டு ஓர் பாடல்; தனது காதலியைக் கண்டு ஓர் பாடல் எனத், தமிழர், தமது இன்ப உணர்ச்சியை, இசை வடிவில் எத்துணையோ சிறப்புடன் வெளிப்படுத்தி வாழ்ந்தனர். இன்று தியாகராயர் கிருதிகளை விட வேறு இல்லை என்று, அவர்கள் முன்னால் கூறப் படுகிறது.

இசைச் செல்வத்தை இவ்வளவு பெற்று முன்னம் வாழ்ந்த தமிழர், இன்று கேட்பது, தமிழ் நாட்டிலே தமிழ்ப் பாடல்கள் அதிகமாக இருக்கவேண்டும் என்பதாகும். இந்த முயற்சியில் தமிழர் வெற்றி பெற்றால், இழந்த தமிழ் இசையை மீண்டும் பெற முடியும். ஆரியம் தமிழரின் எல்லா வகையான செல்வங்களையும் கொள்ளை கொண்டதுபோலவே, இசைச் செல்வத்தையும் கொள்ளை கொண்டது. இதனை அறிய, தமிழர் தொன்மை பற்றி ஆசிரியர் சுந்தரம் பிள்ளை எழுதிய அரிய நூலையும், மற்றையோரின் ஆராய்ச்சி நூற்களையும், தமிழர் படிக்க வேண்டுகிறோம். தமிழரின் மொழிவளம், ஆட்சிவளம், முதலிய துறைகள் பற்றிய அரிய ஆராய்ச்சிகளிலே உண்மைகள் மிளிரும். தோழர் தேவநேயப் பாவணர் எழுதிய ஒப்பியல் மொழி நூலில் உள்ளவைகளைத் தமிழர் கற்றுணர வேண்டும்.

தமிழ் இசை மறைந்து, வேற்று மொழியில் பாடல்கள் பரவியதனால், நாம் இன்பத்தை மட்டுமே இழக்கவில்லை. இயற்கையின் அழகை உணரும் அறிவையும் பகுத்தறிவுத் திறனையும் இழந்தோம். புதுப்பாடல்கள்

புதுக் கருத்துக்கள் கொண்டதாக இருக்கவேண்டும். வெறும் பக்திரசம் ஊட்டக்கூடியதாக இருந்தால் போதாது. பக்திரசம் தமிழ் இசையில் இன்றும் உண்டு. ஆனால், ஆரியருக்கு அது பிடிக்காது. திருத்தாண்டவம் பிள்ளைத் தமிழ் போன்றவைகளைத் தோழர் சுந்தரமூர்த்தி ஓதுவார் எத்துணை இன்பரசத்துடன் பாடினார். தியாகய்ய ரின் ராமரசத்தை, அருணாசலக் கவிராயரின் தமிழ்க் கீர்த்தனங்களில் காண ஆரியர் மறுத்தனர். கோபால கிருஷ்ண பாரதியின் நந்தன் பாடல்களும், சித்தர்களின் பாடல்களும், சுப்பராமரின் தமிழ்ப் பதங்களும் ஆரியருக் குப் பிடிக்கவில்லை. ஆகவே தான், தமிழிலே பாடல்கள் ஏது என்று கேட்கின்றனர். தோழர் மாரியப்பசாமி எனும் இசைச் செல்வர், தியாகய்யர் கீர்த்தனை மெட்டு களிலேயே, செந்தமிழில் கிருதிகள் அமைத்து. இனிய முறையில் பாடுகிறார்! ஆரியருக்கு அது பிடிக்காது. அவர் கள் அசல் ஆரிய ரசமே தேடுவர். பக்தி என்ற ரசத்தை யும் ஆரியத்தோடு கலந்து பருகுவரே யன்றித், தமிழோடு கலந்து பருகச் சம்மதியார். காரணம், தமிழர் என்றால் அவர்களுக்கு வேம்பு! அதற்குக் காரணம், அந்த ஒரே மொழிதான் பரந்த இந்தியாவில் ஆரியப் படையெடுப்பை தாக்குதலைப், பொருட்படுத்தாமல், பணியாமல் சீரிளமைத் திறனோடு விளங்குகிறது. அத்தகைய தமிழ், இசையில் மீண்டும் ஆதிக்கம் பெறுமானால், தமது கதி என்னுகுமோ என்று ஆரியர் பயப்படுகின்றனர்! தமிழில் இசை வளரக் கூடாதெனத் தடுக்கின்றனர், தமிழனுக்குத் தமிழ் இசை யைப் பெற உரிமை உண்டு! அதைத் தடுக்க ஆரியருக்கு உரிமை இல்லை! ஆயினும் ஆரியர் தடுக்கின்றனர்! தமிழரே, உமது கருத்து என்ன? என்ன செய்யப்போகி றீர் என்று தமிழரைக் கேட்கிறோம்.

"நாம் பெருங்கூட்டம்! அஃதோர் சிறு கும்பல்" என்ற இனிமை ததும்பும் கருத்தை, இளமையின் முறுக் குடன் கலந்து கவியாக உலகினோர்க்குக் கூறினார் ஷெல்லி

(Shelly) என்பார். கவியின் கருத்தை வெறும் எழுத்துக் கோவையாகக் கொண்டு நோக்குதல் கூடாது; பலன் தாராது.

ஆயிரம் காக்கைக்கு ஓர் கல் போதும்! மான் மந்தையைச் சிறு ஓநாய்க் கூட்டம் விரட்டியடிக்கும். பாம்பு, படையைக் கலக்கும். ஷெல்லி கூறிய கருத்து இங்குப் பயன் தாராது. கட்டுப்பாடும், உறுதியும், உணர்ச்சியும் கொண்டதாக ஒரு பெருங்கூட்டம் இருப்பின், அதனை ஒரு சிறு கூட்டம் எதிர்த்துப் பயன் இல்லை என்பதே, கவியின் கருத்து.

எண்ணிக்கையைவிட இங்கு இயல்பே முக்கியமாகக் கவனிக்கப்படுதல் வேண்டும்.

தமிழ் இசை இயக்கத்தைப் பெருங் கூட்டம் ஆதரிக்கிறது. சிறிய கும்பலொன்று எதிர்க்கிறது. எதிர்க்கிறது என்றுரைப்பதைவிட எதிர்த்தது என்றுரைத்தால் பொருந்தும் என எண்ணுகிறோம். பல்வேறு கட்சிப் பற்றுடையவர்களும், தமிழினால் ஒன்றாக்கப்பட்டு, ஒரு மனமாகி, ஒத்த கருத்தை வெளியிட்டதைக் கேட்ட பிறகும், தமிழ் இசை இயக்கத்துக்கு இவ்வளவு ஆதரவு இருப்பினும், நாங்கள் எதிர்த்தே தீருவோம் என்று கூறும் அளவுக்கு, அந்தச் சிறு கும்பல், அறிவை இழந்து விட்டிருக்கும் என்று நாம் நம்ப மறுக்கிறோம். அவர்கள் நிச்சயமாக உணர்ந்திருப்பார்கள் தமிழ் இசையைத் தமிழர் ஆதரிக்கின்றனர் என்பதை, எனவே, எதிர்த்துப் பயனில்லை என்று தீர்மானித்து விட்டிருப்பர்.

''தமிழ்ப் பாடல்களைச் சில்லறை உருப்படிகள் என்று கூறுகிறார்களே, அந்தக் கெட்டவழக்கத்தை விட்டுவிட வேண்டும் என்று தோழர் *தியாகராஜ பாகவதர்* கூறினபோதும், திருவாவடுதுறை *ராஜரத்தினம் அவர்கள்*, தமிழ்ப் பாடல்கள் பாடப்படாத கச்சேரிகளுக்குப் போகாதீர்கள்; தமிழ்ப் பாடல்களைப் பாடாத வித்வான்

களை அழையாதீர்கள் என்று கூறியபோதும், என் கீர்த்திக்குக் காரணமே தமிழ்தான் என்று தோழர் *தண்டபாணி தேசிகர்* அகங்குளிரக் கூறியபோதும், எந்தக் கூட்டத்தார் எந்த வகுப்பார், எந்தப் பத்திரிகைக்காரர் எதிர்த்த போதிலும், தமிழர் அஞ்சத் தேவையில்லை என்று *குமாரராஜா சர். முத்தையச் செட்டியார்* அவர்கள் கூறியபோதும், மண்டபத்தின் உள்ளேயும், வெளியேயும் கூடியிருந்த மக்கள் தமது மகிழ்ச்சியைத் தெரிவித்ததைக் கண்டோர் அறிவர். தமிழரிடை பிறந்துள்ள புத்துணர்ச்சியை! தமிழிலே சாஹித்யம் உண்டா? உண்டு என்றனர் சொற்பொழிவாளர்கள். பாடிப் பாடிக் காட்டினர் இசைச் செல்வர்கள். கேட்டுக் களித்தனர் மக்கள். கேட்டது போதாதென மேலும் மேலும் தமிழ்ப் பாடல்கள் பாடும்படி கேட்டனர். அது போதும்; தமிழ் இசையை எதிர்க்கும் பேர்வழிகளின் கண்களைத் திறக்க! கருத்தைத் துலக்க!

இந்தப் பிரச்சினை, தனிப்பட்டதென்றோ, திடீரெனத் தோன்றியதென்றோ நாம் கருதவில்லை. இசை விஷயமாக எழுப்பிய இந்தக் கிளர்ச்சி, ஒரு மாபெருங் கிளர்ச்சியின் சிறு பகுதி; தமிழகத்திலே எழும்பியுள்ள மறு மலர்ச்சியில் ஒரு பாகம். இதனை எதிர்ப்போரின் செயலும், மறுமலர்ச்சியைக் கண்டு மனந்தாளாது எதிர்ந்தொழிக்க எண்ணும் கூட்டத்தின் கொடுமை மிக்க செயல்களில் ஒன்று என்றே நாம் கருதுகிறோம். எனவே, இந்தச் சமயத்தில் தமிழர் பொதுவாக உள்ள பெரியப் பிரச்சினையைச் சற்றுக் கூர்ந்து கவனிக்க வேண்டுகிறோம்.

இன்று, தமிழருக்கு எழுச்சி, இசை விஷயமாக மட்டும் வந்தில்லை! எதிர்ப்பும் அந்தத் துறையில் மட்டும் ஏற்படவில்லை!

மொழியிலே கலப்புவேண்டாம் என்றோர் *எழுச்சி.*

இனத்திலே பற்றிருக்க வேண்டும் என்பதற்கோர் *எழுச்சி.*

நாட்டிலே, யாவரும் ஒன்றெனும் எண்ணந் தோன்ற வேண்டும் என்பதற்கோர் *எழுச்சி.*

நாட்டு எல்லை குறிக்கப்பட வேண்டும் என்றோர் *கிளர்ச்சி,*

நாட்டின் செல்வம் நாட்டினருக்குப் பயன்பட வேண்டும் என்று கூறுவது மற்றோர் *கிளர்ச்சி.*

நாட்டுக்கு, நாட்டினருக்கேற்ற சட்ட திட்டங்கள் அடையவேண்டும் என்று வலியுறுத்த ஓர் *கிளர்ச்சி:*

இன்னோரன்ன பிற கிளர்ச்சிகள், பல சிற்றருவிகள் கூடி ஆறு ஆவதுபோல், தமிழர் மறுமலர்ச்சியும் பெரியதோர் இயக்க மாதலே, கூர்ந்து நோக்குவோர் காணக் கூடும். தமிழர் அதனைக் கூர்ந்து நோக்கவில்லை. ஆனால் எதிர்ப்பாளர்கள் கூர்ந்து நோக்கிப் பார்த்துத்தான் ஒவ்வொரு கிளர்ச்சிக்கும் எதிர்ப்பை உண்டாக்கிப் பார்க்கின்றனர்.

அது ஒரு சிறு கும்பல்! ஆம்! மிகச் சிறு கும்பல்! ஆனால், சப்மெரைன்போல் மறைந்திருந்து தாக்கும் இயல்பு; விஷவாயுபோல், பரவினதும் மாய்க்கும் கொடிய சக்தி; வெடிகுண்டுபோல், வீசப்பட்டதும் அரண்களைப் பிளந்தெரியும் வலிமை பெற்றது. இல்லையேல், சிறு கும்பல், பெரியதோர் கூட்டத்தை எங்ஙனம் எதிர்க்கத் துணியும்!

* * *

விக்டோரியா மண்டபக் கூட்டத்திலே தோழர் டி. எஸ். சொக்கலிங்கம், தமிழை எதிர்க்கும் சிறு கூட்

டத்தை, ஜார் காலத்தில் இருந்த ரஷிய சீமான்கள் கூட்டத்திற்கு ஒப்பானது என்றுரைத்து, அந்தச் சரிதம் மீண்டும் நடைபெறும் என்று எச்சரித்தார் !

அந்தச் சிறு கும்பலின் சக்தி அவருக்குத் தெரியக் காரணமிருக்கிறது.

அந்தச் சிறு கும்பல், பெரும்பாலானவரை ஆட்டிப் படைக்கும் சூழ்ச்சிப்பற்றி அவர் அறிந்துகொள்ளாதிருக்க முடியாது; அவர் அதுபற்றி வெளியே பேசாதிருக்கிறார். ஆனால் இன்று இசை, அவருடைய உள்ளத்திலே சென்று உண்மையை இழுத்து, வெளியே எறிந்தது என்றே நாம் நம்புகிறோம்.

" ரஷிய மொழி, ஏழை எளியவர் மொழி ; பிரெஞ்சு மொழி கனவான்கள் பேசும் மொழி ; ஆகவே, நாங்கள் பிரெஞ்சு மொழி பேசுகிறோம் என்று உரைத்த ரஷிய சீமான் கும்பல்போல், இங்கு ஒரு சிறிய கூட்டத்துக்குத் தமிழ்மொழியிடம் துவேஷ மிருக்கிறது. இதுவரை, அவர்கள் பெரும்பாலோரை அடக்கி ஒடுக்கி வாழ்ந்தார்களே, அதையே தான் இம் மனப்பான்மையும் காட்டுகிறது " என்று தோழர் சொக்கலிங்கம் கூறினார். உண்மை ! ரஷிய சீமான்கள் பிரெஞ்சு மொழியைக் "கனவான்கள்" மொழி என்று கூறினதுபோல், இங்கு ஒரு சிறு கூட்டம், சமஸ்கிருதத்தைத் "தேவபாஷை" என்று கூறிக்கொண்டிருக்கிறது. பெரும்பாலானவர்களை அடக்கி ஒடுக்கி ஆட்சி புரிகிறது. ஜார் காலத்துச் சீமான்கள் மன்னனும் மத குருமார்களும் வாழ்க! மற்றையோர் மாளினும் மாள்க! என்றுரைத்தது போலவே, மனுவும் ! மாந்தாதாவும் அருளியது, பூதேவர்களிடம் மற்றையோர் மண்டியிட்டே கிடத்தல் முறையென்று கூறுகிறது. ரஷிய சீமானாவது, ரஷிய உழவனோ, பாட்டாளியோ தொட்டால் தீட்டு எனக் கருதினானில்லை. இங்குள்ள சிறு கூட்டம் பெரும்பாலான

மக்கள் தொட்டால் தீட்டு என்று கூறுகிறது. அவர்களுடன் ஒன்ருக இருந்து உண்ண மறுக்கிறது: தொழ மறுக்கிறது. ரஷிய சீமானுக்காவது ஆயுதங்கள் இருந்தன! இங்கே உள்ள சிறு கும்பலுக்கு அதுவுமில்லை. ரஷிய சீமானுவது ஆயிரம் வேலி நிலமுடையோன் : ஆபரணப் பேழை யுடையோன் ; ஆயுதந் தாங்கிய ஏவல ருடையோன் என்று கூறலாம். இங்குள்ள சிறு கும்பலுக்கு அவைகளுமில்லை ; எனினும் ரஷிய சீமான்கள் ஆட்டி வைத்ததைவிட, இங்குள்ள சிறு கும்பல் பெரும்பாலான கூட்டத்தை ஆட்டி வைக்கிறது.

"அந்த ரஷிய ஜார் கூட்டம் அழிந்ததே, அதே கதியைத் தான் இந்த அந்தஸ்துக் கூட்டமும் அடையும்" என்று தோழர் ***சொக்கலிங்கம்*** கூறினுர். கேட்ட தமிழர் களித்தனர்.

அத் தன்மை படைத்த சிறு கும்பலின் கொட்டத்தை அடக்க வேண்டும் என்பதுபற்றி, எக்கட்சியைச் சார்ந்த தமிழருக்குள்ளும் கருத்து வேற்றுமை இல்லை என்பது, அந்தக் கூட்டத்திற்குத் தெரியும்படி தமிழர்கள் நடந்து கொள்ள வேண்டும், தமிழ் மொழிக்கும் கலைக்கும் ஊறு நேராதபடி பாதுகாக்கத் தமிழர் திரண்டு விடுவதுபோலவே தமிழரின் தன் மானம் பறிக்கப்படும்போது தமிழர்கள் எந்தக் கட்சியினிடம் இருப்பினும், தமிழர் அணிவகுப்பில் வந்து சேர வேண்டும். தமிழரைச் சமமாக நடத்த மறுக்கும் சிறு கூட்டத்தை எதிர்க்க ஒன்று சேரவேண்டும். தமிழ் நாட்டைப் பிற நாட்டாரோ, பிற இனத்தாரோ பங்கப்படுத்த வளங்குன்றச் செய்யச், செல்வத்தைச் சுரண்ட, முற்படும் வேலைகளில் தமிழர்கள் ஒன்ருகத் திரண்டெழ வேண்டும், தமிழரின் மறு மலர்ச்சிக்கு இந்த எண்ணமே உறுதுணை. இந்த எண்ணத்துடன் தமிழர் பணியாற்றுவரேல், தமிழர் முன்னேறி விடுவர் என்பது திண்ணம்.

இன்றுள்ள நிலைமை அங்ஙனமில்லை. தமிழ் நாட்டிலே தமிழன் தாழ்ந்த ஜாதி என்று, தமிழன் படிக்கும் சாஸ்திர இதிகாச, புராணங்கள் கூறுகின்றன. தமிழனின் பணத்தால் நடைபெறும் நீதிமன்றங்களில் அதற்கேற்பவே தீர்ப்புகள் தரப்படுகின்றன.

தமிழனுக்குத் தமிழ் நாட்டிலே தமிழரின் பணத்தால் கட்டி, தமிழரின் பணத்தால் பராமரிக்கப்படும் கோயில் களிலே தமிழருக்குச் சம உரிமை இல்லை ; உண்டிச் சாலை களிலேயும் இல்லை.

தமிழ் நாட்டிலே, தமிழனுடைய மொழியிலே தகாத மொழிகள் கள்ளிப்போல் படர்ந்துவிட்டனர்.

தமிழ் நாட்டிலே தமிழனுக்கு வேலை கிடைப்பதில்லை; மோரிசுக்கும், ஜான்சியாருக்கும், நெட்டாலுக்கும், மலே யாவுக்கும், பர்மாவுக்கும், இலங்கைக்கும் சென்று உழைத்து உருமாறிச் சிதைகிறான். வியாபாரம் தமிழ னிடம் இல்லை,

கலை, தமிழனுடையதாக இல்லை. தமிழனுக்கு இழி வைத் தரும் கற்பனைகளும், அடக்கு முறைச் சட்டங்கள் கொண்ட ஆபாசங்களுமே கலையாகத் தரப்பட்டுள்ளன.


இங்ஙனம், மொழி கலை, சமுதாயம், பொருளியல் முதலிய எல்லாத் துறைகளிலும், தமிழன் இழிவுபடுத்தப் பட்டு வருவதன் காரணம், 'சிறு கும்பலொன்று' ஆதிக்கம் செலுத்தி வருவதனால்தான்.

'எல்லோரும் ஒன்றென்னும் காலம் வந்ததே' என்று பாரதியார் பாடிய பிற்பாடுகூட, காலமாறுதலை அறியாமல் இவர்கள் நடப்பது வெறும் அறிவீனம். ஒரு சிலர் சேர்ந்து கொண்டு தங்கள் சுயநலத்திற்காக மெஜாரியாரை அடக்கி

ஆளும் காலம் கவிழ்ந்து விட்டது' என்று தினமணி 1941 செப்டம்பர் 16-ந் தேதி இதழில் கூறியிருக்கிறது.

கவிழ்ந்துவிட்டதா ? உண்மையாகவா ? இல்லை ! கவிழ்ந்து விட்டிருக்குமேயானால், *நாம் பள்ளுப் பாடுவோம்!* இன்னமும் கவிழவில்லை. ஆனால் கவிழ்வது மட்டும் உறுதி.

'பார்ப்பானை ஐயனென்ற காலமும் போச்சே; வெள்ளைப் பரங்கியைத் துரையென்ற காலமும் போச்சே' என்றார் பாரதியார். ஆனால் நடக்கும் நிகழ்ச்சிகள், போச்சே என்பதற்குப் பதிலாகப், போச்சே என்று கேட்க வேண்டிய நிலைமையில் இருக்கிறது. இன்னும் சிறு கும்பல் சீறுகிறது! ஆதிக்கம் செலுத்துகிறது! தமிழரை எதிர்க்கிறது! தமிழரின் மறுமலர்ச்சியை அழிக்கக் கருதுகிறது. ஆம்! ஜார் அடைந்த கதியை அடைந்தும், அந்தச் சிறு கூட்டம் தனது ஆணவத்தை அடக்கிக் கொள்ளத்தான் இல்லை. அதனை அடக்கத் *தமிழர் எழுச்சி பெற வேண்டும்.*



# ருக்மணி கல்யாணம்

அதோ! உயர்ந்த உருவம், நீண்ட மீசையும்கொண்டு மிடுக்கான தோற்றத்துடன் வரும் போலீஸ் பொன்னு சாமியை, அறியாதார், இரார்.

போக்கிரி! சாக்கிரி! கொலைகாரன், கொள்ளையடித் தவன்! எல்லாம் அவருக்குத், துரும்புபோல. விடமாட் டார்! திறமையைப் பாராட்டி 'மெடல்'கள்கூட அளிக்கப் பட்டிருப்பவர்!!

அவருக்குச் சட்டம் என்றால் சட்டம்தான்.—அவ் வளவு கடமையுள்ளம் கொண்ட நல்லவர். யாருக்கும் பணியமாட்டார். இலஞ்சம், ஊழல், இதெல்லாம் அவருக்கு வேம்பு. அப்படி வாங்குவதால், அரசாங்கம் தண்டிக்கும் என்கிற பயத்தைவிட, நாளையதினம் இறந்த பிறகு நடக்குமே 'எமதர்மனின் விசாரணை' அதற்காக மிகவும் அஞ்சுபவர்! நெற்றியில் பளபளவென்று மின்னும் நாமமே சொல்லும். அவர் எவ்வளவு பக்திமான் என் பதை!! "யாராயிருந்தா, நமக்கென்ன சார்? டேட்டின்னா டேட்டிதான்! பணக்காரனாயிருந்தா அவன் வீட்டிலே, பலே கில்லாடின்னா, இரண்டு குத்திலே அலறனும்," என்று துணிச்சலோடு சொல்வார். ஆனால், கோயில் குருக்களைக் காணும்போது, போலீஸ் தொப்பியை கழட்டி விட்டு, அவர் கும்பிடத் தவறமாட்டார்! டி. எஸ். பியை விட, அய்யருக்கு போலீஸ் பொன்னுசாமியிடமிருந்து

அதிக மரியாதை கிடைக்கும்!! அவ்வளவு, சனுதன நம்பிக்கையுள்ளவர்.

அவருக்கு இப்போது, ஒரு சிக்கல்! பக்கத்து கிராமத்துக்கு. ஒரு கேசைப் பிடிக்கப் போகவேண்டும்—கொலைக்கேஸ் அல்ல! கலியாணக் கேஸ்!! ஆமாம் முதல்தாரம் இருக்கும்போது, இரண்டாம்தாரம் செய்து கொள்ள ஒருவர் முனைவதாகப் போலீஸ் இலாகாவுக்குத் தகவல் எட்டியிருக்கிறது. சட்டம் என்றுல் சட்டம் தானே, அவருக்கு. அதனுல் புறப்படப்போகிருர், கிராமத்துக்கு. சப்–இன்ஸ்பெக்டர், சம்பத்து ஒரு தினுசான ஆசாமி! அவருக்கு, பொன்னுசாமியைப்பற்றி, அதிகம் தெரியும்!! கொஞ்சம், குறும்பு சுபாவம் உள்ளவர்.

அதனுல் பொன்னுசாமி 'ஸ்டேஷனிலிருந்து' விடை பெற்றுக்கொண்டு வீட்டுக்குப் போகும்போது கூப்பிட்டார் அவரை.

"பொன்னுச்சாமி!"

"சார்...!"

"உனக்கு என்ன 'டூட்டி' ஞாபகம் இருக்கிறதா?"

"கிராமத்துக்குப் போய் இரண்டாம்தாரக் கலியாணத்தைத் தடுத்து அந்த ஆளை 'அரஸ்ட்' செய்து கொண்டு வரவேண்டிய டூட்டி சார்...!"

"ஊம்! உம்முடைய பத்து வருஷத்து சர்வீசிலே சட்டத்தை மீறிய யாரையும் நீர் பிடிக்காமல் விட்டதுண்டா?"

"கிடையாது சார்! இவருக்குச் சட்டம்ஞ சட்டம் தாங்க!"

"அதை மீறுகிற யாரையும் விடமாட்டீரே?"

" அண்ணன் தம்பின்னுகூட விடமாட்டேங்க — முதலிலே கையில் விலங்கைப் பூட்டிடுவேன் "....

" ரொம்ப சரி! ஒரு பெண்டாட்டி இருக்கும்போது, இன்னொரு பெண்டாட்டியைக் கட்டிக்கிறது தப்பு தானே ? "

" சட்டப்படி, தப்பு சார்—தப்பு "

" சரி, இது என்ன ? பாரும் "

பார்த்தார், பொன்னுசாமி ஏன் விழிக்கிறார் அப்படி ? ஏன் அவர் முகம் ஒரு தினுசாகப் போய்க்கொண்டிருக் கிறது ? முகத்திலே ஏன் அவ்வளவு வியர்வை ? அப்பப்ப, மிகவும் சோகத்துடனல்லவா காணப்படுகிறார் !

விஷயம் இதுதான் ! பெரிய தெரு பீமராயர் வீட்டில் நாளைக்கு ருக்மணி கலியாணமாம் ! விசேஷ போலீஸ் பந்தோபஸ்து வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருந்தார், பீமராயர். ருக்மணி என்பது பீமராயருடைய பெண்ணல்ல: சாட்சாத் எம்பெருமான் கிருஷ்ணபரமாத்மாவினுடைய மனைவி ருக்மணிதான் ! அந்த ருக்மணிக்கு, மீண்டும் கலியாணம்.

நோட்டீசைக் காட்டிக் கேட்கிறார் சப் இன்ஸ் பெக்டர்—'என்ன பொன்னுச்சாமி ! பாமா இருக்கப்ப, இந்தக் கிருஷ்ணன் இன்னொரு பெண்ணைக் கட்டிக்க லாமா ? "

" கிருஷ்ணன்....சாமிங்க "

" சாமி, தப்புதாண்டா செய்யலாமா பொன்னுச்சாமி! சட்டம்னு சட்டம்தானே ?

கேட்கிறார், சப்-இன்ஸ்பெக்டர்! விழிக்கிறார் பொன் னுசாமி. பாவம் என்ன பதில் சொல்லுவார், அவர் ! எந்தச் சாமிதான், ஒரு மனைவியோடு வாழ்வதாக இருக்

கிறது, நமது புராணத்தில்!! ஊம்....'அரெஸ்டு' செய்வ தென்றால், சட்டப்படி போலீஸ் பொன்னுச்சாமி, எந்தக் கடவுளைத்தான் விட்டுவிட முடியும்? சிக்கலான விஷயம் தானே! திகைக்கும் பொன்னுச்சாமியால், என்ன பதில் சொல்லமுடியும்! திகைக்கிறார்.

## இங்கும் — அங்கும்

"சின்னபொண்ணு! எங்கே உன் அப்பன்?"

"அப்பாவை போலீசு கூட்டிகிட்டுப் போச்சு..."

"போலீசா! ஏம்புள்ளே! எதுக்காவ..."

"போருதவேளை பெரியப்பா! வேறே என்ன...... பண்ணையாருக்கு என்னமோ கோவம், அப்பன் தேங்கா யைப் பறிச்சு வித்துப் போட்டாருன்னு போலீசுக்குச் சொல்லிப்புட்டாரு......"

"அன்யாயமாயிருக்கே, புள்ளே! முனியன் அப்படிப் பட்டவனில்லே என்கிறது போலீசுக்கே தெரியுமே"

"தெரிஞ்சி-பண்ணையார் சொல்றப்போ என்ன செய் வாங்க"

"உங்க அண்ணன் எங்கே போயிட்டான்?"

"அதுதான் வக்கில் ஐயரு வூட்டுக்கு ஓடி இருக்கு, போலீசிலே இருந்து அப்பனைக் கொண்டாற."

"உங்க அம்மா...?"

"பொன்னியம்மா கோவுலுக்குப் போயிருக்கு..."

"வேண்டிக்கவா"

"ஆமாம், உக்காரு பெரியப்பா."

"நிக்கவே நேரமில்லே, உக்கார முடியுமாம்மா நம் மாலே. நம்ம வினை அப்படி இருக்குது. போலீசிலே இருந்து உங்க அப்பன் வந்ததும் சொல்லி அனுப்பு, அதுக் குள்ளே நான் தோப்புபக்கம் போயிட்டுவாரேன்"

"தோப்பு பக்கமா என்ன வேலே பெரியப்பா"

"பலாப்பழம் வேணும்னு குருக்கள் ஐயரு ஒத்தைக் காலாலே நிக்கருரு புள்ளே! போயி பறிச்சிகிட்டுவாரேன்"

"பெரியப்பா! ஆகாரம் கொடுக்கட்டுமா ?"

"யாருக்கு—எனக்கா? பைத்யக்காரப்புள்ளெ! எனக்குத்தான் மூணுநாளாக் காச்சலாச்சே..."

"மருந்து..."

"சாவுதான்! வேறே என்ன மருந்து இருக்கு நமக்கு, போ புள்ளே! உள்ளே போ!"

* * *

அவ எங்கடி. அம்சா ?

அம்சாவா! சமூக சேவையிலன்னு இருக்கா, மகாபலிபுரம் போயிருக்கா.

உங்க அண்ணன் எங்கே தொலேஞ்சான் ?

அவனு, கம்யூனிஸ்டு மகாநாடு திண்டுக்கல்லில்; போய் மூணுநாளாறது......

நீ மட்டும்தான் கல்லுப்பிள்ளேயாராக இருக்கேன்னு சொல்லு......

இல்லே மாமா! நான், காலம்பறத்தான் காட்பாடியிலேயிருந்து வந்தேன்.

அங்கே, என்ன வேலே ?

தெரியாதா நோக்கு, நான் 'சிரமதான்' இயக்கத்திலேன்னு இருக்கேன்—அந்த வேலேயாப் போயிருந்தேன்.

அப்பா ?

அவர் மூணுமாசமா, போடியலன்னு இருக்கார்—அடுத்த வெள்ளிக்குத்தான் பட்டாபிஷேகம், பிறகுதான் வருவார்—

பட்டாபிஷேகமா...?

ஆமாம், ராமாயண காலட்சேபம் நடக்கிறதேன்னோ?

சுப்புப்பாட்டி எங்கே, வளவளன்னு பேசிண்டிருக்குமே...?

சுப்புப் பாட்டிக்கு இப்ப ஏகப்பட்ட கிராக்கின்னு வந்திருக்கு. அமெரிக்கமாதர் சங்கத்திலே இருந்து வந்திருக்காளே, அவாளுக்கு, அப்பளம் போடறது எப்படின்னு பாடம் சொல்லித்தருகிறா பாட்டி.

பலே! பலே! நான் வந்தவேளை அப்படி. நேக்கு அவசரமான வேலை... வரட்டுமா...

காப்பி சாப்பிடுங்கோ, மாமா!

போடி போ! எல்லோரும் டீ சாப்பிடுங்கோன்னு பிரசாரம் செய்யற இலாகாவுக்கு நான் ஜெனரல் மானேஜராக நியமிக்கப்பட்டிருக்கேன் தெரியுமோ.

நல்ல சான்சுதான்! அது இருக்கு, அதுக்கும் நீர் காப்பி சாப்பிடறதுக்கும் என்ன சம்பந்தம்.

சரி! உன் கைப்பட்டாலே காபி, தேவாம்ருதமாயிடுமேன்னோ, கொடு......

தத்துப்பித்துன்னு உளறுதீர் மாமா......உட்காரும், இதோ ஐஞ்சு நிமிஷத்திலே காப்பி....போது போகணும்னா, அதோ ரேடியோவைத் திருப்பிண்டு இரும், இதோ வந்துட்டேன்.

